இது, ஸ்ரீ கிருஷ்ணன் விஷயமானதொரு பாடலேயும் இராமன் விஷய மான இரண்டு பாடல்களையுங் கொண்டு உளது. இதன் பின்னர் 62-ஆம் ஏட்டில் அபிராமிதுதிப்பாடல் ஒன்று உளது.

(g) திருப்பெருந்துறைப் பதிகம் (தேவாரம்).
TIRUPPERUNTURAIPPADIKAM (TĒVĀRAM).

Foll. 63—67a.

Same work as that described under No. 1130 of the Descriptive Catalogue of Tamil Manuscripts, Vol. III.

Complete.

(கு - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1130-ஆம் நம்பர் பிரதியில் வந்துள்ளதே. இப்பிரதியில் திருப்பெருந்துறைப்பதிக மாத்திரம் உளது.

(h) பத்திரகிரியார் மெய்ஞ்ஞானப்புலம்பல்.
BHATTIRAGIRIYĀR MEYÑÑĀNAPPULAMBAL.

Foll. 68*a*—69*b*.

Same work as that described under No. 149 (*f*) of the Triennial Catalogue of Tamil Manuscripts, Vol. II.

Incomplete.

(கு - பு.)—

இது மூவருடக் காட்லாக்கு 149 (*f*) நம்பரில் வந்துள்ளதே. இதில் முற்று மில்லை.

(i) அருணாசலப் பாடல்கள்.
ARUṆĀCALAPPĀḌALKAḶ.

Foll. 70—71*b*.

In praise of Śrī Aruṇācalēśar.

Beginning :

சிலைவேளதனைப் பொடிசெய்தவர்
திருமால் மறைக்கரை கண்டவர்
கலைவாணியு மங்குசபாணியுங்
கமலா[லையும்] (லயன்) திருமாலுடன்
நலமாகவே பணிபாதனே.

End :

எண்ணும லெத்தனை குற்றமும்
எனை நீ பொறுத்து எனையாளுவாய்
அண்ணுமலைப் பதியாளனே
அருணசலம் அருணசலம் (ரு)

(கு - பு.)—

இது திருவண்ணுமலைச் சிவபிரான் விஷயமானது. (5) ஐந்து பாடல்களே உள.

(j) பரம ராசிய மாலை.
PARAMARĀSIYAMĀLAI.

Foll. 72*a*—76*a*.

Same work as that described under No. 538 of the Triennial Catalogue of Tamil Manuscripts, Vol. V.

Contains stanzas 1—10 only.

Incomplete.

(கு - பு.)—

இது, மூவருடக் காட்லாக்கு 538-ஆம் நம்பர் பிரதியில் வந்துள்ளதே யாகும். இதில் பத்துப் பாடல்களே யுள.

R. No. 1207.

Palm-leaf. 17¾ × 1¼ inches. Foll. 88. Lines, 6 on a page. Tamil. Much injured. Old.

மதுரை வீரன் கதை (இராமய்யன் அம்மானை).

MADURAIVĪRANKATHAI (IRĀMAYYAN AMMĀNAI).

Same work as that described under No. 2179 of the Descriptive Catalogue of Tamil Manuscripts, Vol. VI.

Incomplete.

Beginning :

மதுரை தன்னில் வீரையன்மேல்
வளம்பெறவே யம்மானை
சதுராக நான் பாடத்,
த[ா]ரணியிற் கருதியிடும்
துங்க வெழுத்தந்தப் பொருள்
சுந்திரப் பேர் செஞ்சடைமேல்
தந்தி முகன் காப்பு. (க)
கங்கை சுத்தி
சதிராகச் சங்கரனு ரீன்றெடுத்த தயாபரமே
அன்னமுதே யங்கயற்கண் புத்திரனே
ஆனை முகன் காப்பு (உ)

(கு - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2179-ஆம் நம்பர் பிரதியிலே 'இராமய்யன் அம்மானை', யென்ற பெயரான் வெளிவந்துள்ள நூலே யாகும். இதனை இப்பெயரானும் வழங்கியுள்ளார்கள். இப்பிரதியில் திருமலைநாயகர் தாம், ஷெ மதுரைவீரன் மானுட வேடம் நீத்துத் தெய்வ வடிவாயிருக்குங்காலையிலே யவர்க்குப் பலி முதலியன இடாததி னுற் துர்ப்பிக்ஷம் நேர்ந்திருப்ப, அதை நீக்கற்கு மீட்டும் அவர் குறையிரந்து பூசையிடும் பகுதி வரையிலும் உளது. ஏடுகள் எல்லாம் சிதைந்து கிடக் கின்றன. மிகப் பிழையுடன் உளது. அப்பிரதியில் காணப்பெறாத இரண்டு விநாயகர் விஷயமான காப்புச்செய்யுட்கள் ஈண்டு காட்டப்பெற்றிருக்கின்றன.

R. No. 1208.

Palm-leaf. 11¼ × 1¾ inches. Foll. 263. Lines, 12 on a page. Tamil. Injured. Old.

இருபு கீதை.

IRUBHUGĪTAI.

This is a rendering in Tamil of a work on the *Advaita Vēdānta*, by Ulakanāthapaṇḍita of Tiruviḍaimarudūr. Printed.

Foll. 1—3 contain an index of the above work.

Complete.

Beginning :

ஆனைமுகன் ஆறுமுகன் அருளாந்தேவி
யனந்தகண மளவற்ற முனிவர் தேவர்
ஏனையுள்ள நல்லன்பரியாவராலும்
எப்பயனும் பெறவேண்டி யிதயததின்கண்
ஊனமற வுபாசிக்கப்பட்டன்னோர்க் கிங்
குவந்த பயனருள் கருணாமூர்த்தியாகி
வானமென வகண்ட சிதாகாசமான
வத்துவதாம் பரசிவனை வணங்கற் செய்வாம் (க)

End :

வேறு.

தேசிகன் றெரிவித்த திறப்படி
தீரமாய் நிதித்தியாசம் புரிநததால்
ஈசனல்லருள் பெற்றவர் முத்தியை
யெய்தலாமென முன்பு விளம்பி மற்
றேசிலா விந்த நூலின் மகத்துவ
மியாவு மோதியி(ற்றை)[த்தை] முடித்திட
லாசிலானந்தத் தாண்டவ மாடுநம்
அம்பிகேசன் அகண்ட சொரூபமே (ருங)

Colophon :

இப்படி மகேதிகாசமான சிவ ரகசியத்தின் ஆறும் அம்சத்தில் உள்ள இருபு கீதையின் நாற்பததினுன்காவது அத்தியாயம் முற்றிற்று. ஆக அத்தியாயம் நாற்பத்து நாலுக்குத் திருவிருத்தம் || கூகஉ௰ரு ||

* * * * * * *

பிரமோதூதஇூ மாசிமீ உ௰கவ சுக்கிரவார[ம்]சுபதினத்தில் சென்னைப்பட்டினம் பாணக்காரத் தெருவு தமிழ்ப் பள்ளிக்கூடம் சுந்தர உபாத்தியாயரால் எழு[தி](தப்பெற்று) நிறைவேறியது.

(கு - பு.)—

இது வேதாந்த நூல்களைச் சார்ந்ததாய் அத்வைத மதத்ததாகும். " இருபு ", என்னும் பெரியாரால் நிதாகர் எனனும் முனிவர்க்கு உபதேசிக்கப்பெற்றது. வடமொழியிலிருந்ததைத் திருவிடைமருதூர் ' உலகநாதகவி ', தமிழின் மொழி பெயர்த்தது. முற்றுமுளது. அச்சிடப்பெற்றிருக்கிறது.

R. No. 1209.

Palm-leaf. 10 × 1 6/16 inches. Foll. 9. Lines, 7 on a page. Tamil. Injured. Old.

நாலாயிர திவ்வியப் பிரபந்தம்.

NĀLĀYIRADIVVIYAPPIRABANDHAM.

Same work as that described under No. 646 of the Descriptive Catalogue of Tamil Manuscripts, Vol. II.

Contains Tiruppallāṇḍu, Tiruppaḷḷiyeḻucci and six stanzas of Tiruppāvai only.

(கு - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 646-ஆம் நம்பர் பிரதியில் வந்துள்ளதே. இப் பிரதியில் திருப்பல்லாண்டும், திருபபள்ளி யெழுச்சியும், திருப்பாவையில் முதல் ஆறுபாடலும் இருக்கின்றன. ஏடுகள் சிதிலமாயுள.

R. No. 1210.

Palm-leaf. 17½ × 1½ inches. Foll. 126. Lines, 8 on a page. Tamil. Injured Old.

நாலாயிர திவ்வியப் பிரபந்தம் (முதலாயிரம்).

NĀLĀYIRADIVVIYAPPIRABANDHAM (MUDALĀYIRAM).

Same work as that described under No. 646 of the Descriptive Catalogue of Tamil Manuscripts, Vol. II.

Wants leaves 103 and 104 in the middle.

Contains Mudalāyiram only.

(கு - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 646-ஆம் நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியிலே முதலாயிரம் மாத்திரம் முற்றும் உளது.

R. No. 1211.

Palm-leaf. 8 2/8 × 1 inch. Foll. 47. Lines, 7 on a page. Tamil. Injured. Old.

பெண் பிள்ளை சாதக பலன்கள் (சோதிட நூல்).

PEṆPIḶḶAIJĀTAKAPALANKAḶ (ŚŌTIḌANŪL).

On Astrology.

Complete.

Beginning :

ஸ்த்ரீ ஜாதகம், பெண் பிள்ளை ஜாதகம்.

ஒன்றது சுத்தமாகச் சுபர் நிற்க ஒன்றேன்போந்து
வெனறிகொள் கேந்திரத்தில் மேவிட விளங்குரூபம்
துன்றிய[பி](ப)லமுந் தீர்க்கமாயுவு முண்டாங்கஞ்சம்
மென்றிடு முத்தாயன்பாலுரைத்தன ரிறைவர்தாமே (க)

* * * * * * *

* * * * * * *

End :

பன்னிரண்டதனில் நற்கோள் நின்றிடப்
பணிந்த சொல்லாய்
மன்னிய சயனமாகுஞ் சுகத்தொடு
வழங்குந் தன்மம்
உன்னிய பாவராகில் வியாதி
துற் செலவுண்டாகும்
என்னவே ஸ்த்ரீகளுக்கு இயம்பினர்
இயல்புள்ளோரே (உயிஉ)

இராசிப்பயன் முற்றிற்று.

* * * * * * *

Beginning :

பெண்பிள்ளை சாதகம்.

திருவணைய மடவாரம் புவியின்மீது
செனித்த பலன் சாதகத்தின் திறமேகூறு
கருவுதய காலை லக்கினஞ் சசி லக்கினமுங்
கண்டு வடிவும் நிறமுங் கருதவேண்டு
மருவிய சத்தம ராசி யாலவ[ள்த](ட)ன்
குணகுணமுந் தெரிந்து வழுத்தவேண்டு
முருவுதய லக்கினத்திந் திருக்கிலமுகுள்ளா
ளோ ரேழிற் சசி யிருக்கப் பர்த்தா வழகுள்ளானே. (க)

End :

கண்ணுறெட்டில் மதியு முறக்
காணுமொரு வணங்கிஷத்தி (அம்சத்தில்)
னண்ணியிருக்க வவ்வீட்டான்
நயந்தேயெட்டிலிருந்ததனுல்
எண்ணு . . . தில் மரணமெனை.
இனி தாங்கன்னி கோலிடப
முன்னிற் சிங்க மீதிலம் மதி
யுற்றலற்ப புத்திரனே.

ஸ்த்ரீஜாதக பலன் முற்றும்.
ஆழ்வாராதிகள் திருவடிகளே சரணம்.

த்ரிம் சா(ம்ச)ம். சூரியாதி நவ கிரகங்கள் எந்த ராசியிலும் வந்த நாள் முதல் அந்த ராசிவிட்டு மறு ராசிக்குப் போகிற வரைக்கும்
* * * * * * * * * *
வியாழன் எட்டு (அ), சனி (ரு), செவ்வாய் (ரு), இந்தப்படித் த்ரிம்சாம்சம்
* * * * * * * * * *

(கு - பு.)—

இவ்விரண்டு பகுதிகளும் ஸ்த்ரீ ஜாதகப் பலன்களை யெல்லாம் எடுத்து உணர்த்துகின்றன. நூலாசிரியர் பெயர் இன்னதென்று தெரியவில்லை. இதில் மற்றுக் ‘ கலியாணப் பொருத்தம் ’, என்ற பெயருடன் சிறிய பகுதி யொன்றுளது.

R. No. 1212.

Paper. 10¾ × 9¾ inches. Foll. 218. Lines, 20 on a page. Tamil and Grantha. Condition good. Not printed.

Restored in 1938–39 from a manuscript in the Library.

ஹஸ்திகிரி மாஹாத்மியம் (தமிழுரையுடன்).
HASTIGIRIMĀHĀTMIYAM (WITH A TAMIL COMMENTARY).

Complete.

Same work as that described under No. D. 2601 of the Sanskrit Catalogue.

(கு.-பு.)—

இந்நூல் ஸம்ஸ்கிருத டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2601-ஆம் நம்பரில் வந்துள்ளதைப் பெயர்த்து எழுதி வைக்கப் பெற்றதாகும். இவ்வுரை இன்னும் அச்சிடப்பெறவில்லை.

R. No. 1213.

Paper. 10⅞ × 9⅞ inches. Foll. 108. Lines, 20 on a page. Tamil. Condition, good. New. Not Printed.

Restored in 1938–39 from a manuscript in the Library.

பாலபோத விலக்கணம்.

BĀLABŌDHAVILAKKAṆAM.

Complete.

Same work as that described under No. R. 778.

(கு.-பு.)—

இது, மூவருடக் காட்லாக்கு 778-ஆம் நம்பரில் வந்துள்ளதைப் பெயர்த்து எழுதிவைக்கப் பெற்றதாகும்.

R. No. 1214.

Paper. 8 × 7¼ inches. Foll. 265. Lines, 22 on a page. Tamil. Condition, good. New. Printed.

Presented in 1938–39 by Sri P. Rājagōpāla Mudaliyār of Triplicane.

ஞானவாசிட்டம் by வீரை ஆளவந்தான் முனிவர்; உரையுடன்

ÑĀNAVĀSIṬṬAM by ĀḶAVANDĀN MUNIVAR OF VĪRAI; WITH A COMMENTARY.

Wants a few lines in the end, otherwise complete.

Same text as that described under No. D. 1526.

Beginning :

ஞானவாசிட்டம்.

வைராக்யப் பிரகரணம்.

அவதாரிகை:

வடமொழியிலுள்ள ஞானவாசிட்ட நூலைத் தமிழ்ச் செய்யுளின் மொழி பெயர்க்கப் புகுந்த இந்நூலாசிரியர், இது நிர்விக்கினமாய் நிறை வேறும் பொருட்டு விநாயகமூர்த்தியைச் சகுணமாகவும் நிர்க்குணமாகவும் உபாசனை செய்கின்றார்.

பெண்மை பாதியன் பெற்ற களிற்றினை
யண்மை தூர மறவகத் துன்னுவாந்
திண்மை ஞானச் சிறப்புயர் வாசிட்ட
முண்மையாக வொருங்குரை செய்யவே.

(இ-ள்.) திடம் பொருந்திய வாக்யார்த்த போதச் சிறப்பினால் மேன்மையாக விளங்கிய ஞானவாசிட்டத்தைக் கீர்வாணத்திலுள்ள பிரகாரமாகத் தமிழ்ச்

செய்யுளான் முழுதுஞ் சாற்றும் பொருட்டு உமைபாகனுகிய பரமசிவன் ஈன்றருளிய யானைமுகத்தினையுடைய விநாயகமூர்த்தியை அண்மை சேய்மை யின்றி இடைவிடாம லுள்ளத்தின்கட் சிந்திப்பாம். என்பதாம்.

நூல்.

அவதாரிகை.

வசிட்டோபதேசமான சுவாநுபவத்தைக் கீர்வாணசுலோகமாய்ச் சொல்லப் புகுந்த வடநூலாசிரியர் இந்நூல் நிர்விக்கினமாய் நிறைவேறி யாவருஞ் சிரவணஞ் செய்யும்பொருட்டு ஆத்மஞான சாட்சாத்கார ஸ்வ ரூபத்தை நிருபாதிக நிட்டையினுலுஞ் சோபாதிக நிட்டையினுலும் விலக்ஷண சலக்ஷணமாக வுபாசனை செய்கின்றுர்.

(வேறு.)

பொன் னுலகத்தினிற் புவியிலந்தரத்
தென் னுடை யுட்புறத் திலங்குகின்றது
மன்னு சிற் சோதியே வடிவுமியாவுமாய்த்
துன்னு வதப் பொரு டொழுதி றைஞ்சுவாம்.

Colophon :

வைராக்யப் பிரகரணம் முற்றிற்று.
முமுட்சுப் பிரகரணம் முற்றிற்று.
உத்பத்திப் பிரகரணம் முற்றிற்று.
திதிப் பிரகரணம் முற்றிற்று.
நிர்வாணப் பிரகரணம் முற்றிற்று.

End :

சம்பத் தாபத்திரண்டினு நீ சமமாய் வந்ததனு சரிக்கி
னம்பற் சங்கமகன்ற வனீநாளுந்திரள் வத்துவிற்சமமாய்
விம்பத் திதயச் சமத்துவனுய் மேவும் பகுதித்திறமியற்றி
யிம்பர்ச் சங்க மறுத்தின்ப மிசைவாயிராம வெனச் சொன்னுன்.
(எக)

(இ-ள்) சுகதுக்கங்களாகிய விரண்டிலும் நீ சமத்துவனுகி வந்ததை யனு சரித்தால் நீ ஆசையின் பெருக்கமாகிய சங்கத்தைவிட்டவன். எப்பொழுதும் திரண்ட வஸ்துக்களில் சமத்துவமாகப் பிரிதி விம்பமான விருதயத்தில் சாத்துவித குணத்தை யுடையவனுய் வாராநின்ற காரியங்களைச் செய்து இவ்விடத்திலுள்ள திரிசியசங்கத் . . . . .

(கு.-பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1526-ஆம் நம்பர் பிரதியின் உரைப்பிரதி. இந்நூலில் வைராக்யப் பிரகரண முதல், உபசாந்திப் பிரகரண மீறுக வுள்ள அறுவகைப் பிரகரணங்களும் உரையுடன் இருக்கின்றன. உரை யியற்றினுர் பெயர் தெரியவில்லை. அச்சுப் பிரதிக்கும் இதற்கும் பல வேற்றுமைகள் காணப்படுகின்றன. இந்நூலில் ஒவ்வோர் உட்பிரிவை யும் அடுத்து, பொருளட்டவணை யொன்று காணப்படுகிறது. இறுதியில் சைவபுராணம், பூரணநந்தோதயம், தேவாரம் முதலியவற்றிலுள்ள சிற் சில பாடல்களின் அட்டவணையுமுளது.

R. No. 1215.

Palm-leaf. 12 × 1¾ inches. Foll. 163. Lines, 12 on a page. Tamil. Injured. Old. Extent, 2,200 granthas. Printed.

Purchased in 1938–39 from Sri Muttukkumārasvāmi Ōduvāmūrtti, Tinnevelly Town.

பிரபோதசந்திரோதயம் (மெய்ஞானவிளக்கம்) by திருவேங்கடநாதர்

PIRABŌDHACANDIRŌDAYAM (MEYÑĀNAVIḶAKKAM) by TIRUVĒṄKAṬANĀTHAR.

Complete.

Same work as that described under No. D. 1593.

Colophon :

பிரபோத சந்திரோதயம் முற்றும். சாலிவாகன சகாப்தம் (௲எ௱ருரு— 1755) விஜயஸ்ரீ தைமீ ௰௯௨ புதன்வாரமும் உத்திரநட்சத்திரமுங் கூடின சுபதினத்தில் மெய்ஞான விளக்கமாகிய பிரபோத சந்திரோதயம் எழுதி முடித்தேன். பாளையங்கோட்டைக் கடுத்த தாம்பிரபர்ணி நதியோரம் குட்டத் துறையிலிருக்கும் வேதமூர்த்தி.

(கு.-பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1593-ஆம் நம்பர் பிரதியில் வந்துள்ள தேயாம். முற்றும் உளது. ஏடுகள் முற்றும் மிகவும் சிதலுற்று இருக்கின்றன.

R. No. 1216.

Palm-leaf. 15½ × 1¾ inches. Foll. 259. Lines, 11 on a page. Tamil and Grantha. Injured. Old. Extent 5,000 granthas. Printed.

Purchased in 1938–39 from Sri Muttukkumārasvāmi Ōduvāmūrtti. Tinnevelly Town.

குருபரம்பரா ப்ரபாவம்—ஆறாயிரப்படி by பின்பழகிய பெருமாள் ஜீயர்.

GURUPARAMPARĀPRABHĀVAM ĀṞĀYIRAPPAḌI by PINBAḺAKIYA PERUMĀḶ JĪYAR.

Complete.

Same work as that described under No. R. 45 (*a*).

Colophon :

விஜயநாம ஸம்வத்ஸரம் உத்தராயணம் பங்குனிமீ ௩௰௨ வியாழக் கிழமையும் அசுவினி நக்ஷத்திரமுங் கூடிய சுபதினத்திலே குருபரம்பரா ப்ரபாவம் நாராயண பிள்ளைக்கு அர்ச்சனை சீனிவாஸய்யங்கார் அபிமானத் துக்குட்பட்ட, வானமாமலை அய்யங்கார் ஸ்வஹஸ்தலிகிதம்.

பின்பழகிய பெருமாள்சீயர் திருவடிகளே சரணம்.

(கு.-பு.)—

இது, மூவருடக் காட்லாக்கு 45 (a) நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாகும். இதில் முற்றும் உளது. ஏடுகளெல்லாம் சிதைந்துள.

R. No. 1217.

Palm-leaf. 15 × 1¾ inches. Foll. 405. Lines 12—17 on a page. Tamil. Injured. Old. Extent 12,150 granthas. Printed.

Purchased in 1938–39 from Sri Muttukkumārasvāmi Ōduvāmūrtti, Tinnevelly Town.

திருநெல்வேலித் தல புராணம் by நெல்லையப்பக் கவிராயர்.
TIRUNELVĒLITTALAPURĀṆAM BY NELLAIYAPPAKKAVIRĀYAR.

Complete.

A *purāṇa* dealing with the local religious importance of Tirunelvēli (Tinnevelly).

சீர்பூத்த விதழிபுனே சிற்பரனு . . . . தனுர்சியையோர் பாகர் ?
நீர்பூத்த திருவுளத்தி னினைத்தபடி வேதமுனி நிகழ்த்தலோடு
மேர்பூத்த வொருகோட்டா லிலகுபாரத மேருவிடத்தே தீட்டும்
போர்பூத்த நெடுந்தடக்கைப் பொல்லாத பிள்ளைபதம் போற்றல் செய்வாம்.
* * * * * * * * (க)

மன்னுமுயர் தாரகப்பிரமம் வளஞ்சேர் நெல்லைமாநகருக்
கின்னவகைப் பேரைம்பதுந் தானெண்ணி யிருபோதுந் துதிப்போர்
தன்னையறிவர் தலைவனையுந் தானறிவர் தழைத்திருப்பர்
முன்னைவினைச் சஞ்சிதந் தவிர்ந்து மோட்சவீடும் பெறுவாரே. (௬)

ஆகத் தலத்தின் பெயர் (௫௰) ஐம்பது.

கடவுள் வாழ்த்து.

சீருலாவு வெண்டிங்களங் கண்ணியன்
நீருலாவிய நீண்முடி வேணியன்
காருலாவு கழைவன நாயகன்
ஏரு லாவு பொற்பாத மிறைஞ் சுவாம். (க)
* * * *

அருமறையின் முழுமுதலாய் அகண்ட
பரிபூரண மாயனந்த கோடி
பெருகொளியாய் உபநிடதம் பேசரிய
சிற்பரமாய்ப் பேரானந்தந்
தருகருணை வடிவாகித் தாம்மிர
சபையூடு நின்று தக்கோர் போற்றத்
திருநடனம் புரிந்தருளுஞ் செம்பதுமக்
குஞ்சிதத்தாள் சிந்தை செய்வாம். (௪)
* * * *

அவையடக்கம்.

* * * *

* * * *

எந்தை **திருநெல்வேலி யிறையவனுர் திருக்கதையைப்**
புந்தியினி லறிவறியேன் புகல்வேனென் றுரைப்பதுதான்
சிந்தையினி லன்புடையோர் சிவபூசைத் திறனேக்கி
மந்தநடைச் சிறுமதலை மணலினிழைத் தாடலொப்பாம். (உ)

ஆணுவமா மலங்கழித்த வறிவுடையோர் முன்புசொல
நாணுமனத் தேனுரைத்த நலமிலாத் தமிழேனும்
வேணுவனத் தார்புகழை விரித்துரைக்குங் கதையதனுற்
பேணுமனங் களிகூர்வார் பெருமைபெறு பெரியோரே. (௩)

வேறு.

ஆதியான் உமைபாற் சொன்னதருளுடை நந்திகேட்டுக்
கோதிலாச் சனத்குமாரர்க்கோதிடக்குறித்தே யன்னேர்
வேதம் நான்கெனச் செய்வேத வியாதர்க்கு விளம்பவன்னேர்
சூதர் பான்மூவாறுகச் சொல்லிய புராணந் தம்முள். (௪)

பலந்தரு **காந்தமென்னும் பதின்மூன்ரும் புராணந்தன்னிற்**
கலந்துள சனற்குமார சங்கிதைக் காண்டங்கூறும்
நலந்தருந் **திருநெல்வேலி**நகர் நகர்க்கெலாம்மிக்க
தலம்புகழ்ப் **புராணந்தன்னைத்** தமிழினு லுரைக்கலுற்றேன். (௫)

* * * *

விண்ணவர் பணிபொற் பாதர்விமலனுர் திரு**நெல்வேலி**
யண்ணலார் தல**புராண** மருமறை வியாதன்கூறும்
நண்ணிய வடநூற் காதைநலம்பெறு சருக்கநூறும்
பண்ணுறு விருத்தப் பாவாற் பண்பொடு பகரலுற்றேன். (அ)

End :

தேவர்களும் முனிவர்களுஞ் சிறந்து வாழ்க
சிவமறையோர் வாழ்க மறைவேதர் வாழ்க
ஆவினமுந் தொண்டர் குழாமனைத்தும் வாழ்க
ஆகம சாத்திரங்களும் மெய்யறமும் வாழ்க
மேவு சைவநெறி திகழ வைதிகமு மோங்க
மேன்மைதரு பூதிசாதனமு மோங்கப்
பூவுலகு தழைக மழைபொழிக வேந்தர்
புகழோங்க மனுநீதி பொருந்தி வாழ்க. (௩க)

Colophon :

திருநெல்வேலித் தலபுராணம் படித்த வேதியனைக் கண்ட மாபாவி கதியடைந்த சருக்கம் முற்றும். திருநெல்வேலித் தலபுராணம் முற்றும். ஆக (ச் செய்யுள்) (௬௯௧௨) (6912) சாலீவாடீச்வரர் காந்திமதியம்மாள் முன் நிற்க. ௲க௮௫ அவணிமீ ௰௪௨ ஆதித்த வாரமும் சதய நட்சத்திரமும் பெற்ற தினத்தில் எழுதி முடிந்தது.

(கு.-பு.)—

இந்நூல், "திருநெல்வேலி", என்ற திவ்விய தலத்தினது மகிமையினை யுணர்த்துவதோர் நூலாம். தலபுராணங்களைச் சார்ந்ததாம். நூலாசிரியர் "நெல்லையப்பக் கவிராயர்", என்பவர் ஆவார். இதற்கு முத நூல் வடமொழி ஸ்காந்த புராணத்தில் உள்ள ஸநத்குமார ஸம்ஹிதையாம். இஃது அச்சிடப்பெற்றுளது. ஏடுகளெல்லாம் மிகச் சிதலுற்றிருக்கின்றன. இறுதியில் இந்நூலுக்கு ஒரு சருக்கவகராதியும் எழுதப் பெற்றிருக்கிறது. இதுக்கு நேராக வசன நடையான் ஒரு நூலை மதுரை சிவஞானத் தீபச் சபையின் காரியதரிசியாகிய ம. அழகர்சாமி பிள்ளையவர்கள் இயற்றியுள்ளார். அதுவும் அச்சிடப்பெற்றுள்ளது.

R. Nos. 1218—1222 [one bundle.]

Palm-leaf. $9\frac{1}{2} \times 1\frac{1}{2}$ inches. Foll 59. Lines, 8 on a page. Tamil. Very injured. Old. Extent, 747 granthas.

Purchased in 1938–39 from Sri Muttukkumārasvāmi Ōduvāmūrtti, Tinnevelly Town.

R. No. 1218.

அருணகிரி யந்தாதி by குகை நமச்சிவாயர்.
ARUṆAGIRI YANTĀDI by GUKAI NAMACCIVĀYAR.

Foll. 1—14. Extent, 212 granthas. Printed.

Complete.

Same work as that described under No. D. 237.

(கு.-பு.)—

இது, டிஸ்கிருப்டிவ் காட்லாக்கில் 237-ஆம் நம்பரில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் முற்றும் உளது. இறுதியிலே "அந்தாதி செய்தார் அடியாரை யீடேற்ற, வந்தாதியாம் அருணை வள்ளலுக்குச்—சந்ததமும், மெய்யன் அருணகிரி மேவுங் குகைமீதில், அய்யன் நமச்சிவாயன்." என்ற இந்நூலாசிரியரது பெயர் உணர்த்தும் ஒரு வெண்பா அப்பிரதியிலில்லாததாய்க் காணப்படுகிறது.

R. No. 1219.

கந்தரனுபூதி by அருணகிரிநாதர்.
KANDARANUBHŪTI by ARUṆAGIRINĀTHAR.

Foll. 15-a—20-a. Extent 72 granthas. Printed.

Complete.

A poem in praise of God Kanda (Śrī Subrahmaṇya).

Beginning :

கந்தரனுபூதி.

ஆடும் பரிவேளணி சேவலெனைப்
பாடும்படியே பணியாய் அருள்வாய்
தேடுங்கயமுகனைச் செருவிற்
சாடுந்தனியானை சகோதரனே. (க)

உல்லாச நிராகுல யோகவிதச்
சல்லாப விநோதனு நீயலையோ
வெல்லாமறவென்னை யிகழ்ந்தவிதம்
சொல்லாய் முருகா சுரர்பூபதியே. (உ)

வானோ புனல்பார் கனல்மாருதமோ
ஞானோதயமோ நவில்நான்மறையோ
யானோ மனமோ வெனையாண்டவிடந்
தானோ பொருளாவது சண்முகனே. (ந)

End :

வினையோட விடுங்கதிர்வேல் புகழ்வேன்
மனையோடுதியங்கி மயங்குமதோ
சுனையோடருவித்துறையோடு பசுந்
தினையோடிதனோடு திரிந்தவனே. (சும)

தூசாமணியுஞ் சுடரும் புனைவான்
நேசாகுமரா நினதன்பருளால்
ஆசாநிகளந்து களான தின்பின்
பேசாவனுபூதி பிறந்ததுவே. (சுக)

ஓராறுமுகத்தொருவர் சரணம்
ஒருபன்னிருதிண்புயனே சரணம்
பேராயிரமுள்ளவனே சரணம்
பேசற்கினியாய் சரணஞ் சரணம்
நீராய் நிலனாய் வெளிகாலொளியாய்
நினைவார்நினையும் நினைவே சரணம்
வேராய் முதலாய் நடுவானவனே
வேலாயுதனே சரணஞ் சரணம். (சுஉ)

யாமோதிய கல்வியுமெய்யறிவும்
யாமே பெறவெம்மிறை தந்ததனாற்
பூமேல் மயில்போல் வருமே புணர்வீர்
நாமே நடவீர் நடவீரினியே. (சுந)

(கு.-பு.)—

இது முருகக் கடவுள்மீது துதிரூபமாக அருணகிரியார் என்ற பெரியாரால் இயற்றப்பெற்றதாகும். அச்சிட்ட நூல்களில் ஐம்பத்தோர் பாடல்கள் காணப்படுகின்றன. இதிலே நாற்பத்துமூன்று பாடல்களே காணப்படுகின்றன. ஏடுகள் மிகவும் சிதைந்துள.

R. No. 1220.

கோவிந்தமாலை.

GŌVINDAMĀLAI.

Foll. 21—23. Extent 48 Granthas. Contains Stanzas 1—15 only.

A moral poem with the refrain—*Accutānanta-Gōvindanē.*

Beginning :

கோவிந்தமாலை.

சலிக்கக்கணக்கென்னதான் பெற்ற
பிள்ளைக்குத்தாய் முலைப்பால்
ஒலிக்கக்களித்தமுதூட்டி
வளர்ப்பள் பின்னும்வினையாற்
பலிக்கும் படிக்கன்னையென்செய்வள்
பாலுடன் பாக்கியத்தைக்
குலுக்கிப்புகட்டுவளோ
வச்சுதானந்த கோவிந்தனே. (க)

எடுத்தாலும் பிச்சையமுது நன்றே
யில்லையேலுயிரை
விடுத்தாலும் வாசி நட்பில்லராம்
மனையில் விருந்துண்ணப்போ
யடுத்தாவதே தரைக்காசுக்குப்
போனகற்பாயிரம் பொன்
கொடுத்தாலுந்தான் வருமோ
வச்சுதானந்த கோவிந்தனே. (உ)

End :

உண்டானமாத்திரமல்லாற்
சௌரியமுள்ளவரைக்
கண்டார் சிலர் பயங்கொ
ண்டாரவர் போற் சயங்கைக்கொள்வரோ
வண்டாமறம்பாயும் புலியும் பாய்
அடையாளஞ் சுட்டுக்
கொண்டால் நரிக்கியல்போ
வச்சுதாநந்த கோவிந்தனே. (யரு)

(கு.-பு.)—

இந்த நூல் நீதி நூற்களைச் சார்ந்ததாய்க் "கோவிந்த சதகம்", என்றதைப் போலவுளது. நூலாசிரியர் இன்னாரென்று விளங்கிற்றிலர். இதுவும் மற்றவைகளைப்போல் நூறுபாக்களையுடைத்தாயிருக்கவேண்டும் எனத்தோற்றுகிறது. இதில் 1-15 பாடல்களேயுள. ஏடுகள் மிகவும் சிதலுற்றிருக்கின்றன. எழுத்துப்பிழையுள. இதுக்குப்பின்னர் ஓரேட்டில் உத்தம புருஷ இலக்கணங்களை விளக்கும் சில பாடல்கள் எழுதப்பெற்றுள.

R. No. 1221.

நியதிப்பயன்.

NIYATIPPAYAN.

Foll. 25—36. Extent 160 granthas.

Complete.

Same work as that described under R. No. 360 (*d*).

End :

சூரியன்றன்னை நமற்காரம்
பண்ணிற்றெடர் பிணியின்
வீரியமான வியாதியெலாம்
அறுமேன் மறுமைக்
கோரியலாமுத்தியுற்றிடு
மென்னவுரைத்திடுவர்
காரியமாநியதிப்பயன்
மாணவகண்டுகொள்ளே. (௱௧)

நியதிப்பயன் முற்றும்.

(கு.-பு.)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 360 (*d*) நம்பர் பிரதியில் வந்துள்ளதே யாகும். இப்பிரதியில் இந்நூல் முற்றும் உளது. இதிலிருந்தும் நூலாசிரியரின் இயற்பெயர் இன்னதென்று விளங்கவில்லை. ஏடுகள் சிதலுற்றுச் சிதைந்துள. இதன் இறுதியிலே 37-ஆம் ஏட்டில் திருவாரூர்த் தேவாரப்பாடல் எழுதப்பெற்றுளது.

R. No. 1222.

மும்மணிக்கோவை by சிவக்கொழுந்து கவிராயர்.

MUMMAṆIKKŌVAI by ŚIVAKKOḺUNDU KAVIRĀYAR.

Foll. 41*a*—57*b*. Extent 255 granthas.

Complete.

A poem, in the *Mummaṇikkōvai* style, in praise of Vēlappa-paṇḍārap-periyār of Tiruvāvaḍuturai.

Beginning :

மலைதேர்புகழு மும்மணிக்கோவை சாற்றக்
கலை தேரிபமுகத்தோன் காப்பாம்—நிலைதேர்
திருவாவடுதுறைசைத்தேசிக வேலப்ப
குருபாத வர்ச்சனையாக்கொண்டு. (௧)
மதிசே[ா]ரார[ாண்]?(ண) விதியாமதிபனுந்
திருவுறை மார்பத்தொரு பெருங்கடவுளும்
இந்திரன் முதலிய தந்திரப்புலவரும்
முனிக்கணமெவையுஞ் சனித்திடு மனிதரும்
யாவரும் யாவையும் மேவுறக்காணு
நித்திய சுத்த சத்திய நிறை . . . . . ப்
னபப்போதவன்பிற சோதி?

* * *

End :

அருள்வாழி மெய்மையடியவர் வாழி
யவனியின் மூவர்
அருள்வாழி யென்று பின்னுமிருவோர்
பணிவளளலெனுந்
தெருள்வாழியருயர் அடுதண்டுறை ?
வேலப்பதேசிகனடிப்
பொருள் வாழியென்றுள்ளப்பூ [ஞ] (நா)
முடிமுறை போண மதித்தே ? (கூ0)
மும்மணிக்கோவை முற்றும்.

(கு.-பு.)—

இந்நூல் திருவாவடுதுறை வேலப்ப பண்டாரப் பெரியாரின்மீது துதி ரூபமாய்ச் சிவக்கொழுந்து கவிராயர் அவர்களால் இயற்றப்பெற்றதாகும். மும்மணிக்கோவையென வழங்கப்பெறும். இது தொண்ணூற்றுறுவ கைப் பிரபந்த விசேடங்களில் ஒன்று. இப்பிரதியில் முற்றுமுளது. ஏடுகளெல்லாம் சிதலுற்றுள. எழுத்துப்பிழைகள் காணப்படுகின்றன.

R. Nos. 1223—24 [one bundle.]

Palm-leaf. 13½ × 2 inches. Foll. 252. Lines, 18 on a page. Tamil. Injured. Old. Extent 6,936 granthas.

Purchased in 1938-39 from Sri Muttukkumārasvāmi Ōduvāmūrtti Tinnevelly Town.

R. No. 1223.

சிவஞானசித்தியார் சுவபக்க உரை by நிரம்பவழகியார்.

ŚIVAÑĀNASIDDHIYĀR SUVAPAKKA URAI by NIRAMBA-VAḺAKIYĀR.

Foll. 1—84. Extent 2,400 granthas. Printed.

Incomplete.

A commentary on the *Śivajñānasiddhiyār* of Śrī Aruṇandiśivācāriyār ; by Nirambavaḻakiyār.

Beginning :

காப்பு.

ஒரு கோட்டன் இரு செவியன் மும்மதத்தன்
நால்வாயைங்கரத்தன் ஆறு
தருகோட்டம் பிறையிதழித் தாழ்சடையன்
றருமொரு வாரணத்தின்றாள்கள்
உருகோட்டன் போடும் வணங்கியோவாதே
யிரவுபகலுணர்வோர் சிந்தைத்
திருகோட்டுமயன்றிருமால் செல்வமு
மொன்றோ வென்னச் செய்யுந் தேவே. (க)

உரை :—

ஒரு கோட்டன் என்பது= ஒரு கொம்பினையும் உடைய[ஞ](ரா)ய், இருசெவியன்= இரண்டு செவியினையும் உடைய[ஞ](ரா)ய்; மும்மதத்தன்= மூன்றுமதங்களை உடைய[ஞ](ரா)ய்; நால்வாயன்= நான்(ற)வாயினையும் உடைய[ஞ](ரா)ய்;

ஐங்கரத்தன்= துதிக்கையுடனே ஐந்து கரங்களையுமுடைய[ஞ](ரா)ய் ; ஆறு, தருகோட்டம் பிறை, இதழித்தாழ்சடையன் தரும் ஒருவாரணத்தின் தாள்கள்= கங்காதேவியையும், வளைவுபெற்ற பிறையினையும், கொன்றைப்பூவினையும் உடைய நீண்ட திருச்சடாபாரத்தினையும் உடைய தம்பிரானுர் தரப்பட்ட ஒப்பில்லாத மூத்த நாயனாரது சீர்பாதங்களை ; உருக்கோட்டு அன்புடன் வணங்கி= உருகி ஓடப்படாநின்ற பத்தியுடனே தண்டன் பண்ணி, ஓவாதே இரவுபகல் உணர்வோர்= ஒழியாதே அனவரதமும் நினைக்கிற பெரியோர்களுடைய ; சிந்தைத் திருக்கோட்டு= இருதயங்களில் மலமாயாதி கன்மமென்கிற கோர குணங்களைப்போக்கும், அயன் திருமால் செல்வமும் ஒன்றெவெனச் செய்யும் தேவே = பிரம்ம விஷ்ணுக்களுடைய மாயா போகமாகிய ஐசுவரியமும் ஒரு பொருளோ வென்னும்படி ஞானச் செல்வமாகிய பரபோகத்தைக் கொடாநிற்கும் தேவே ! என்பது. ஆகையால் இவனே கர்த்தாவென்று சொல்லப்படுவான் என்றவாறு. என்னவேயானும் இந்நூலைக்காப்பது நிமித்தமாக அந்தச் சீர் பாதங்களை ஒழியாதே அனவரதமும் எண்ணி இருதயத்திலே வைத்துக்கொள்ளா நின்றேன் என்பது கருத்து. இது காப்பு.

End :

இதனற் சொல்லியது சத்தையும் அசத்தையும் அறிகிறது ஆன்மாவென்றும், இதனுடைய உண்மை சத்துமல்ல அசத்துமல்ல என்றும், அழியாதவனுமாய்ச் சத்துடன் கூடினபொழுது சத்தும், அசத்துடனே கூடினபொழுது அசத்துமாய் நிற்கையால் சதசத்தென்றும், அதிசயமாகத் தோன்றிநில்லாதென்றும், தோன்றுமல் நில்லாதென்றும், இதுதோன்றுகிற முறைமை மலரின் மணம்போலும் என்னும் முறைமையும் அறிவித்தது. உாசயக.

இப்படி மலரும் மணமும் போலும் . . . .

(கு.-பு.)—

இந்நூல் “ சிவஞான சித்தியார் ”, என்னும் நூலுக்கு நிரம்பவழகியார் என்பவரால் இயற்றப்பெற்றதொரு விரிவுரையாகும். சுவபட்சம் என்ற பகுதியாகும். இவ்வுரை அச்சிடப்பெற்று உளது. (அசா—ாஉஅ) ஆன ஏடுகள் காணப்பெறவில்லையாதலின் நூன்முற்றுமில்லை.

R. No. 1224.

சிவஞானசித்தியார் பரபக்கஉரை by திருவொற்றியூர் ஞானப்பிரகாசர்.

ŚIVAÑĀNAŚIDDHIYĀR PARAPAKKA URAI by ÑĀNAPPIRAKĀŚAR OF TIRUVOṞṞIYŪR.

Foll. 85—252. Extent 4,536 Granthas. Printed. Complete.

Same work as that described under No. D. 1264.

(கு.-பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1264-ஆம் நம்பர் பிரதியிலே வந்துள்ள நூலேயாகும். முற்றும் உளது. ஏடுகள் மிகச்சிதலுற்றன.

R. No. 1225.

Palm-leaf. 14½ × 1¼ inches. Foll. 277. Lines, 6 on a page. Tamil. Much injured. Old. Extent 4,146 granthas. Printed.

Purchased in 1938–39 from Sri Muttukkumārasvāmi Ōduvāmūrtti, Tinnevelly Town.

இராமநாடகம் by அருணாசலக் கவிராயர்.
IRĀMANĀṬAKAM BY ARUṆĀCALAKKAVIRĀYAR.

Complete.

Same work as that described under No. D. 473.

Colophon :

ஞான சம்போக ராம நாடகம் இசையாற் சொல்லுங்
கான பாகவ தருள்ளங் களித்திட விதனைக் கேட்டுத்
தான மாயுலகிலுள்ள சவுபாக்கிய முந்தந் தோர்கள்
வான நாட்டரசன் போல வசீகரம் பெற்று வாழி.
உயு[த்திய] (த) காண்டம் முற்றும்.

விரோதிஞு மார்கழிமீ உ௬உ திருவொற்றியூர் விநாயக முதலி யார் படிக்கின்ற இராமாயண கீர்த்தனை எழுதி முடிந்தது. முற்றும்.

(கு.-பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 473-ஆம் நம்பர் பிரதியில் வந்துள்ளதேயாகும். இப்பிரதியில் முற்றும் உளது. அச்சிட்ட பிரதிக்கும் இதற்கும் மிகவேற்றுமை காணப்படுகிறது. ஏடுகள் எல்லாம் மிகச்சிதைந்துள.

R. No. 1226.

Palm-leaf. 13 × 1¾ inches. Foll. 168. Lines, 11 on a page. Tamil. Injured. Old. Extent 4,000 granthas. Printed.

Purchased in 1938–39 from Sri Muttukkumārasvāmi Ōduvārmūrtti, Tinnevelly Town.

தத்துவப்பிரகாசம், உரையுடன் by தத்துவப்பிரகாசர்.
TATTUVAPPIRAKĀŚAM WITH COMMENTARY by TATTUVAPPIRAKĀŚAR.

Complete.

A commentary on the text of a work by Tattuvappirakāśar described under R. No. 369. The commentator's name is unknown.

Beginning :

தத்துவப்பிரகாச வுரை.

செந் திருவிளங்கு முயர் கா[ளி] (ழி)யான்
பரவு சீர்காழி யெல்லை விட்டுத்
திகழ் மதுரை யெய்தியே யருள் நந்திதேசி
கனெனத் திருநாம மிட்டுப்-

புந்தி மகிழ்வாகி யாசாரியாபிஷேகமும்
  பொலிவுறச் செய்ததன்பின்
பொதிய வரையிற் சென்று கும்பமுனியைக்கண்டு
  போற்றியவர் கருணை பெற்றே-
வந்து வேளாண் குறிச்சியில்
  வைத்தவாமமயதுவைத்த ?
சட்டைப் பெருமாண் முதன் மூவரை
  மருவுகுரு பீடமாக்கி . . .
சாந்து பயில் வசுதேவையரசன் மகட்
  பிரம்ம ரட்சசைத் தவிர்த்தகுருவே
தத்துவப்பிரகாச தேசிகா
  மெய்ஞானச் சகலாகமச்சலதியே. (க)

ஏடுபெறவே சகல சங்கிரக மென்னவோ
  ரிலட் சங்கிரந்த முஞ்செய்தியற்
சரியை கிரியை யோக ஞானம் . . .
  [] (நான்கி)னையு மொன்றாய்ப்
பாடுபெறு தத்துவப்பிரகாசமென்ன
  வோர் பனுவலுங் கற்க நிற்கப்
பார்மீதிலுண்டாக்கி வி . . . னதிசயம்
  பகர்வதற்கெளிதாகுமோ
நீடுபுகழரசனுர் புளியறைப்பதியினுள்
  நிலமூன்றில் ஒன்று நல்க
நில . . றுதென்காசி தலவாசமாகவே
  நிலைபெற்றிருந்த குருவே
சாடுபணிரண்டி[லி]லே ? யேடுகொடுவந்த
  பரசமயக்கோளரியை வென்ற
தத்துவப்பிரகாச குருதேசிகா
  மெய்ஞானச் சகலாகமச்சலதியே. (உ)

காப்பு.

இந்நூல் ஞான நூலாயினும் பாயிரம் உரைத்தே உரைத்தல் தகுதியாகப்படுதலினுல் அது நூற்பெயரும், காரணமும், ஆக்கியோன் பெயரும், அளவும், பயனும், உரைத்து உரைக்கும் பகுதியுடைத்து.

இந்நூல் மெய்கண்ட சந்ததியிற் பொய்யினையகற்றி மெய்யினைக் கண்ட உத்தம சீலன் தத்துவப்பிரகாசனுற் செய்[தமை] (யப்பெற்றமை) யால் "தத்துவப்பிரகாசம்", என்று பெயராயிற்று. முன்னூலால் சரியை, கிரியை, யோகம், ஞானம், ஆதியாக விளங்கவேண்டுவார்க்குப் பலநூலுங் கற்றறியவேண்டுதலானும், சிவாகமநெறிப்படி (ஒழுக) வேண்டுதலானும், அவையனைத்துங் கற்றறிய வேண்டுமாதலால் இந்நூலகத்தே அந்நான்கின்பயனுஞ் சேரத் தெரிவிப்பது காரணமாகச் செய்யப்பட்டது.

இந்நூல் ஆசிரியர் " கற்றவர் பரவுஞ்சிற்றம்பல நாடிக், கழல்புனே சீலன் காழியம் பதியோன், * * * * * முத்திநெறி யருள் தத்துவப்பிரகாசன், மைதீர் வகையாற் செய்தமைத்தனனே "? இந்நூல் ஆசிரியவிருத்தம் முந்நூற்று முப்பத்தேழாகச் செய்யப்பட்டது. அவை சரியை, கிரியை, யாதி நானகும், அந்நான்கும் வகையாக அறிந்து பரசமய உட்சமய பேதம் நாற்பத்தெட்டின் கருத்தும் உணர்ந்து சைவ சித்தாந்த நெறியின் நிற்பது பயன் எனக் கொள்க. ஞான நூலுக் குப்பாயிரம் இன்றுமாயினும் இந்நூலாராயப்புக்கார்க்கு யாது சொல்லி யதோ என்னும் ஐயம்வருதலால் பாயிரங் கூறப்பட்டது. அல்லு தூஉம், " ஆயிரமுகத்தானமைந்த தாயினும், பாயிரமில்லது பனுவ லன்றே", என்றதனுற் பாயிரம் உரைத்தே நூலுரைக்கவென்பதுமாம் என்க.

பரையீன்ற தனியொளியே வடிவாய் ஞானம்
பகரிச்சை கிரியை மும்மத மாய்ப்பண்டை
வரையீன்ற வுமையீன்ற வைங்கை நால்வாய்
வள்ர் முக்கண்ணிரு செவியோர் வலியகோட்டு
நிரையீன்ற கிம்புரிக் கும்பக்களிற்றை
நெஞ்சகத்தின் வஞ்சகத்தைத் தவிர்ந்து நாளு
முரையீன்ற சொல்லினுல் விரையீன்ற மலரா
லுரைத்தருச்சிப்பவர் வினையின் வருத்தமறுப்பவரே.

என்பது காப்பு.

உரை :—

பராசத்தியிற்றேற்றப்பட்ட ஞானமே தனக்கு வடிவாய், தன்னிடத்துத் தோற்றப்பட்ட இச்சாஞானகிரியைகள் மூன்றும் (மும்)மதமுமாய், பழைய தாகிய இமவான் தரப்பட்ட உமையினிடத்தே வெளிப்படத் தோன்றி(ய) துதிக்கையுடன் ஐந்துகரத்தினையும், நான்ற வாயினையும், மூன்று கண் ணினையும், இரண்டு செவியினையும், ஒரு கோட்டினையும், கோட்டில் நிரைப் பட வடியிற் சேர்க்கப்பட்ட கிம்புரிப்பூணினையும், கும்பத்தலந்தனையும் உடைய யானைப் படிமத்தானை இதய வஞ்சகத்தைத் தவிர்த்து நாடோறும் பொருட்டெரி சொல்லானும், மருப்பயின் மலரானும், அருச்சித்துத் தோத் திரஞ்செய்யும் அடியா(ர்தம)து பிராரப்த வினையின் வருத்தம் ஒழிப்பார் என்றவாறு. தனியொளி = கேடுபடாதவொளி. 'பரையீன்ற' 'உமை யீன்ற', என்றது, நிட்கள வடிவுஞ் சகள வடிவுங் கூறியது. (க)

End :

* * * * * *

வழிபட அதுவே முத்திப்புக[ழ்](ல)ாம் என்றவாறு. (௩௱௩௭)

சங்கரநமச்சிவாயர் பாதாரவிந்த மேகதி.

தன்னை யறிவிக்குந் தத்போதம் மாற்றுவிக்கு
மன்னரு ளானந்த மா[ற்று](க்கு)விக்கும்—மன்னியசீர்த்
தத்துவப்பிர காசனியற் சண்பையர்கோன் றனுரைத்த
தத்துவப் பிரகாசநூறுன். (க)

ஊட்டியுறக்கி யுயிர்க்குயிரா யுண்ணின்று
காட்டுவது நானுனக்குக் கைவிளக்காய்—நீட்டிநிற்பான்
என்றான் கழுமலத்து மென்போல் வார்தன்னு(ள்)ளத்தும்
நின்றான் பிறவாநெறி. (உ)

தத்துவப்பிரகாசம் முற்றும்.

* * * *
* * * *
* * * *
* * * *

மெய்கண்ட தத்துவப்பிரகாசர் பாதாரவிந்தமே கதி.

வெள்ளிக்கிழமையும் சுபயோக சுபகரணமும் பெற்ற தினத்திலே திருவருளியல்பினாலே எழுதினது. சதசத்துக்குத் தத்துவப்பிரகாசர் திருவடிகளே சரணம். சுவாமி . . . . நாயகர் காந்திமதியம்மாள் திருவடிகளே சரணம்.. சிவமயம்.

கூாரு௰௲ புரட்டாசிமீ˚ உ௰௫௨.

(கு.-பு.)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 369-ஆம் நம்பரில் வந்துள்ள நூலுக்கு ஓர் விரிவுரையாகும். இவ்வுரை இன்னாரால் இயற்றப்பெற்றது என்னு மாதியவ்வகளில் ஒரு செய்தியும் இதிலிருந்து தெரியவில்லை. நடையழகாயிருக்கிறது. இது இதன் மூலத்துடன் யாழ்ப்பாணம் கந்தைய பிள்ளையவர்களால் அச்சிடப்பெற்றுளதாமாயினும் இதற்கும் அதற்கும் மிக வேறுபாடு காணப்படுகிறது. அச்சுப்பிரதியிலே (௩௨௰௧) 321 பாடல்களே காணப்படுகின்றன. இப்பிரதியில் 337 பாடல்கள் காணப்படுகின்றன. இன்னும் அதில் இல்லாத புதிய செய்யுட்களும் உள. இறுதியில் இந்நூலின் சிறப்புப்பாயிரச் செய்யுட்களில் சில காணப்படுகின்றன. முதலிற் காணப்பெறும் 'தத்துவப்பிரகாசர்', விஷயமான இரண்டு செய்யுட்களும் அச்சுப்பிரதியிற் காணப்பெறவில்லை. ஏடுகளெல்லாம் மிகவும் சிதலுற்றும் சிதைந்தும் உள. பிழைகள் உள.

R. Nos. 1227 to 1230 [One bundle].

Palm-leaf. 7½ × 1¾ inches. Foll. 203. Lines, 8 and 9 on a page. Tamil. Injured. Old. Extent. 2,380 granthas. Printed.

Purchased in 1938–39 from Sri Muttukkumārasvāmi Ōduvāmūrtti, Tinnevelly Town.

R. No. 1227.

திருச்செந்தூர்த்தலபுராணம் (ஜயந்திபுர மாகாத்மியம்) by வென்றிமாலைக் கவிராயர்.

TIRUCCENTŪRTTALAPURĀṆAM (JAYANTĪPURAMĀHĀTMIYAM) by VENṞIMĀLAIKKAVIRĀYAR.

Foll. 1—166.

Complete.

Same work as that described under No. D. 586.

End :

மயில் வாழி தரை சேவல் வாழி
மறுவனையதிரிசுதந்திரத்தர் வாழி
குயில்வாழு மொழித்தெய்வயானை வாழி
குறவர்குலக்கொடிவாழி கொடுஞ்சூர்மாய்த்த
வயில் வாழி செயந்திபுரத்துற்றோர் வாழி
யாறுமுகப்பெருமான்றன் கருணை வாழி
பயில் வானமை முகில் வாழி புராணங் கேட்போர்
படிப்போர்களீ னைகளெல்லாம் வாழி மாதோ. (௲ச)

Colophon :

பதினெட்டாவது சுகப்பிரம்ம ருஷி சுவாமியைப் பூசைப்பண்ணின அத்தியாயம் முற்றும். ஆக அத்தியாயம் 'பதினெட்டு (௰௮)-க்கு திருவிருத்தம் (௮௱௯௰௮) (898) ஆகமௌ௨௫? சித்திரைமீ ௨௨ சௌமிய வாரம் புனர்ப்பூச நட்சத்திரத்தில் எழுதி முற்றியது. திருப்புகழ் வீரவாகு போற்றித்துவரைந்தது ?

சந்தஞ்சல சண்முக குருதேசிகன் திருவடியே கதி.

(கு.-பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 586-ஆம் நம்பர் பிரதியிலே வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியிலும் இந்நூலின் பதினெட்டு அத்தியாயங்களும் உள. இது அச்சிடப்பெற்றுளது. நூலாசிரியர் 'வென்றிமாலைக் கவிராயர்' என்பவராவார். இதற்குச் "சயந்தீபுர மாகாத்மியம்", என்ற மற்றொரு பெயரும் உளதென்று தெரிகிறது. சயந்தீபுரமென்றது திருச்செந்தூரை யென்க ; இப்பெயர் வடமொழியில் இதற்கு வழங்கப்படுமாதலின். ஏடுகளெல்லாம் புழுக்களால் மிக வரிக்கப்பெற்றுச் சிதைந்து கிடக்கின்றன.

R. No. 1228.

ஆறெழுத்தந்தாதி (சடக்கரவந்தாதி) by அகத்தியர்.
ĀṞEḺUTTANTĀDI by AKATTIYAR.

Foll. 167—187. Extent, 315 granthas.

Complete.

Same work as that described under No. D. 250.

Colophon :

ஆறெழுத்தந்தாதி முற்றும்.
குமார நாயகன் துணை.

திருப்புகழ் வீரவாகு கையெழுத்து.
பன்னிருநயனத் த[மிழ்](மு)து துணை.

(கு.-பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 250-ஆம் நம்பரில் "சடக்கரவந்தாதி", என்ற பெயரால் வந்த நூலேயாகும். இது முருகக்கடவுளினது ஆறு அட்சரங்களுடைய சிறப்பை யெடுத்து உணர்த்திப் போருகிறது. முற்றும் உளது. இதன் நடுவில் மந்திர பீஜாக்ஷரங்கள் புகுத்தி பாடப்பெற்றுள. ஏடுகள் ஒரு சிறிது புழுக்களால் அரிக்கப்பெற்றுள.

R. No. 1229.

திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா by குமரகுருபரசுவாமிகள்.

TIRUCCENTŪRKKANDAR KALIVEṆPĀ by KUMARAGURU-PARASVĀMIGAḶ.

Foll. 188—203. Extent 180 granthas. Printed.

Complete.

Same work as that described under No. D. 301 but with the additional stanzas as given below :—

Beginning :

திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா.

காப்பு.

தோகைமயில் வாகனனைச் செந்தூரானைக்
சண்முகனைப்பாக்கலிவெண்பாவாய்ப்பாட மாகனகச்
செம்பவளக் கொம்பதரத் தெம்மைவளர்க்குங் கருணைக்
கம்பமதத்தந்திமுகன் காப்பு. (௧)

வந்தூர் புளினம் விளங்கிய பொன்மாமதில் சூழ்ச்
செந்தூர்க்கலிவெண்பா செப்புதற்கு—முந்தூ
ரழகு முலைப்பிடி வல்லபையகத்தில் வைத்திருந்த
களபமலர்க்குஞ்சரமே காப்பு. (௨)

சண்முக குருதேசிகன் துணை.

சந்தஞ்சல சண்முக சடக்ஷரசற்குருதேசிகன் திருவடி கதி

Colophon :

கந்தர்கலிவெண்பா முற்றிற்று.

End :

செந்திநகர் குமரகுருபர வேள்மீதிற்
செந்தமிழால் குமரகுருபர மெய்ஞானி
எந்தவுலகுந்துதிக்குங் கலிவெண்பாவாய்
இயம்புமொரு நூற்றிருபத்திரண்டு கண்ணி
மந்திரவுபதேச மெனப் பெற்றோர் கற்றோர்
மானிலத்தில் சவுபரிபோல் வாழ்ந்து மேலும்
சந்ததமுஞ்சிவஞானந் தழைத்து வெள்ளிச்
சைலகிரிவாழ்வரிது சத்தியந்தானே.

திருப்புகழ் வீரவாகு கையெழுத்து நன்றாக. சண்முகன் கதி.

(கு.-பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 301-ஆம் நம்பரில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் முற்றும் உளது. முன்னும் பின்னுமாக இங்குக் காட்டப்பெற்ற செய்யுட்கள் ஷ்ஷை பிரதியிலும், அச்சிட்ட பிரதியிலுங் காணப்பெறவில்லை. ஏடுகள் சிதலுற்றுள. எழுத்துப்பிழையுடன் உளது.

R. No. 1230.

திருச்செந்தூரகவல் by சிற்றம்பல நாடிகள்.

TIRUCCENTŪRAKAVAL BY CIṞṞAMBALANĀḌIGAḶ.

Foll. 205—206. Extent 10 granthas. Printed.

Incomplete.

A Eulogy on God Subrahmaṇya of Tiruccendūr written in a kind of composition, called the *Akavaṟpā*. The name of the author is Ciṟṟambalanāḍigaḷ.

Beginning :

திருச்செந்தூர் அகவல்.

காப்பு.

கொந்தூர்க் கடம்பலங்கற் கோமான்பதம் போற்றிச்
செந்தூர்த் திருவகவற் செப்புதற்கு—முந்தூர்
அழகு முலேப்பிடி வல்லையகத்தில் வைத்திருந்த
களப மலர்க் குஞ்சரமே காப்பு. (க)

அம்மா திருச்செந்தூர் அம்மானருணேக்கிச்
சும்மாவிருக்கச் சுகம். (உ)

சரவணபவன் இருசரணம் போற்றுவாம்.

நூல்.

ஓமெனுந் தாரக வொன்பொருள் சிவனுக்
காமென மொழிந்தவருட் குருவானேன்
பொற்புறுபொதிய வெற்புறு முனிக்கு
நற்பொருள் விளக்கும் ஞானதேசிகன்
பொய்வழிச்சமணப்புலே யிருணீக்கிச்
சைவம் வளர்க்குஞ்சம்பந்தமூர்த்தி
* * * *
* * * *

End :

நந்தூரலேவாய்ச் செந்தூர்க்கடவுள்
மாவினன் விளங்கு மாவினன் குடியோன்.

(கு.-பு.)—

இந்நூல் திருச்செந்தூரிலே கோயிற் கொண்டிருக்கும் முருகக் கடவுளின்மீது அகவல் ரூபமாய் அமைந்ததொரு தோத்திரப்பிரபந்தமாகும். "சிற்றம்பல நாடிகள்", என்னும் பெரியாரால் இயற்றப்பெற்றதாம். அச்சிடப்பெற்று உளது. இதில் முதலிலிருந்து (21) இருபத்தோரடிகளே உள.

R. No. 1231.

Palm-leaf. 18 × 1¼ inches. Foll. 187. Lines, 7 and 9 on a page. Tamil. Injured. Old. Extent 2,280 granthas. Printed.

Purchased in 1938–39 from Sri Muttukkumārasvāmi Ōduvāmūrtti, Tinnevelly Town.

நன்னூல் காண்டிகை உரை by மயிலைநாதர்.
NANNŪL KĀṆḌIKAI URAI by MAYILAINĀTHAR.

Complete.

Same work as that described under No. D. 66 which does not contain this portion.

Beginning :

நன்னூல் காண்டிகை உரை.

எண்ணிய வெண்ணிய வெய்துபகண்ணுதற்—
பவள மால்வரை பயந்த
கவளயானையின கழல் பணிவோமே. (உ)

பாயிரம் :—

மலர்தலையுலகின் மல்கிருளகல
இலகொளிபரப்பி யாவையும் விளக்கும்
பருதியினொரு தானாகி முதலீ
றொப்பளவாசை முனி விகந்துயர்ந்து
அற்புதமூர்த்தி தன்னலர் தருதன்மையின்
மனவிருளிரிய மாண்பொருள் முழுது
முனிவறவருளிய மூவறு மொழியுளுங்
குணகடல் குமரி குடகம் வேங்கடம்
எனுநான்கெல்லையினிருந்தமிழ்க்கடலின்
அரும்பொருளைந்தையுமியாவையு முணரத்
தொகைவகை விரிவிற்றருகெனத்துன்னார்
இகலற நூறி யிருநில முழுதுந்
தனதெனக் கோலித் தன் மதவாரணந்
திசைதொறு நிறுவிய திறலுறு தொல்சீர்க்
கருங்கழல் வெண்குடைக் கார் நிகர்வண்கைத்
திருந்திய செங்கோற் சீயகங்கன்
அருங்கலை விநோதன் அமராபரணன்
மொழிந்தனனாக முன்னோர் நூலின்
வழியே நன்னூற் பெயரின் வகுத்தனன்
பொன் மதிற்சனகைச் சன்மதி முனியருள்
பன்னருஞ் சிறப்பிற் பவணந்தி
என்னு நாமத்திருந்தவத்தோனே.

என்பது பாயிரம்.

இதன் பொருள் மேற்சொல்லுதும். (௩)

சூத்திரம் :—

முகவுரை பதிகமணிந்துரை நூன்முகம்
புறவுரை தந்துரை புனைந்துரை பாயிரம். ‖ உ ‖

என்பது, இவையனைத்தும் பாயிரத்துக்குக் காரணப் பெயராகும் என்றவாறு. ‖ உ ‖

பாயிரம் பொதுசிறப்பென விருபாற்றே. ‖ ௩ ‖

என்பது, மேற்சொன்னபாயிரம் பொதுப்பாயிரமுஞ் சிறப்புப்பாயிரமும் என இருவகைப்படும். என்றவாறு.

அவற்றுள் பொதுப்பாயிரமாவது எல்லா நூன்முகத்தும் உரைக்கப் படுவதெனக்கொள்க. சிறப்புப்பாயிரம் ஒரு நூன்முகத்து உரைக்கப் படுவது. ‖ ௩ ‖

End :

புழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல காலவகையினானே ‖ சகூக ‖

என்பது, என்னுதலிற்றோவெனின், இந்நூலிற்சொன்ன ஐந்ததிகாரத் திற்கும் சிங்கநோக்காய் நிற்பதொரு புறனடையுணர்த்திற்று.

இ—ள் :—

முற்காலத்துள்ளன சில விடுத்தலும், இக்காலத்துச் சில வருவித்தலும், காலக் கூறுபாடு நோக்கக் குன்றக் கூறன் மிகைபடக் கூறல் என்னுங் குற்ற மாகா என்றவாறு.

உ-ம்—அவை, அழன், புழன், கேட்டை யென்று நின்றையென்று கண்டீ ரென்று என்றற் றொடக்கத்தன இக்காலத்து ஈண்டு வழங்காது. அங்ஙனம் இங்ஙனம் உங்ஙனம் எங்ஙனம் என்புழிஙவ்வும், சரடு, சரி சளி, சமழ்ப்பு சள்ளை என்புழி சகரமும் இக்காலத்து ஈண்டு மொழிக்கு முதலாயின வென்க. பிறவும் அன்ன. இவ்வாறே மேல்வரும் அதி காரங்களினுங் கண்டுகொள்க. (உக)

ஐந்தாவது உரிச் சொல்லியன்

முற்றும்.

இருதிணை மூவிட நான்மொழி யைம்பால் அறுதொகையேழ்
வருவழு வெட்டுரு பொன்பா(தா)ந் தொகாநிலை யாய்ந்தவெச்சம்
ஒருபது கோளெட்டு முப்பொழு தீரிட மீரியல்பாய்
வருமொழி மூன்று முணரச் சொல்வண்மை வருந்திருவே. ‖ க ‖

பேராறுபத் தொன்று வினைமுப்பத் திரண்டு பொது
வோராறுபத் தெட்டிடையின மூவேழின்—மேலொன்று
உரியிருபத் தொன்றுகச் சொற்சூத்திரத்தின்
விரியிரு நூற்றோரிண்டாய் வேண்டு. ‖ உ ‖

நன்னூல் எழுத்தும் சொல்லுமாக இருவகை
காண்டிகையும் ஒருவகையான் முற்றும்.
ஓராதெழு தினோனுயினு மொண்ப பொருளை
ஆராய்ந்து கொள்க வறிவுடையோர்—சீராகக்
குற்றங்களை ந்து குறைபெய்து வாசித்தல்
கற்றறிந்த மாந்தர் கடன்.

விய௵ ஐப்பசி௴ உ௰அ௳ சனிக்கிழமை இப்படிப்பட்ட சுபதினத்தில் நன்னூல் எழுதி முடிந்தது. முற்றும்.

(கு.-பு.)—

இந்நூல் நன்னூலுக்கு ஓர் விரிவுரையாகும். மயிலைநாதரால் இயற்றப் பட்டது. அச்சிடப் பெற்றிருக்கிறது. இது பழய உரை, பழைய காண்டிகை உரை என்ற பல பெயர்களால் வழங்கப் பெறும். இப்பிரதியில் எழுத் ததிகாரம், சொல்லதிகாரம் என்ற விரு பகுதியும் உள. ஏடுகள் சிதலுற்று உள. அச்சுப் பிரதிக்கும் இதற்கும் பல பேதங்கள் காணப்படுகின்றன.

R. No. 1232.

Palm-leaf. 13 × 1¾ inches. Foll. 218. Lines 10 on a page. Tamil. Injured. Old. Extent 4,360 granthas. Printed.

Purchased in 1938–39 from Sri Muttukkumārasvāmi Ōduvāmūrtti, Tinnevelly Town.

இருசமயவிளக்கம் by அரிதாதர்.
IRUŚAMAYAVIḶAKKAM by ARITĀTAR.

Complete.

An explanation of the doctrines of the two religions, viz., *Śaivism* and *Vaiṣṇavism*.

Beginning :

இரு சமய விளக்கம்.

அலையிட்ட நீரையடக்கும் வடவானலம் போற்
தலையிட்டு வாதுமுயல் சாக்கியர் தம்மைவென்று
மலையிட்ட தீபமெனமால் சமயத்தை மண்மேல்
நிலையிட்ட பூதூர் யதிராசனை நெஞ்சில் வைப்பாம். || க ||

கமழ்கின்ற வாசவகுளச் செழுங் கண்ணியந்தேன்
உமிழ்கின்ற திண்டோளாசைப் பவவோத நீர்க்குள்
அமிழ்கின்ற வென்னைக் கரையேற்று தற்காகவேதந்
தமிழ்செய்த ஞானக்குரு கூரனைத்தாடுதிப்பாம். || உ ||

நாலு முகமாய் நவில்வாணி யென்நாவின்மேவ
மாலுர் நயனங்கவர் பொற்பன் மாக்கணங்க
ளாலுதகரத்துள் வேத்திரத் தையர் தெய்வச்
சேனுபதிச் செம்மலர்த் தாளிணை சென்னிவைப்பாம். || ங ||

நீரேற்ற பாரினுயரா துறுநீடு ஞானக்
கூரேற்ற சிந்தையதிராசர் குலத்துளானைப்
போரேற்று நாயன்றனை வாழ்பெரும் பூதூரானைச்
சீரேற்ற செல்வக் குரு ராயனைச் சிந்தைசெய்வாம். || ச ||

* * * *

கிரிபோல் விளங்கிக் கிளர்க்கும்புயக் கிருட்டிணராயன்
தரைமீது சிங்காத்திரியிற் செயத்தம்பம் நாட்ட
வரமாதர வாலளித்தே வடகூவ மேவுங்
கருமாமணி வண்ணனைநீடு கருத்தில் வைப்பாம். || சு ||

விரிதா தண்ணியுந் தொடை மேவிய வேந்தனுன
வரிதா தனினைத்ததெலா முடித்தாண்ட கோவைத்
தெரிதா தர்வேதகிரித்தடச் செங்கண்மாலைப்
பெரிதா தரிப்பார்க் கரிதோ பிறவாத பேறே. || எ ||

கடவுள் வாழ்த்து முற்றும்.

பாயிரம் : அவையடக்கம்.

வன்பாய்ச்சல் பாயப்பதுங்கும் வரிவேங்கை பொங்கி
மென்பாய்ச்ச லின்றியறியாது வெள்ளா டடக்க
நன்பாக்கள் வல்லோர் நவின்றுரைது நானிலத்துப்
புன்பாக்கரு துந்தமி யேன்புகலா தொழிந்தேன். || க ||

அவையடக்கம் முற்றும்.

பூண்கின்ற பணுடவியா லொளிர்பூத நாதன்
சேண்கொண்ட டலைநேர் திருமேனியந் தேவனென்ன
மாண்கொண்ட டவருட்பரவத் துவை வண்மையாகக்
காண்கின் றதுவே தமியன்றன் கருத்துமாதோ. || உ ||

சதுர்வேதமு மாகமமுங் கொடு சார்ங்கபாணி
விதுவேணிய னென்னும் மூர்த்திகண் மேன்மைநோக்கிற்
கதுவேழ்கடல் சூழுலகத் தவர்கட் கெல்லா மங்
கதுவே யதுவே பரமாய் வியப்பாகையாலே. || ங ||

ஏராரண மாகம நீடி திகாசமாதி
சார்வாகிய நூல் பொதுநூல் கொடு தத்துவத்தை
யாராயு மிடத்தான மால்புக ழுங்குரைக்குஞ்
சீரான மொழிக்கெதி ருத்தரஞ் செப்பவேண்டி. || ச ||

திரமாகிய வாகமமே யொரு செய்யமாது
மருமாமறை மற்றொரு தோகையுமாக நாட்டி
யொருமாதுறை பாகனை மாலையுகந்து போற்று
மிருமாசமயத்து விளக்க மியம்பலுற்றேன். || ரு ||

ஒருதேவதை யேயுலகுக் குயர்நாத னென்ன
வருமாமறை நிச்சயித் தோதியமைத் திருக்க
விருமா சமயத்து விளக்க மென்றிந்தநூற்குத்
திரமாகிய பேர்வரு காரணஞ் செப்பவேண்டில். || சு

திரமுந்திய விப்பெரு நூலிற் செகந்தனக்குப்
பிரமங் களிரண்டுள வென்று பிறித்ததில்லை
இருமை சிவன்மால் சமயங் களையின்ன
வினன தாமென்று விளக்கிய தாதலிற் றக்கதாமே. || எ ||

End :

மிக[மின்னு](விந்நூல்)போற்றெய்வீகம் விளைந்தநூல்கள்வேறில்லை
தொகைமன்னியவிப் பெருநூலிற் சொன்ன பரமார்த்தந்தன்னி
லிகலொன்றின்றி நிறைவேற வெவருட்பட்டா ரவர்தாமே
நிகரின்றியே பூதலமீது நீடுஞ் சருவ[க்கின](ஞ்ஞு)ராவார். || ௩௰௬ ||

அரிதைப்பதிவா ழரிதாத னருமாமறையைத் தமிழ்செய்து
விரிவற்றுரைத்த விருசமய விளக்கநூலின் பரமார்த்தம்
பிரிவுற்றுணர் வாரதுகேட்பார் படிப்பார் பாராட்டுதற்செய்வா
ரிருமைப்பய னென்றுரைக் கின்றவிகழும் பரமும்பெறுவாரே.
|| ௩௰௭ ||

சம்மதப்படலம் முற்றும் || ஆக, உ௩௱௰ ||

வாழித்திருநாமம்.

மனத்தகத்தெமையாளவந்து
நூற்றெண்பதிகள்வாழ் திருமுகுந்தன் வாழி
மலர்மகண் முதற்றேவிமார் அநந்தன்
கருடன் வளர் சேனைமன்னன் முதலாம்
வினைத்தொகையறுக்கு நித்திய சூரியர்
வாழிநால்வேதந்தமிழ்ப்படுத்தி
மேதினியையுய்வித்தமாறர் முதலாழ்வார்கள்
மெய்ப்பதி (ன்) மரிருவர் வாழி
கனத்தவிசை நாதமுனி முதல் மகாபூரண
ரெதிகட்கிறைவர் வரவரமுனி
கருதுநங்குரவர் வரையாரியர்கள் வாழி
பாகவதரரிதாதர் வாழி
எனத்துதிசெய்தீற்றவர் சொல்லிரு சமய
நூற் பொருளினைத்தெரித்துணர்வை
நல்குமிவ்வடிவழகிய நம்பி பரமகுருசாமி
யவ்வினத்தோடெம்முடன் வாழியே. || க ||

முற்றும்.

ஆகப்படலம் || அ௰ || க்குக்கவிகள் உ௩௱௰க முன்தனியன் (ச) ஆகக் கவிகள் || உ௩௱௰ரு ||.

௲அ௱௩௰உ ௵ (1832)௵ பிப்ரவரி௴ (௰அ) 18-ம்௳க்கு சரியான ௲௭௵ கர௵ மாசி௴ அ௳ மந்தவாரமும் அமரபட்சத்து த்விதீயை நாழிகை இ . . க்குமேல் திருதீயை நாழிகை ௫௰சு உத்திர நட்சத்திரம் நாழிகை ௩௰க இ .

* * * *
* * * *

இந்தச் சுபதினத்தில் விடிந்து நாழிகை ச இல் சிதம்பரம் புவன கிரிபட்டணத்தில் தெக்குத்திட்டையிலிருக்கும்? திருநெல்வேலி சுந்தரத் தோள் பிள்ளை தெரு இலட்சுமணப் பிள்ளையவர்கள் குமாரர் நாராயண பிள்ளையவர்கட்கு நாகலாபுரம் திருநெல்வேலி ஷை தெரு வீரவாகு பிள்ளையவர்கள் குமாரன் சூரியநாராயணன் கையினால் தனித்தகை யெழு[த்து](திக்கொடுத்தது)

ஸ்ரீ ராமஜயம்

(கு.-பு.)—

இந்நூல் சைவ வைணவ சமயங்களுக்குள்ள பேதங்களையும் அவை யிற்றிற்கூறிய சித்தாந்தங்களையும் அவ்விரண்டிலும் வரும் சில தடை கட்கு உரிய விடைகளையும் இன்னும் இன்னோரன்ன பலவற்றையும் பல் வேறு புராணங்களிலுள்ள கதைகளைக்கொண்டே யெடுத்து விளக்கி இறுதி யில் திருமாலுக்கே பரத்துவம் உண்டென்றும் உணர்த்திப்போருகிறது. இது தென்கலை சம்பிரதாயத்தில் உள்ள அரிதாதர் என்ற பெரும்புலவரால் இயற்றப்பெற்றதென்று தெரிகிறது. வடமொழியில் கூரேச விஜயத்தைப் போல் தமிழிலும் இஃதாமெனக்கொள்ளக்கிடக்கிறது.

R. No. 1233.

Palm-leaf. 17 × 1¾ inches. Foll. 84. Lines, 12 on a page. Tamil. Injured. Old. Extent 3,872 granthas. Printed.

Purchased in 1938–39 from Sri Muttukkumārasvāmi Ōduvāmūrtti, Tinnevelly Town.

கோயிற்புராணம் by உமாபதிசிவாசாரியார்.
KŌYIRPURĀṆAM by UMĀPATIŚIVĀCĀRIYĀR.

Complete.

Same work as that described under No. D. 571.

(கு.-பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 571-ஆம் நம்பரில் வந்துள்ள பிரதி யேயாம். இதில் இந்நூல் முற்றும் உளது. ஏடுகள் முற்றும் சிதலுற்றுச் சிதைந்துள.

R. No. 1234.

Palm-leaf. 17½ × 1¾ inches. Foll. 136. Lines, 10 on a page. Tamil. Much injured. Old. Extent 5,440 granthas. Printed.

Purchased in 1938–39 from Sri Muttukkumārasvāmi Ōduvāmūrtti, Tinnevelly Town.

வில்லிப்புத்தூரார்ப் பாரதம் by வில்லிப்புத்தூரார்.
VILLIPPUTTŪRĀR BHĀRATAM by VILLIPPUTTŪRĀR.

Incomplete. Breaks off in the 44th stanza of Kiruṣṇantūtüccarukkam.

Same work as that described under No. D. 527.

(கு.-பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 527 ஆம் நம்பரில் வந்துள்ள பிரதி யேயாம். இப்பிரதியில் ஆதி தொடங்கி உத்தியோக பருவத்துக் கிருஷ்ணன் தூதுச் சருக்கம் 44 ஆம் செய்யுளோடு முடிவடைகின்றது. ஆதலின் முற்றுமில்லை. ஏடுகள் முற்றும் சிதலுற்றுச் சிதைந்துள.

R. Nos. 1235 and 1236 (One bundle).

Palm-leaf. 13 × 1¾ inches. Foll. 279. Lines, 10 on a page. Tamil. Slightly injured. Old. Extent 8,368 granthas.

Purchased in 1938-39 from Sri Muttukkumārasvāmi Ōduvāmūrtti, Tinnevelly Town.

R. No. 1235

திருச்சிற்றம்பலக்கோவையார். பேராசிரியர் உரையுடன் by மாணிக்கவாசகர்.

TIRUCCIṞṞAMBALAKKŌVAIYĀR WITH THE COMMENTARY OF PĒRĀŚIRIYAR by MĀṆIKKAVĀCAKAR.

Foll. 1—256. Extent, 7680 granthas. Printed.

Complete.

Same work as that described under No. D. 1169.

Colophon :—*திருச்சிற்றம்பலக்கோவையார் எழுதி முடிந்தது.*

சுப்பிரம்மணியம். தாரு௵ விரோதி ௵ ஆனிமீ ௨௰௧௨ குரு வாரமும், புநர்ப்பூசமும், நவமியும், பூர்வபட்சமும் கூடிய சுபதினத்தில் புவனகிரிப்பட்டணத்திலிருக்கும் தெற்குத் திட்டை இலட்சுமணப் பிள்ளையவர்கள் குமாரர் நாராயணப் பிள்ளையவர்களுக்கு நாகலாபுரத்திலிருந்து திருநெல்வேலி சுந்தரத்தோள் பிள்ளை தெரு வீரவாகு பிள்ளை குமாரன் சூரியநாராயணன் எழுதிக்கொடுத்தது.

(கு.-பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1169 ஆம் நம்பரில் வந்துள்ள நூலேயாகும். இதில் இந்நூல் உரையுடன் முற்றும் உளது. ஏடுகள் சிதலுற்று உள.

R. No. 1236.

திருமுருகாற்றுப்படை, நச்சினார்க்கினியர் உரையுடன் by நக்கீரனார்.

TIRUMURUKĀṞṞUPPAḌAI WITH THE COMMENTARY OF NACCINĀRKKINIYAR BY NAKKĪRANĀR.

Foll. 257—279. Extent 688 granthas. Printed.

Complete.

Same work as that described under No. D. 1200.

(கு.-பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1200-ஆம் நம்பரில் வந்துள்ள பிரதியேயாகும். முற்றும் உளது. ஏடுகள் சிறிது புழுக்களால் அரிக்கப் பட்டுள.

R. Nos. 1237 and 1238 (Ooe bundle).

Palm-leaf. 12¾ × 1¾ inches. Foll. 286. Lines 9—12 on a page. Tamil. Injured. Old. Extent 7,560 granthas.

Purchased in 1938–39 from Sri Muttukkumārasvāmi Ōduvāmūrtti, Tinnevelly Town.

R. No. 1237

திருக்குறள், பரிமேலழகர் உரையுடன் by திருவள்ளுவ நாயனர்.

TIRUKKUṞAḶ WITH THE COMMENTARY OF PARIMĒLAḺAKAR by TIRUVAḶḶUVANĀYANĀR.

Foll. 1—252. Extent 7,160 granthas. Printed.

Complete.

Same work as that described under No. D. 151.

Colophon :—திருவள்ளுவர் உரை முற்றும்

கூடு௰௫ செய௫ மாசிமீ ௰கஉ ஞாயிறு உதிச்சு ௰உ நா[ளி](ழி) கையில் இருஷப லக்னத்தில் ஆசாரியரையும் திருக்கோவிலையும், திரு வேடத்தையும் மிகவும் வழிபட வென்றும் நாயடியேனை இகபரமிரண்டினு மாள்வதற்கு மெழுந்தருளிய மகாராசர் சிவ சூரியநாராயண பிள்ளை யவர்களுக்குக் கிளா[ளா]ங்காட்டிலிருக்கும் பூவுப்பிள்ளை வாத்தியான் திருவள்ளுவர் நாயனர் உரை பாடம் எழுதி முடித்தேன்

* * * *

(கு.-பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 151-ஆம் நம்பரில் வந்துள்ள பிரதியேயாகும் இது உரையுடன் முற்றும் உளது. ஏடுகள் சிதலுற்றுக்கிடக்கின்றன.

R. No. 1238.

திருப்பிரமபுரயமகவுரை.

TIRUPPIRAMAPURA YAMAKAVURAI.

Foll. 253—286. Extent 400 granthas. Not printed.

Incomplete.

A commentary on a poem, in the *Yamakam* style, in praise of God Śiva enshrined at Tiruppiramapuram.

Beginning :

திருப்பிரமபுர யமக உரை

உற்றுமை சேர்வது மெய்யினையே=என்பது, உமாபரமேசுவரியானவள் பொருந்தி சேர்ந்து வாழ்வது நின்னது திருமேனியையே ; உணர்வது நின்னருள் மெய்யினையே=என்பது, யான் உணர்ந்துகொண்டிருப்பது நினது சிவஞானம் பொருந்திய சத்திய தரிசனத்தையே ; கற்றவர் காய்வது காமனையே=என்பது, உனது சத்திய தரிசனத்தே யலைவறவதுவாக நிற்கக் கற்றவர் விராகபாவத்தாலே விடப்பட்டது முன்பற்றின இல்வாழ்க்கையே ; கனல்வழி காய்வது காமனையே=என்பது, கனல் சேர்ந்திருக்கும் திருநெற்றி விழியினுற் சுடுவது காமனாகிய மன்மதனையே ; அற்றமறைப்பது முன் பணியே=என்பது, உனது நிர்வாணத்தை மறைப்பதும் உனது தொங்கலான பாம்புகளே ; அமரர்கள் செய்வது முன்பணியே=என்பது, தேவர்கள் செய்தொழுகுவதும் நினது குற்றேவலையே ; பெற்றும் உகந்தது கந்தனையே = என்பது, ஈன்றெடுத்து விரும்பி கொண்டது கந்தனாகிய சுப்பிரமணியனையே, பிரமபுரத்தை உகந்தனையே=என்பது, திருப்பிரமபுரம் என்னும் திருப்படை வீட்டை உனக்கிடமாக விரும்பினையே என்றவாறு. (க)

End :

விண்டலர் பொழிலணி வேணுபுரத்தான் = என்பது, விண்டு என்பது அரும்புதலாம், அலர் என்பது கட்டவிழ்தல், பொழில் என்பது சோலை, அணி என்பது சூழ்தல், வேணுபுரத்தான் என்பது அரும்புதலையும், அலர்தலையும் உடைய மலர்ச்சோலை சூழ்ந்த வேணுபுரம் என்னும் திருப்பதிக்குக் கருத்தாவானவன் என்றவாறு.

(கு.-பு.)—

இது திருப்பிரமபுரம் என்ற திவ்விய தலத்திற் கோயிற் கொண்டிருக்கும் சிவபிரான்மீது துதி ரூபமாய் "யமகம்", என்ற செய்யுள் வகையிலே அந்தாதியாக அமைந்ததொரு பிரபந்த விசேடத்திற்கு விரிவுரையாகும். இயற்றியவர் இன்னாரென்று விளங்கவில்லை. இது முற்றுப்பெறவில்லை. எழுத்துப்பிழையுடன் உளது. ஏடுகள் சிதலுற்றுமிருக்கின்றன.

R. Nos. 1239 and 1240 (One bundle).

Palm-leaf. 11 × 1½ inches. Foll. 146. Lines, 8—10 on a page. Tamil. Condition slightly injured. Old.

Purchased in 1938–39 from Śri Muttukumārasvāmi Ōduvāmūrti, Tinnevelly Town.

R. No. 1239.

நன்னூற்காண்டிகையுரை.

NANNŪṚKĀṆḌIKAIYURAI.

Foll. 1—137. Not printed. Extent 2,540 granthas.

Similar to the work described under R. No. 1231.

Incomplete.

A commentary on the well-known *Nannūl.*

Beginning:

நன்னூல் மூலமும்—காண்டிகை உரையும்.

மலர்தலையுலகின் மல்கிருளகல
விலகொளி பரப்பி யாவையும் விளக்கும்
பருதியினொரு தானாகிமுதலீ
றொப்பளவாசை முனிவிகந்துயர்ந்த.
* * * *

பன்னருஞ்சிறப்பிற் பவணந்தி
யென்று நாமத் திருந்தவத்தோனே (க)

உரை :—

இது, நூல் செய்தவன் பெயர் முதலாகிய பதினொன்றையும் சொல்கின்றது.

இதனது பதப்பொருள் :—மலர் தலையுலகில் = பரந்த இடத்தையுடைய உலகத்தின்கண்; மல்கிருள் அகல = நிறைந்த இருள்கெட, இல கொளி பரப்பி = விளங்குங்கிரணத்தை விரித்து, யாவையும் விளக்கும் = கண்களுக்குத் தெரியத்தக்க உருவங்களையெல்லாங் காட்டுகின்ற, பருதியின் = சூரியனைபோல, ஒரு தானாகி = உலகங்களுக்கெல்லாந் தான் ஒரு முதலாகி, முதல் + ஈறு, ஒப்பு, அளவு, ஆசை, முனிவு, இகந்து உயர்ந்த = பிறப்பும், இறப்பும், உபமானமும், அளவும், விருப்பமும், வெறுப்பும், ஆகிய இவைகளிற் சுபாவமாக நீங்கி நிற்கையினாலே தலைவனாகிய அற்புதமூர்த்தி = ஞானமே திருமேனியாக உடையவன்
* * * *

திருந்திய செங்கோல் = கோணாத செங்கோலையும் உடைய சீய கங்கன், = சிங்கம் போன்ற கங்கன், அருங்கலை விநோதன் = அரியநூல்களையாராய் தலையே பொழுதுபோக்கு விளையாட்டாகவுடையவன், மொழிந்தனனாக = சொன்னாக, முன்னோர் நூலின் வழியே = முன்னோரிலக்கண நூலின் வழியே, நன்னூற் பெயரின் வகுத்தனன் = நன் னூல் என்னும் பெயரினாற் செய்தனன், பொன்மதிற்சனகை = பொன்மதில் சூழ்ந்த சனகாபுரத்துளிருக்கும், சன்மதி முனியருள் = சன்மதி யென்னும் முனிவன் பெற்ற, பன்னருஞ்சிறப்பிற் பவணந்தியென்னும் நாமத்து = சொல்லுதற்கரிய ஞானவொழுக்கத்துச் சிறப்பினையும், பவணந்தியென்னும் பெயரினையும் உடைய, இருந்தவத்தோன் = பெரிய தவத்தினையுடையோன் என்றவாறு.

பவணந்தியெனவே, நூல் செய்தோன் பெயரும், முன்னோர் நூலின் வழியெனவே = நூல் வந்தவழியும், நான்கெல்லையெனவே நூல் வழங்கும் எல்லையும், நன்னூலெனவே = நூலினது பெயரும், அரும்பொருள்
* * * *

அவன் காலத்திலே பாடப்பட்டு அவனது சபையிலே அரங்கேற்றியதென செய்த காலமும், அரங்கேற்றிய இடமும், சீயகங்கன் சொன்னதினாலும் யாவரிடத்திலுமுண்டாகிய இரக்கத்தினாலும் வகுத்தமையால் காரணமும் பெறப்பட்டனவென்க. சிறப்புப்பாயிரம் முற்றும்.

பொதுப்பாயிரம்.

முகவுரை பதிகமணிந்துரை நூன்முகம்
புறவுரை தந்துரை புனைந்துரை பாயிரம் (உ)

இது பாயிரத்திற்கு வருங்காரணப் பெயர்களை சொல்லுகின்றது.

(இ-ள்.)

முகவுரை = பாயிரத்தினிலக்கணங்களை முன்னேயறியவேண்டி நூலிற்கு முன் சொல்லப்படுதனினாலே முகவுரையென்றும், பதிகம் = ஐந்து பொதுவும், பதினொரு சிறப்பும் ஆகிய பலவகைப்பொருட்களையும் தொகுத்துச் சொல்லுதலினாலே பதிகம் என்றும், அணிந்துரை = நூலினது பெருமை முதலியவை விளங்க அலங்கரித்துச் சொல்லுகையினாலே அணிந்துரை யென்றும், நூன்முகம் = முகவுரையென்றது போல நூன்முகமென்றும், புறவுரை = நூற் சொல்லிய பொருளல்லாதவைகளைச் சொல்லுதலினாலே புறவுரையென்றும், தந்துரை = நூலிலே இல்லாதவைகளைத் தந்து சொல்லுகையினாலே தந்துரையென்றும், புனைந்துரை = அணிந்துரையென்றாற் போலப் புனைந்துரையென்றும், பாயிரம் = பாயிரத்திற்குப் பெயர்களாம் என்றவாறு (உ)

End :

பெயரியல்.

* * * * * * (டீஉ)

அதுவே,

இயற்சொற்றிரிசொலியல்பிற் பெயர்வினை
என விரண்டாகு மிடையுரியடுத்து
நான்கு மாந்திசை வடசொல்லணுகாவழி (டீக)

இது, முன் சூத்திரம் வரைக்கும் சொல்லாவது இதுவெனக் காட்டக் கண்டசொல் இத்துணையாமென்பது உணர்த்துகின்றது.

(இ.-ள்.)

அது = முன்னே காட்டிய சொல், இயற் சொல் = இயற் சொல்லும், திரிசொல் = திரிசொல்லும், என்கிறது, இயல்பின் = தன்மையையுடைய, பெயர்ச் சொல் = பெயர்ச்சொல்லும், வினைச் சொல் = வினைச் சொல்லும், என = என்று, இரண்டாகும் = இருவகையினவாகும், இடைச்சொல் = இடைச் சொல்லும், உரிச் சொல் = உரிச் சொல்லும், அடுத்து = அவற்றுடன் அடுத்து, நான்குமாம் = நான்குமாகும், திசை வடசொல் அணுகா வழி = திசைச் சொல்லும் வட சொல்லும் அவற்றுடன் சேராவிடத்து என்றவாறு. எனவே, அதுவே யெனக் குறித்த சொல் பெயரியற் சொல், பெயர்த் திரிச்சொல். வினையியற் சொல், வினைத்திரி சொல், இடையியற்சொல், இடைத்திரி சொல், உரியியற் சொல், உரித்திரி சொல் என எண் வகைப்படும் என்றும், திசைச் சொல்லும் வட சொல்லும் சேர்ந்தவிடத்துப்பத்து வகைப்படும், என்றுமாம். (டீக)

(கு.-பு.)—

இது நன்னூலுக்கு அமைந்ததொரு பழைய காண்டிகையுரையாகும். இதுவே முந்திய காலத்துக் காண்டிகையுரையென வழங்கப்பெற்றது போலும். உரைத்திறனில் மிகச்சிறந்ததாயுளது. மயிலைநாதர் உரை

யினும் வேறுயது. அருமையாக உளது. இவ்வுரையாசிரியர் இன்னு ரென்று விளங்கவில்லை. அச்சிடப் பெறுதது. இப்பிரதியில் இவ்வுரை பெயரியல் (யஅ) ஆம் சூத்திரம் வரைக்குமே யுளது. ஏடுகளெல்லாம் சிறிது சிதலுற்று இருக்கின்றன. இப்பிரதியில் மாத்திரம், ஒற்றுகளுக்கு அறிகுறியாக மேற்புள்ளிகள் கொடுத்து எழுதப்பெற்றுள.

R. No. 1240.

பிரபுலிங்கலீலை by சிவப்பிரகாச சுவாமிகள்.

PIRABHULIṄGALĪLAI BY ŚIVAPPIRAKĀŚA ŚUVĀMIGAḶ.

Foll. 138—146. Extent 135 granthas. Printed.

Incomplete.

Same work as that described under No. D. 117.

(கு.-பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 117 ஆம் நம்பரில் வந்துள்ள பிரதி யேயாம். இது ஆதி தொடங்கி மூன்றுவதான மாயை உத்பத்திகதி யில் (சு)வது செய்யுள் வரைக்குமே உளது. ஏடுகள் சிறிது சிதைந்துள.

R. No. 1241.

Palm-leaf. 11¼ × 2 inches. Foll. 55. Lines, 10 on a page. Tamil. Condition injured. Old. Extent 1,125 granthas. Printed.

Purchased in 1938–39 from Sri Muttukumārasvāmi Oduvamūrti, Tinnevelly Town.

யாப்பருங்கலக்காரிகை by அமிருதசாகரர் (குணசாகரர் உரையுடன்).

YĀPPARUṄKALAKKĀRIKAI BY AMIRUTASĀGARAR (WITH GUṆASĀGARAR'S COMMENTARY).

Incomplete.

Same work as that described under D. No. 81.

(கு.-பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 81 ஆம் நம்பரில் வந்துள்ள பிரதி யேயாகும். இது, இதன் மூன்றுவதான ஒழிபியலின் ஆரம்பச் செய் யுளினது உரைப்பகுதி வரையிலுமே யுளது. அதுவும் அரைகுறையாகவே யிருக்கிறது. ஏடுகள் மிகச் சிதலுற்றுள. எழுத்துகள் செவ்வனே உள.

R. No. 1242.

Palm-leaf. 8½ × 1¼ inches. Foll. 230. Lines, 8 on a page. Tamil. Condition injured. Old. Extent 1,800. Printed.

Purchased in 1938–39 from Sri Muttukumārasvāmi Oduvāmūrti, Tinnevelly Town.

கந்தர் நாடகம் by பாலசுப்பிரமணிய கவி.
KANDAR NĀṬAKAM BY BĀLASUPPIRAMAṆIYA KAVI.

Complete.

Same work as that described under No. D. 478.

(கு.-பு.)—
இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 478-ஆம் நம்பரில் வந்துள்ள பிரதியே யாம். முற்றும் உளது. ஏடுகள் சிதலுற்றிருக்கின்றன. எழுத்துப் பிழைகள் காணப்படுகின்றன.

R. No. 1243.

Palm-leaf. 12¼ × 1½ inches. Foll. 98. Lines, 12 on a page. Tamil. Condition much injured. Old. Extent 3,528 granthas. Printed.

Purchased in 1938–39 from Sri Muttukumārasvāmi Ōduvāmūrti, Tinnevelly Town.

தாயுமானவர் பாடல் by தாயுமானவர்.
TĀYUMĀNAVARPĀḌAL BY TĀYUMĀNAVAR.

Complete.

Same work as that described under No. D. 1354.

(கு.-பு.)—
இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1354-ஆம் நம்பரில் வந்துள்ள நூலேயாகும். முற்றும் உளது. அச்சிடப்பெற்றுளது. ஏடுகளெல்லாம் மிகவும் சிதலுற்று இருக்கின்றன. பின்னல் பல வெற்றேடுகள் சேர்க்கப்பட்டுள.

R. No. 1244.

Palm-leaf. 18¼ × 1¾ inches. Foll. 101. Lines, 8 on a page. Tamil. Condition much injured. Old. Extent 2,020. Printed.

Purchased in 1938–39 from Sri Muttukumārasvāmi Ōduvāmūrti, Tinnevelly Town.

திருவாய்மொழி by நம்மாழ்வார்.
TIRUVĀYMOḺI BY NAMMĀLVĀR.

Complete.

Same work as that described under No. D. 716.

The Scribe adds:—

கூஅயசுஞ்ஙு ஆவணிமீ ௰௨ திருவாய்மொழி ஸ்ரீகோசம் எழுதத் தொடங்கினது.

௲அ௰௬௵ கார்த்திகை௴ ௰௫௳ பூர்வபக்ஷத்துத்விதீயையும் புதன்கிழமையும் மூலா நட்சத்திரமும் கூடிய சுபதினத்தில், சேஷாத்திரி அய்யங்கார் தாஸன் அழகப்பய்யங்கார் திருவாய்மொழி ஸ்ரீகோசம் எழுதி முடிந்தது.

*   *   *   *

(கு.-பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 716-ஆம் நம்பரில் வந்துள்ள நூலின் பிரதியேயாம். முற்றும் உளது. ஏடுகள் முற்றிலும் சிதலுற்றிருக்கின்றன.

R. No. 1245 and 1246 (One bundle).

Palm-leaf. 13½ × 1½ inches. Foll. 111. Lines, 8 and 9 on a page. Tamil. Condition injured. Old.

Purchased in 1938–39 from Sri Muttukumārasvāmi Ōduvāmūrti, Tinnevelly Town.

R. No. 1245.

பஞ்சதசப்பிரகரணம்.

PAÑCADAŚAPPIRAKARAṆAM

Foll. 1—86. Extent 1,750 granthas. Printed.

Complete.

Same work as that described under No. D. 1565.

(கு.-பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1565-ஆம் நம்பரில் வந்துள்ள நூலேயாகும். முற்றும் உளது. ஏடுகளெல்லாம் மிகவும் சிதலுற்றிருக்கின்றன. இவ்வசன நூல் **வித்தியாரண்ய**ரது நூலினை ஆதாரமாகக்கொண்டது என்பது மாத்திரம் விளங்குகிறது. ஆசிரியர் இன்னாரென்பது விளங்கவில்லை.

R. No. 1246.

தாயுமானவர் பாடற்றிரட்டு by தாயுமானவர்.

TĀYUMĀNAVARPĀḌARṞIRAṬṬU BY TĀYUMĀNAVAR.

Foll. 86—111. Extent 900 granthas. Printed.

Complete.

Same work as that described under No. D. 1354.

(கு.-பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1354-ஆம் நம்பரில் வந்துள்ள நூலேயயாகும். இதில் பரசிவ வணக்கம், பரிபூரணானந்த வணக்கம், நிருத்தகுரு வணக்கம், அருள்குருவணக்கம், சிதானந்த மகிழ்ச்சி, பரமானந்த மகிழ்ச்சி, சிவானந்த மகிழ்ச்சி, ஆனந்த வழக்கம்,

ஆனந்த சாட்சாத்காரம், அருள்கூட்டச் சிறப்பு, பொருள் வணக்கம், சிற்சுகோதய விலாசம், என்கின்ற இப்பகுதிகளே பூரணமாயிருக்கின்றன. ஏடுகள் மிகவும் சிதலுற்றுள.

R. No. 1247 and 1248 (One bundle).

Palm-leaf. 17 × 1¼ inches. Foll. 273. Lines, 10 on a page. Tamil. Condition injured. Old.

Purchased in 1938–39 from Sri Muttukumārasvāmi Ōduvāmūrtti, Tinnevelly Town.

R. No. 1247.

தத்துவப்பிரகாசம் உரையுடன் by தத்துவப்பிரகாசர்.

TATTUVAPPIRAKĀŚAM WITH COMMENTARY BY TATTUVAPPIRAKĀŚAR.

Foll. 1—268. Extent 3,465 granthas. Printed.

Complete.

Same work as that described under No. R. 369.

(கு.-பு.)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 369-ஆம் நம்பரில் வந்துள்ள நூலேயாகும். இது உரையுடன் அச்சிடப் பெற்றிருக்கிறது. இப்பிரதியிலிருந்தும் உரையாசிரியரின் பெயர் தெரியவில்லை. ஏடுகளெல்லாம் மிகச் சிதலுற்றிருக்கின்றன.

R. No. 1248.

சிவஞானபோதம் by மெய்கண்ட தேவர் (உரையுடன்).

ŚIVANĀNABŌDHAM BY MEYKAṆḌA DĒVAR [WITH COMMENTARY].

Foll. 269 (*a*)—273 (*b*). Extent 125 granthas. Printed.

Incomplete.

Same work as that described under No. D. 1275. The name of the commentator is not known.

(கு.-பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1275-ஆம் நம்பரில் வந்துள்ள நூலேயாம். இதில் ஆதி தொடங்கி மூன்றும் சூரணிகையின் தொடக்கம் வரையிலுமே உளது. ஏடுகள் மிகச் சிதலுற்றுள. இதிலிருந்தும் உரையாசிரியர் இன்னாரென்று விளங்கவில்லை.

R. No. 1249.

Palm-leaf. 11¼ × 1½ inches. Foll. 168. Lines, 8 on a page. Tamil. Condition injured. Old. Extent 3,950 granthas. Not printed.

Purchased in 1938–39 from Sri Muttukumārasvāmi Ōduvāmūrtti, Tinnevelly Town.

அகத்தியர் சௌமிய சாகரம் ஆயிரத்திருநூறு by அகத்தியர்.
AKATTIYAR SAUMIYA SĀGARAM ĀYIRATTIRUNŪṞU BY AKATTIYAR.

Incomplete. Wants 105 stanzas in the end.

Deals with *Siddha* Medicine, Alchemy, etc.

Beginning :

அகத்தியர் சௌமிய சாகரம் ஆயிரத்திருநூறு.
ஆதியெனும் பூரணமாய் வெளியாய் நின்ற
அகண்ட சதாசிவத்தினுடையருளே போற்றி
நாதியெனுஞ் சுழிமுனையாய்ப் பிறவையான
ஞான சௌமிய சாகரத்தினருளே போற்றி
வேதியெனும் பரவெளியாய் விளங்குஞ்ஞான
வேதாந்த பரப்பிரமம் சரசுவதியே போற்றி
வாதியெனு முத்பவித்த நாதவிந்தின்
அகண்ட கணபதியினுடை பீடங்காப்பே (க)

* * * *

* * * * (அ)

பாரப்பா புலத்தியனே யஞ்சுநூலும்
பாடினதோர் காவியந்தான் அஞ்சும் பார்த்து
ஆரப்பா சௌமிய சாகரந்தானிந்நூல்
ஆயிரந்தான் திறவுகோலஞ்சுக்குந்தான்
காரப்பா கடலதிக சாத்திரமாமென்னும் பேர்
கருவான நூலதுதான் ஆர்தான் சொன்னூர்
வேரப்பா விந்நூலுஞ் சகலத்துக்கும்
விதித்த விதியுள்ளவர்க்கு இந்நூலாமே. (கூ)

ஆமென்ற விந்நூலிலாகும் விதம்
அருளுகிறேம் புலத்தியனே யருளுவோம்
? நாமங்கள் வழலைமுறை . . . .
முப்பூவினுடை வளங்கள் சொல்வோம்
? மாமென்ற சுன்னங்கள் செயநீர் சொல்லும்
ஒடுங்காத திராவகங்கள் வளஞ்சொல்வோமே. (ம)

சொல்லுவோஞ் செந்தூரங் கோடாகோடி
சுன்னத்தில் வெகு கோடிசெயநீர் கோடி
வெல்லுவோமே வேதையிலே யநந்தங்கோடி
விளங்கின்ற தாரகட்டுகளில நந்தங்கோடி
தெல்லுவோமே திராவகத்திலனேகங்கோடி
செயமான பசுபங்களனந்தங்கோடி
பல்லுவோமே யமிருதபனி நீர்கள் கோடி
பாடலெல்லாஞ் சுருக்கியிந்நூற்பாடினோமே. (மக)

*   *   *   *

End :

நலமான காயாதிகற்பஞ் சொன்னோம்
நாதவிந்து சீவவிந்து நன்றாய்ச் சொன்னோம்
வலமான வைங்கோலத்தைலஞ் சொன்னோம்
மகத்தான பதினெண்பேர்வைப்புஞ் சொன்னோம்
சலமான அப்புனிட பனநீர் சொன்னோம் ?
சமத்தான தேசமதில் கிரிகள் சொன்னோம்
குலமான பூநீரு பூரக்குந்தேசங்
கூறான வண்மையெல்லாங் கூறினோமே, (தூகூமச)

கூறினோஞ்சித்தருடை பெருமை சொன்னோம்
கூறான கரிநாயின் மையைச் சொன்னோம்

*   *   *   *
*   *   *   *
*   *   *   *
*   *   *   *
*   *   *   *
*   *   *   * (தூகூமரு)

(கு.-பு.)—

இந்நூல் வைத்தியம் இரஸவாதம் முதலிய விஷயங்களையெல்லாம் நுவலுகின்றது. இதற்குப் பெயர் அகத்தியர் சௌமிய சாகரமென்றும், அகத்தியராலிது இயற்றப்பெற்றதென்றும் ஆயிரத்திருநூறு பாடல்களால் அமைந்ததென்றும் தெரிகிறது. இறுதியில் 105 பாடல்கள் மாத்திரம் நீங்கலாக மிகுதியான பகுதி முழுமையுமிருக்கிறது. ஏடுகள் சிதலுற்றுளது. பிழையுள. பின்னர் சில ஏடுகளில் அஷ்டகவருக்கச் சக்கிரங்கள் காணப்பெறுகின்றன.

R. No. 1250.

Palm-leaf. 15 × 1¼ inches. Foll. 65. Lines, 6—8 on a page. Tamil. Condition injured. Old. Extent 780 granthas. Printed.

Purchased in 1938–39 from Sri Muttukumārasvāmi Ōduvāmūrtti, Tinnevelly Town.

சித்திரபுத்திரநாயனார் கதை.
CITTIRAPUTTIRANĀYANĀR KATHAI.

Incomplete.

On the story of *Śrī Citragupta Nāyanār*, the 'Accountant of God Yama.'

Beginning :

சித்திரபுத்திரநாயனார் கதை.

சீர்கொண்ட பூதலத்திற் சித்திரபுத்திரனார் கதையைப்
பார்கொண்ட செந்தமிழாற் பாடவே—ஏர்கொண்ட
வார்பூத்த கோலமுலைமாதுமையாளீன்ற வளி
கார்பூத்த குஞ்சரமே காப்பு. (க)

* * * *

சூடசஷூ௵ வைகாசிமீ ௰௨ பூர்வபட்சமும் உத்திர நட்சத்திரமுங் கூடின சுபதினத்தில் நாட்கொண்டு சித்திரபுத்திரநாயனார் கதை சங்கரலிங்கம் எழுதினது. வரிகுற்றம் வரிமாருட்டம் எந்தக் குற்றமுந் திருத்திபடிக்கவும் நாயனார் கதையை.

திருப்பொலிந்து வாழுமிகச் சித்திரபுத்திரர் கதையை
விருப்பமுடனே சொல்லி விநாயகனே முன்நடவாய்
விக்கின விநாயகனே வேழமுகத் தோனே
ஒக்கவிளையாடி வருமுத்தமனே முன் நடவாய்.
ஐந்து கரத்தோனே யானைமுகவேதியனே
தொந்திக் கணபதியே துய்யனே முன்நடவாய்.

* * * *

* * * *

End :

உங்களுக் குண்ணப்பதமு முடுகூறையுந்தந்தோம்நாம்
உங்களுக் கெல்லாப்பதமு மினித்தருவோங் கண்டீரே
இந்தப்படி கணக்கு எழுதிவைத்துக் கொண்டோநாம்
அவ்வீதிவிட்டு மறுவீதி தானும் வந்தார்
எழுதினார் நற்கணக்கர் எழுத்தாணி தானசைய
வாணியர்கள் வீதியிலே வந்தார் பெருங்கணக்கர்
வாணியர்க ளெல்லோரும் வரிசையுடனே கூடி.

(கு.-பு.)—

இந்நூல் வடமொழியில் சித்திரகுப்தன் என்று வழங்கப்பெறும் யமனது கணக்கனுடைய கதையை யெடுத்து உணர்த்துவது. இது அறை குறையாகவே உளது. ஏடுகள் சிதலுற்றுக் கிடக்கின்றன. இது அச்சிடப் பெற்றுளது. அம்மானையென்றபிரபந்த வகையைப்போன்றது.

R. No. 1251.

Palm-leaf. 16 × 1¼ inches. Foll. 58. Lines, 7 and 8 on a page. Tamil. Condition much injured. Old. Extent 790 granthas. Printed.

Purchased in 1938–39 from Sri Muttukumārasvāmi Ōduvāmūrti, Tinnevelly Town.

சித்திரபுத்திரநாயனார் கதை.

CITTIRAPUTTIRANĀYANĀR KATHAI.

Complete.

Same work as the above. But differences in reading are found here and there. The author's name is not known.

Beginning :

சித்திரபுத்திரநாயனார் கதையை
அம்பலவளத் துய்யநிறத் தைங்கரத்து மெய்ஞானக்
கம்பமத வானைதனைக் கட்டுரைத்தாற்—கொம்பாற்
பொருமே வினைவறுமை போக்குமே நாளுந்
தருமே நினைத்ததெலாந் தான். (க)

சித்திரபுத்திரனார் சிவனுமையாள் தன்கணக்கர்
இந்திரலோக மெழுதும் பெருங்கணக்கர்
அத்திசூழ் நாட்டுக்கான பெருங்கணக்கர்
நாட்டுக்கணக்கர் நமனார் பெருங்கணக்கர்
முத்திபதங்கொடுக்கு மூவர்முதல் கணக்கர்
அத்தன் கயிலையச்சுதனார் வைகுண்டம்
சத்திசிவலோகந் தானெழுதுஞ்சீர் கணக்கர்
* * * *
வாகாய்க்கணக்கெழுது வண்மையுள்ள புண்ணியனார்
சித்திரபுத்திரனார் சீமானார் தன்கதையை
ஆசனங்களிட்டு அருளிநிறை நாளில்வைத்து
வாசமுள்ளமருக்கொழுந்து மல்லிகை செந்தாழையும்.

End :

நட்சத்திரப் பதவியில் நன்றாயிருந்தனரே
இந்தக் கதையைப்படித்தவர்கள் கேட்டவர்கள்
இந்திரன்போல் வாழ்ந்து இவ்வுலகத்திலேயிருந்து
நட்சத்திரப்பதவி நாள்தோறும் பெற்றிடுவார்
ஆல்போல்தழைத்து அறுகதுபோல் வேரூன்றி
மூங்கிற்போலன்ன சுற்றமுகியாமல் வாழ்ந்திருப்பார்
சித்திரபுத்திரனார் தன்மராசாவாக்குமமரர் பதிக்கும்
முத்திமோட்சங்கொடுத்த கதை முகிந்தது முற்றும்
குருபாதமே கதி.

(கு.-பு.)—

இது முன் பிரதி போன்றிருக்கிறது. ஆயினும் இதற்கும் அதற்கும் வெகு மாறுபாடுகள் காணப்படுகின்றன. இப்பிரதியிலிருந்தும் இந்நூலாசிரியரின் பெயர் இன்னதென்று விளங்கவில்லை. ஏடுகள் மிகச்சிதைந்துள. எழுத்துப்பிழைகளுள.

R. No. 1252.

Palm-leaf. 12¼ × 1¼ inches. Foll. 223. Lines, 10 on a page. Tamil. Condition injured. Old. Extent 6,690 granthas. Printed.

Purchased in 1938–39 from Sri Muttukumārasvāmi Ōduvāmūrti, Tinnevelly Town.

ஞானவாசிட்டம் by வீரை ஆளவந்தான்.

ÑĀNAVĀŚIṬṬAM BY VĪRAI ĀḶAVANTĀN OR MĀDHAVA BHAṬṬAR.

Complete.

Same work as that described under R. No. 260.

Colophon :

[க]ஆளாசயிஅ (1748)ஞூபின் மேற்செல்லா நின்ற கொல்லம் கதுகூ ஞூ மாசிமீ கூஉ உத்திராயணமான புந்தி வாரத்திற் சுபயோக சுபகாண மும் பெற்ற சுபதினத்தில் சேந்தமங்கலத்தில் சற்குருதேசிக குருசுவாமியா கிய நமச்சிவாய சைவப்பிரகாச குருதேசிகன் பாத தாமரைகளே நியதி யாய்க் கதியாகப்பெற்று இந்த வாசிட்டம் எழுதிமுடித்தேன். ஷ யூர் ஆறுமுகம் பிள்ளை . . . . அடுமை கைலாசம்.

குருபாதமே கதி. பெற்ற புண்ணியம்.

(கு.-பு.)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 260-ஆம் நம்பரில் வந்துள்ள நூலே யாகும். இப்பிரதியில் இந்நூல் முற்றும் உளது. இது அச்சிடப் பெற்றிருக்கிறது. ஏடுகள் எல்லாம் மிகவும் சிதலுற்று உள.

R. No. 1253.

Palm-leaf. 13¼ × 1½ inches. Foll. 158. Lines, 9 on a page. Tamil. Condition injured. Old. Extent 2,390 granthas. Printed.

Purchased in 1938–39 from Sri Muttukumārasvāmi Ōduvāmūrti, Tinnevelly Town.

சிவஞானசித்தியார் பரபக்க உரை by ஞானப்பிரகாசர் (திருவொற்றியூர்).

ŚIVAÑĀNASIDDHIYĀR PARAPAKKA URAI BY ÑĀNAPPIRAKĀŚAR OF TIRUVOṞṞIYŪR.

Complete.

Same work as that described under No. D. 1264.

(கு.-பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1264-ஆம் நம்பரில் வந்துள்ளதேயாகும். இது முற்றும் உளது. ஏடுகள் சிதலுற்றுச் சிதைந்துள.

R. No. 1254-1255 [One bundle].

Palm-leaf. 7¼ × 1¼ inches. Foll. 143. Lines, 8 on a page. Tamil. Condition injured. Old.

Purchased in 1938–39 from Sri Muttukumārasvāmi Ōduvāmūrti, Tinnevelly Town.

R. No. 1254.

விருத்தகிரி புராணம் by ஞானக்கூத்தர்.
VIRUDDHAGIRIPURĀṆAM BY ÑĀNAKKŪTTAR.

Foll. 1—76. Extent 1,216 granthas. Printed.

Same work as that described under No. D. 630.

(கு.-பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 630-ஆம் நம்பரில் வந்துள்ள நூலேயாகும். முற்றும் உளது. ஏடுகள் முற்றும் சிதலுற்றுச்சிதிலங்களாயுள.

R. No. 1255.

திருவருட்பயன் உரையுடன் by உமாபதி சிவாசாரியார்.
TIRUVARUṬPAYAN WITH COMMENTARY BY UMĀPATIŚIVĀCARIYĀR.

Foll. 77—143. Extent 1,082 granthas. Text only printed.

Incomplete.

Similar to the work described under No. D. 1382 with commentary. The commentator's name is unknown.

Beginning :

திருவருட்பயன் உரை.

நற்குஞ்சரக்கன்று நண்ணிற் கலைஞானங்
கற்குஞ் சரக்கன்று காண்.

என்பது, நல்ல [ற்] குஞ்சரக்கன்று நண்ணில் = நல்ல ஞானசொரூபனாகிய யானை முகத்தினையும், என்றும் இளமைத்தன்மையினையும் உடைய விக்கினேசுவரனைப் பொருந்தின், அஞ்ஞானம் நீங்கிச் சிவஞானம்பிரகாசிக்கையினாலே ; கலைஞானங்கற்கும் சரக்கன்று காண் = என்பது, வேதாகமபுராணக்கலைகள்யாவும், கற்கின்றதற்கு அரிது அல்லவென்று அறிவாயாக, என்றவாறு. அரிதல்லவென்ன எளிதின்வரும் என்றது.
இதன்கருத்து ; நல்ல குஞ்சரக்கன்றாகிய பிள்ளையாரை வந்திப்பவருக்குக் கலைஞானம் எளிதின்வரும் என்பது.

எல்லா நிலைக்கும் மேற்பட்டது. நிலைப்பதி நிலையமாதலால் இவ்வதிகாரம் " பதிமுதுநிலை ", என்று வைக்கப்பட்டது. பதி சித்து சடங்களுடனே கூடியது. அதுவாய் நிற்கும் முறைமை எப்படியெனில்,

அகரவுயிர்போல் = என்பது, அகரமாகிய உயிரெழுத்தானது மற்ற அக்கரங்களுக்கெல்லாம் பிராணனாய் அவையிற்றுக்கு வேறுபட்டதாய் நிற்கிற முறைமைபோல. நிகரில் இறை = என்பது, ஒப்பில்லாத கர்த்தாவும். எங்கும் என்பது,

* * * * *

End :

அலைவர் மிக = என்பது, மிகவும் இரங்குவார்கள். என்னவே இவர்களுக்கு இரக்கம் இல்லையாகில் சிவனுக்கும் இரக்கம் இல்லையாகையால் இரங்குவார்க்கென்பது. ஆயின் இவர்கள் திருவருளை அணைந்த முறைமை எப்படியென்னில், "அறிவு காணினழிந்திடுமென்பொடும் பிறவித்துன்பமாய்.",

* * * * *

(கு.-பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1382-ஆம் நம்பரில் வந்துள்ள நூல்போன்றது. இவ்வுரை இன்னாரால் இயற்றப்பெற்றது என்பது தெரியவில்லை. இப்பிரதியில் இறுதிச்செய்யுளின் உரையில் இறுதிப்பகுதி நீங்கலாக முற்றும் உளது. ஏடுகள் புழுக்களான் மிக அரிக்கப்பெற்றுள. எழுத்துப்பிழைகள் தென்படுகின்றன.

R. No. 1256.

Palm-leaf. 17½ × 1½ inches. Foll. 124. Lines, 9—11 on a page. Tamil. Condition much injured. Old. Extent 1,984 granthas. Printed.

Purchased in 1938–39 from Sri Muttukumārasvāmi Ōduvāmūrti, Tinnevelly Town.

தொல்காப்பியம் சொல்லதிகாரம் - சேனாவரையருரையுடன்.

TOLKĀPPIYAM ŚOLLADHIKĀRAM WITH THE COMMENTARY "ŚĒNĀVARAIYAM" BY ŚĒNĀVARAIYAR.

Complete.

Same work as that described under No. D. 54.

(கு.-பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 54-ஆம் நம்பரில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் சொல்லதிகாரம் மாத்திரம் சேனாவரையரது உரையுடன் உளது. ஏடுகள் முற்றும் சிதலுற்றும் சிதைந்துமிருக்கின்றன.

R. No. 1257.

Palm-leaf. 12½ × 1¾ inches. Foll. 188. Lines, 13 on a page. Tamil. Condition injured. Old. Extent 3,620 granthas. Printed.

Purchased in 1938–39 from Sri Muttukumārasvāmi Ōduvāmūrti, Tinnevelly Town.

சதுரகராதி by வீரமாமுனிவர்.

CATURAKARĀDI BY VĪRAMĀMUNIVAR.

Complete.

Same work as that described under No. D. 12.

(கு.-பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 12-ஆம் நம்பரில் வந்துள்ள நூலே யாகும். முற்றும் இல்லை. இரண்டாவது பொருளகராதி முதல் உளது. ஏடுகள் புழுக்களான் அரிக்கப்பெற்று உள.

R. No. 1258.

Palm-leaf. 15½ × 1½ inches. Foll. 321. Lines, 10 on a page. Tamil. Condition injured. Old. Extent 10,415 granthas. Printed.

Purchased in 1938–39 from Sri Muttukumārasvāmi Ōduvāmūrti, Tinnevelly Town.

சிவதருமோத்தரம் by மறைஞான சம்பந்த நாயனுர் ; உரையுடன்.

ŚIVADHARUMŌTTARAM BY MAṞAIÑĀNA SAMBANDA NĀYANĀR WITH COMMENTARY.

Complete.

Same work as that described under No. D. 1287, but many differences are found between these two Manuscripts and the Printed Book.

(கு.-பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1287-ஆம் நம்பரில் வந்துள்ள நூலேயாகும். இதில் இந்நூல் உரையுடன் முற்றும் உளது. ஆயினும் ஷ பிரதிக்கும் அச்சிடப்பெற்ற பிரதிக்கும் இப்பிரதிக்கும் மிக வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஏடுகளெல்லாம் முற்றும் புழுக்களான் அறிக்கப்பட்டுள.

R. No. 1259.

Palm-leaf. 15 × 1½ inches. Foll. 293. Lines, 10 on a page. Tamil. Condition injured. Old. Extent 4,245 granthas. Printed.

Purchased in 1938–39 from Sri Muttukumārasvāmi Ōduvāmūrti, Tinnevelly Town.

திருக்குறள் by திருவள்ளுவ நாயனுர் ; பரிமேலழகர் உரையுடன்.

TIRUKKUṞAḶ BY TIRUVAḶḶUVANĀYANĀR WITH PARIMĒLAḺAKAR'S COMMENTARY.

Incomplete.

Same work as that described under No. D. 151.

(கு.-பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 151-ஆம் நம்பரில் வந்துள்ள நூலேயாகும். இது உரையுடன் முதற்றொடங்கி இறுதியதிகாரமாகிய ஊடலுவகையதிகாரத்தின் இரண்டாங்குறளின் உரைவரையிலுமே உளது. மிகுதியான பகுதி இல்லை. ஏடுகள் புழுக்களான் மிகவும் அரிக்கப் பெற்றுள.

R. No. 1260.

Palm-leaf. 16½ × 1¾ inches. Foll. 76. Lines, 9 on a page. Tamil. Condition much injured. Old. Extent 2,286 granthas. Printed.

Purchased in 1938–39 from Sri Muttukumārasvāmi Ōduvāmūrti, Tinnevelly Town.

சௌந்தரியலகரீ குறிப்புரையுடன் by கவிராஜ பண்டிதர்.
SAUNDARIYALAHARĪ WITH KUṚIPPURAI BY KAVIRĀJA PAṆḌITAR.

Complete.

Same work as that described under No. D. 1736.

Colophon :

சௌந்தரியலகரீ முற்றுப்பெற்றது. துசயிஞு ஐப்பசிமீ உ௲கவ எழுதிமுடிந்தது. திருநெல்வேலி நெல்லையப்பர் காந்திமதியம்மாள் சந்நிதானத்தில் அலங்காரத்தேவாரப்பணிவிடை சாலீவாடீசுவர ஓதுவார் மூர்த்தியவர்களுக்குச் சிதம்பரம் சதாசிவம் எழுதிக்கொடுத்த உபயம்.

(கு.-பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1736-ஆம் நம்பரில் வந்துள்ளதேயாகும். இப்பிரதியில் இந்நூல் ஒரு குறிப்புரையுடன் முற்றும் உளது. ஏடுகள் மிகச்சிதலுற்றிருக்கின்றன. 75, 76-ஆம் ஏடுகளில் இந்நூலின் பாடல்களுக்கு ஒரு முதற் குறிப்பகராதி எழுதப்பெற்றுளது.

R. No. 1261.

Palm-leaf. 14 × 1¼ inches. Foll. 231. Lines, 8 on a page. Tamil. Condition much injured. Old. Extent 5,544 granthas. Printed.

Purchased in 1938–39 from Sri Muttukumārasvāmi Ōduvāmūrti, Tinnevelly Town.

இராமாயண கீர்த்தனை by அருணாசலக்கவிராயர்.
IRĀMĀYAṆA KĪRTTANAI BY ARUṆĀCALAKKAVIRĀYAR.

Complete.

Same work as that described under No. D. 473.

(கு.-பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 473-ஆம் நம்பர் பிரதியில் வந்துள்ளதேயாகும். இது முற்றும் உளது. ஏடுகளெல்லாம் சிதலுற்றுள. அச்சுப் பிரதிக்கும் ஷை பிரதிக்கும் இந்தப்பிரதிக்கும் பல மாறுபாடுகள் காணப்படுகின்றன.

R. No. 1262–1264 [one bundle].

Palm-leaf. 5 × 1⅝ inches. Foll. 138. Lines, 11 on a page. Tamil. Condition injured. Old.

Purchased in 1938–39 from Sri Muttukumārasvāmi Ōduvāmūrti, Tinnevelly Town.

R. No. 1262.

திருவிசைப்பா by திருமாளிகைத்தேவர் (முதலானோர்).
TIRUVIŚAIPPĀ BY TIRUMĀḶIKAITTĒVAR (AND OTHERS).

Foll. 1—74. Extent 740 granthas. Printed.

Complete.

Same work as that described under No. D. 1181.

(கு.-பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1181-ஆம் நம்பரில் வந்துள்ள பிரதியே யாகும். முற்றும் உளது. ஏடுகள் சிதலுற்றுள. அச்சிடப் பெற்றது.

R. No. 1263.

திருப்பல்லாண்டு by திருமாளிகைத் தேவர்.
TIRUPPALLĀṆḌU BY TIRUMĀḶIKAITTĒVAR.

Foll. 75—79. Extent 40 granthas. Printed.

Complete.

Same work as that described under No. D. 1182.

(கு.-பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1182-ஆம் நம்பரில் வந்துள்ளதே யாகும். முற்றும் உளது. ஏடுகள் சிதலுற்றுள.

R. No. 1264.

கோயிற்புராணம் by உமாபதிசிவாசாரியார்.
KŌYIṞPURĀṆAM BY UMĀPATIŚIVĀCĀRIYAR.

Foll. 80—138. Extent 1,180 granthas. Printed.

Complete.

Same work as that described under No. D. 571.

(கு.-பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 571-ஆம் நம்பரில் வந்துள்ளதே யாம். முற்றுமுளது. ஏடுகள் சிதலுற்றிருக்கின்றன.

R. No. 1265.

Palm-leaf. 16 × 1¾ inches. Foll. 48. Lines, 10 on a page. Tamil. Injured. Old. Extent 1,920 granthas. Printed.

Purchased in 1938–39 from Sri Muttukumārasvāmi Ōduvāmūrti, Tinnevelly Town.

இலக்கணக்கொத்து by சுவாமிநாத தேசிகர்.
ILAKKAṆAKKOTTU BY SUVĀMINĀTHA DĒŚIKAR.

Complete.

Same work as that described under No. R. 209.

(கு.-பு.)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 209-ஆம் நம்பரில் வந்துள்ள பிரதியேயாகும். முற்றும் உளது. ஏடுகள் எல்லாம் சிதலுற்றிருக்கின்றன.

R. No. 1266.

Palm-leaf. 9½ × 1⅝ inches. Foll. 59. Lines, 13—16 on a page. Tamil. Condition injured, Old. Extent 1,360 granthas. Printed.

Purchased in 1938–39 from Sri Muttukumārasvāmi Ōduvāmūrti, Tinnevelly Town.

பிரபுலிங்கலீலை by சிவப்பிரகாச சுவாமிகள்.
PIRABHULIṄGA LĪLAI BY ŚIVAPPIRAKĀŚA SUVĀMIGAḶ.

Incomplete.

Same work as that described under No. D. 117.

(கு.-பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 117-ஆம் நம்பரில் வந்துள்ளதேயாகும். இது மாயை உத்பத்திகதியின் (உ௰) ஆம் செய்யுளிலிருந்து ஆரோகணகதி தொடக்கச் செய்யுள் வரையுளது. ஆகவே முற்றுப்பெறவில்லை.

R. No. 1267.

Palm-leaf. 10¾ × 1⅝ inches. Foll. 202. Lines, 10—14 on a page. Tamil. Condition much injured. Old. Printed.

Purchased in 1938–39 from Sri Muttukumārasvāmi Ōduvāmūrti, Tinnevelly Town.

நைடதம் by அதிவீரராம பாண்டியர்; உரையுடன்.
NAIḌATAM BY ATIVĪRARĀMA PĀṆḌIYAR; WITH COMMENTARY.

Incomplete. Wants leaves 69—92 in the middle.

Same work as that described under No. D. 111. The commentator's name is unknown.

(கு.-,பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 111-ஆம் நம்பரில் வந்துள்ள பிரதியேயாகும். இது தொடக்கத்திலிருந்து மணம் புரி படலம் இறுதிகாறும் ஓர் உரையுடன் உளது. உரை இன்னாரதென்று விளங்கவில்லை. இடையில் 69—92 ஆம் ஏடுகள் வரை காணப்பெறவில்லை. ஏடுகளெல்லாம் மிகவும் சிதலுற்று உள.

R. No. 1268-1269 [one bundle].

Palm-leaf. 11 × 2 inches. Foll. 53. Lines, 14 and 15 on a page. Tamil. Condition much injured. Old.

Purchased in 1938-39 from Sri Muttukumārasvāmi Ōduvāmūrti, Tinnevelly Town.

R. No. 1268.

வைராக்கிய சதகம் by சாந்தலிங்க சுவாமிகள்; சிதம்பர சுவாமிகளது உரையுடன்.

VAIRĀGGIYA ŚATAKAM BY ŚĀNTALIṄGA SUVĀMIGAḶ; WITH THE COMMENTARY OF CIDAMBARASVĀMIGAḶ.

Foll. 1—33.

Extent 1,386 granthas. Printed.

Complete.

Same work as that described under No. D. 1611.

(கு.-பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1611-ஆம் நம்பரில் வந்துள்ள நூலே யாகும். இதில், முன் ஐம்பதான "சாத்திரம்", என்ற பகுதி வரை யிலுமே உரையுடனும், பின்னைம்பதான "தோத்திரம்", என்ற பகுதி மூலமாத்திரமுமாக விருக்கிறது. ஏடுகள் சிதலுற்றிருக்கின்றன.

R. No. 1269.

திருமுருகாற்றுப்படை by நக்கீரனார்; நச்சினார்க்கினியர் உரை யுடன்.

TIRUMURUKĀṞṞUPPAḌAI BY NAKKĪRANĀR WITH; THE COMMENTARY OF NACCINĀRKKINIYAR.

Foll. 35—53. Extent 802 granthas. Printed.

Complete.

Same work as that described under No. D. 1200.

(கு.-பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1200-ஆம் நம்பரில் வந்துள்ளதே யாகும். உரையுடன் இது முற்றுமுளது. ஏடுகள் சிதலுற்றிருக்கின்றன.

R. No. 1270—1288 [One bundle].

Palm-leaf. 15¾ × 1¾ inches. Foll. 330. Lines, 7—9 on a page. Tamil. Condition injured. Old.

Purchased in 1938-39 from Sri Muttukumārasvāmi Ōduvāmūrti, Tinnevelly Town.

திருப்பல்லாண்டு by பெரியாழ்வார் ; பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானத்துடன்.

TIRUPPALLĀṆḌU BY PERIYĀḺVĀR; WITH THE COMMENTARY OF PERIYAVĀCCĀN PIḶḶAI.

Foll. 1—47. Extent, 752 granthas. Printed.

Complete.

Same work as that described under No. D. 694.

(கு.-பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 694-ஆம் நம்பரில் வந்துள்ளதே யாகும். முற்றுமுளது. ஏடுகள் சிதலுற்றுள.

R. No. 1271.

கண்ணிநுண்சிறுத்தாம்பு by மதுரகவியாழ்வார் ; பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானத்துடன்.

KAṆṆINUṆ ŚIṞUTTĀMBU BY MADHURAKAVIYĀḺVĀR; WITH THE COMMENTARY OF PERIYAVĀCCĀN PIḶḶAI.

Foll. 47—75. Extent 448 granthas. Printed.

Complete.

Same work as that described under No. D. 672.

(கு.-பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 672-ஆம் நம்பரில் வந்துள்ள தேயாகும். முற்றும் உளது. ஏடுகள் புழுக்களால் அரிக்கப்பட்டுள்ளன.

R. No. 1272.

திருப்பாவை by ஆண்டாள் ; பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானத்துடன்.

TIRUPPĀVAI BY ĀṆḌĀḶ; WITH THE COMMENTARY OF PERIYAVĀCCĀN PIḶḶAI.

Foll. 76—159. Extent 3,000 granthas. Printed.

Complete.

Same work as that described under No. D. 705.

Colophon :

தூமஞூ ஆவணிமீ ௰கூ௳ செவ்வாய்க்கிழமையும், சதுர்த்தசியும் ஆயில்ய நட்சத்திரமும் கூடின சுப தினத்திலே திருப்பாவைக்குப் பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானம் ஸமாப்தம்.

(கு.-பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 705-ஆம் நம்பரில் வந்துள்ளதே யாகும். இந்நூல் முற்றும் உளது. ஏடுகள் புழுக்களால் அரிக்கப் பெற்றிருக்கின்றன.

R. No. 1273.

திருப்பாவை பிரதிபதவுரை.

TIRUPPĀVAI PIRATIPADAVURAI.

Foll. 160—175. Extent 320 granthas.

Complete.

Similar to the work described under No. D. 704. The commentator's name is unknown.

Beginning :

திருப்பாவை பிரதிபதவுரை.

மார்கழி (த்)திங்கள் = மார்கழி மாசத்தில், மதிநிறைந்த ந(ன்னு)ளால் = சந்திரனோடே பூரணமான நன்றாயிருக்கிறதினம், ஆல் = ஆச்சரியத்தில் அசை, நீராட = குளிக்கைக்கு, போதுவீர் = ஸ்நானஸங்கல்பமுடை யவர் என்றபடி. போதுமினோ = வாருங்கோள், நேர் இழையீர் = விலக்ஷணமான ஆபரணத்தையுடையீர், சீர்மல்கும் ஆய்ப்பாடி = ஐச்வர்ய ஸம்ருத்தமான திருவாய்ப்பாடியிலே.

End :

செங்கண் திருமுகத்துச் செல்வத்திருமாலால் = சிவந்திருக்கிற கண்களையும், ஸ்ரீமத்தான முகத்தையும் உடைய உபய விபூதியுக்தனான ஸ்ரீய:பதியாலே ஐஹிகாமுஷ்மிகங்கள் இரண்டிலும், திருவருள்பெற்று ஸ்ரேஷ்டமான ஸாம்ராஜ்யத்தைப்பெற்று, இன்புறுவர் = ஆநந்தத்தைப் பெறுவர். எல் ஓர் என்பவை பாதத்தைப் பூரிப்பவை எம்பாவாய் = எங்கள் நோன்பென்றுதல் எங்கள் ஸ்வாமினி என்றுதல்,

ஆழ்வார் சரணம். சூடிக்கொடுத்த நாய்ச்சியார் திருவடிகளே சரணம்.

(கு.-பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 704-ஆம் நம்பரில் வந்துள்ள பிரதி போன்றதே. இந்நூல் முற்றும் உளது. ஏடுகள் ஒரு சிறிது சிதலுற்றுள.

R. No. 1274.

இராமாநுஜ நூற்றந்தாதி வியாக்கியானம் by ஸ்ரீமணவாள மாமுனிகள்.

IRĀMĀNUJA NŪṞṞANTĀDI VIYĀKKIYĀNAM BY ŚRĪ MAṆAVĀḶAMĀMUNIGAḶ.

Foll. 176—265.

Complete.

Same work as that described under No. D. 670.

(கு.-பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 670-ஆம் நம்பரில் வந்துள்ளதே யாகும். முற்றும் உளது. ஏடுகள் சிறிது சிதலுற்றுள.

R. No. 1275.

அர்த்தபஞ்சகம் by பிள்ளைலோகாசாரியர்.

ARTHAPAÑCAKAM BY PIḶḶAILŌKĀCĀRIYAR.

Foll. 266—274. Extent 180 granthas. Printed.

Complete.

Same work as that described under No. R. 49 (*d*).

(கு.-பு.)—

இந்நூல் மூவருடக்காட்லாக்கு 49 (*d*) நம்பரில் வந்துள்ளதே. முற்றும் உளது. ஏடுகள் சிறிது சிதலுற்றுள.

R. No. 1276.

நிகமநப்படி by பெரியவாச்சான் பிள்ளை.

NIGAMANAPPAḌI BY PERIYAVĀCCĀN PIḶḶAI.

Foll. 275—279 (*a*). Extent 60 granthas. Printed.

Complete.

Same work as that described under No. R. 173 (*d*) of the Sanskrit Part.

(கு.-பு.)—

இது ஸம்ஸ்கிருத மூவருடக்காட்லாக்கு 173 (*d*) நம்பரில் வந்துள்ள நூலேயாகும். இது முற்றும் உளது. ஏடுகள் சிறிது சிதலுற்று இருக்கின்றன.

R. No. 1277.

பிரமேய சேகரம் by பிள்ளைலோகாசாரியர்.

PIRAMĒYA ŚEKARAM BY PIḶḶAILŌKĀCĀRIYAR.

Foll. 279 (*b*)—280 (*b*). Extent 30 granthas. Printed.

Complete.

Same work as that described under No. D. 924.

(கு.-பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 924 ஆம் நம்பரில் வந்துள்ளதே. முற்றும் உளது. ஏடுகள் சிதைந்துள.

R. No. 1278.

நவரத்திநமாலை by பிள்ளைலோகாசாரியர்.

NAVARATTINAMĀLAI BY PIḶḶAILŌKĀCĀRIYAR.

Foll. 280 (*b*)—282 (*a*). Extent 120 granthas. Printed.

Complete.

Same work as that described under No. R. 91 (*e*).

(கு.-பு.)—

இது மூவருடக்காட்லாக்கு 91 (e) நம்பரில் வந்துள்ளதே. முற்று முளது. ஏடுகள் சிறிது சிதைந்துள.

R. No. 1279.

ஸாரஸங்கிரஹம் by பிள்ளைலோகாசாரியர்.

SĀRASAṄGIRAHAM BY PIḶḶAILŌKĀCĀRIYAR.

Foll. 282 (*b*)—284 (*b*) Extent, 35 granthas. Printed.

Complete.

Same work as that described under No. D. 1020.

(கு.-பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1020 ஆம் நம்பரில் வந்துள்ளதே. முற்றும் உளது.

R. No. 1280.

ஆத்மவிவாஹம்.

ĀTMAVIVĀHAM.

Foll. 284 (*b*)—285 (*b*) Extent, 20 granthas.

Complete.

Same work as that described under No. D. 820.

(கு.-பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 820 ஆம் நம்பரில் வந்துள்ளதேயாகும். முற்றும் உளது. ஏடுகள் சிறிது சிதலுற்றிருக்கின்றன.

R. No. 1281.

ஸாரார்த்த சதுஷ்டயம்.

SĀRĀRTHACATUṢṬAYAM.

Foll. 285 (*b*)—287 (*b*) Extent, 35 granthas.

Complete.

Same work as that described under No. R. 105 (*b*).

(கு.-பு.)—

இது மூவருடக்காட்லாக்கு 105 (*b*) நம்பரில் வந்துள்ளதே. முற்று முளது. ஏடுகள் சிறிது சிதைந்துள.

R. No. 1282.

முமுக்ஷுக்ருத்யம் by பெரியவாச்சான் பிள்ளை.

MUMUKṢUKṚTYAM BY PERIYAVĀCCĀN PIḶḶAI.

Foll. 287 (*b*)—291 (*b*) Extent, 75 granthas. Not printed.

Complete.

Same work as that described under No. R. 3155 (*y*) of the Sanskrit Part.

(கு.-பு.)—

இது ஸம்ஸ்கிருத மூவருடக் காட்லாக்கு 3155 (y) நம்பரில் வந்துள்ளதே யாகும். முற்றும் உளது. ஏடுகள் சிறிது புழுக்களான் அரிக்கப்பட்டுள. அச்சிடப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை.

R. No. 1283.

ஸாமக்கிரீ பரம்பரை by பெரியவாச்சான் பிள்ளை.

SĀMAGGIRĪ PARAMPARAI BY PERIYAVĀCCĀN PIḶḶAI.

Foll. 291 (b)—292 (b) Extent, 30 granthas. Not printed.

Complete.

Same work as that described under No. D. 2625.

(கு.-பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2625 ஆம் நம்பரில் வநதுள்ளதே. முற்றும் உளது.. ஏடுகள் புழுக்களால் சிறிது அரிக்கப்பெற்றுள. அச்சிடப்பெறவில்லை.

R. No. 1284.

அவஸ்த்தாத்ரயம்.

AVASTTĀTRAYAM.

Foll. 292 (b)—302. Extent, 200 granthas. Not printed.

Complete.

Same work as that described under R. No. 105 (c). Seems to be by Periyavāccānpiḷḷai.

Beginning :

அவஸ்த்தாத்ரயம்.

"அநாதிமாயயாஸுப்த:", என்கிறபடியே அநாத்யவித்யையாலே ஜ்ஞாநாம்ஸ (?) மயமாய், அத்தாலே அந்யதாஜ்ஞாநவிபரீதஜ்ஞாநமாய், அத்தாலே அஹங்கார மமகாரங்களாய் அத்தாலே ராகத்வேஷங்களாய், அத்தாலே புண்யபாபரூபகர்மங்களாய், அத்தாலே வகாவிஸ்ய ஶரீரமாய், அத்தாலே பெருந்துயரிடும்பையில் பிறந்து சதுரமென்று தம்மைத் தாமே ஸம்மதித்து * * * * * * * *

ஆழ்வார்கள் வசனங்களான இவையிற்றையே பிரமாணமாகக் கொண்ட முமுக்ஷுக்களும், இந்த ஜ்ஞாநம் பிறப்பதற்கு முன்பு ஒரு ஜன்மமும் பின்பொரு ஜன்மமுமாக அநுஸந்திப்பார்கள். முன்பு ஶரீரோத்பாதகன் பிதாவாயும், சுமந்து பெற்றவள் மாதாவாயும், * * * * *

"புலன்படிந்துண்ணும் போகமே பெருக்கிக் போக்கினேன் பொழுதினைவாளா," என்கிற பொழுது போக்காகையும் ஶரீரவியோகம் முடிவாயிருக்கும்;

பின்பு “ஸம்ப்ரதாயவிதா” என்று சொல்லுகிற ஆசார்யன் பிதாவாயும் திருமந்திரம் மாதாவாயும் ஆசார்யன் ஸ்ரீபாதத்திலே ஸம்பந்த முடையவர்கள் ஸோதராக்களாயும் . . . .
“ வாசித்துங் கேட்டும் வணங்கி வழிபட்டும் பூசித்தும் போக்கினேன் போது”, என்கிற பொழுது போக்காயும் ஜ்ஞாநவியோகம் முடிவாயிருக்கும். இந் தப்ரவ்ருத்திநிவ்ருத்தியிறே ப்ரயோஜனமாயர்ரான நம்மாழ்வார் “ நாட்டாரோடியல் வொழிந்து நாரணனை நண்ணினேன் மெய் ”, என்றும், “ நகரமும் நாடுகளும் ஞானமும் மூடமுமாய் ”, என்று அருளிச்செய்தருளிற்று நாட்டாருக்குப்பேர் ஸம்ஸாரிகள், நாகரிகர்க்குப்பேர் ஸ்ரீ வைஷ்ணவர்கள்.

End :

தத்வஜ்ஞாந ஸத்யவ்யவஸாயஜ்ஞாந மாவது :—தேஹஸம்பந்தமும், ஸ்த்ரீ புத்ராதிஸம்பந்தமும், ஐஸ்வர்ய போகமும், கைவல்யஸம்பந்தமும், தமக்கென்று பண்ணும், ஸமஸ்த ஸாதநமும் கட்டடங்கவிட்டு உண்டிட்டாய் இனி உண்டொழியாய் முற்(ற)க்க(ர)ந்தொளித்தாய் பற்றிமைக்கன்புடையேன் ஆவதே பணியாய் எந்தாய் என்றிருக்கை. இப்படி அத்யவஸாய முடைய வதிகாரிக்குக் கிருதஜ்ஞதையும் செய்ய வேண்டும். அதுக்கு அபேக்ஷயும் ஸதாசார்யஸேவையும்.

(கு.-பு.)—

இது மூவருடக்காட்லாக்கு 105 (c) நம்பரில் வந்துள்ள பிரதியை யொத்துள்ளது. ஆசிரியர் பெரிய வாச்சான் பிள்ளையாயிருக்கலாமென ஊகிக்க இடன் உண்டு. முற்றும் உளது.

R. No. 1285.

ஞானஸாரம் by அருளாளப்பெருமாள் எம்பெருமானார்.
ÑĀNASĀRAM BY ARUḶĀḶAPPERUMĀḶ EMPERUMĀNĀR.

Foll. 303 (*a*)—309 (*b*). Extent, 150 granthas. Printed.

Complete.

Same work as that described under No. R. 52 (*a*).

(கு.-பு.)—

இந்நூல் மூவருடக்காட்லாக்கு 52 (a) நம்பரில் வந்துள்ளபிரதி யேயாம். முற்றும் உளது. இதில் ஒவ்வொரு பாட்டுதோறும் அவ் வப்பாட்டுக்குச் சரியாகப் பாவார்த்தங்கொண்ட பல்வேறு நூல்களிலிருந் தெடுக்கப்பெற்ற வடமொழி சுலோகங்கள் பல எழுதப்பெற்றிருக்கின்றன, அவற்றை மணவாளமாமுனிகள் திரட்டிச் சேர்த்தார் என்பர்,

R. No. 1286.

பிரமேயஸாரம் by அருளாளப்பெருமாள் எம்பெருமானுர்.
PIRAMĒYASĀRAM BY ARUḶĀḶAPPERUMĀḶ EMPERUMĀNĀR.

Foll. 309(*b*)—310(*b*). Extent, 25 granthas. Printed.
Complete.
Same work as that described under No. R. 52 (*b*).

(கு.-பு.)—
இது மூவருடக் காட்லாக்கு 52 (b) நம்பரில் வந்துள்ள பிரதியேயாகும். இது முற்றுமுளது. ஏடுகள் சிறிது சிதலுற்றுள.

R. No. 1287.

திருமங்கைமன்னன் மடிபிடி.
TIRUMAṄGAIMANNAN MAḌIPIḌI.

Fol. 311 (*a*). Extent, 25 granthas. Printed.
Complete.
Same work as that described under No. D. 879. Seems to be composed by Periyavāccān Piḷḷai.

(கு.-பு.)—
இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 879 ஆம் நம்பரில் வந்துள்ள பிரதியேயாகும். முற்றுமுளது. ஏடுகள் புழுக்களால் தின்னப்பெற்றிருக் கின்றன. நூலாசிரியர் பெரிய வாச்சான் பிள்ளையாயிருக்கலாமென்று தோன்றுகிறது.

R. No. 1288.

ஆசார்ய ஹ்ருதயம் by அழகியமணவாளப்பெருமாள் நாய ஞர்.
ĀCĀRYA HṚDAYAM BY AḶAKIYAMAṆAVĀḶAPPERUMĀḶ NĀYANĀR.

Foll. 312 (*a*)—330 (*b*). Extent, 475 granthas. Printed.
Complete.
Same work as that described under No. D. 815.

(கு.-பு.)—
இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 815 ஆம் நம்பரில் வந்துள்ளதே யாகும். முற்றும் உளது. ஏடுகள் புழுக்களான் அரிக்கப்பெற்றுள.

R. No. 1289.

Palm-leaf. 15 × 1½ inches. Foll. 91. Lines, 8 on a page. Tamil. Injured. Old. Extent, 2,437 granthas. Printed.

Purchased in 1938–39 from Sri Muttukumārasvāmi Ōduvāmūrtti, Tinnevelly Town.

சிவப்பிரகாசம் உரையுடன் by உமாபதிசிவாசாரியர்.
ŚIVAPPIRAKĀŚAM WITH COMMENTARY BY UMĀPATIŚIVĀCĀRIYĀR.

Complete.

Same work as that described under No. R. 7 (*e*). The commentary is different. Printed. The commentator's name is unknown.

Beginning :

சிவப்பிரகாசம் உரையுடன்.

ஒளியான திருமேனியுமிழ் தானமிக மேவு
களியார வருமானை கழலுளுமறவாமல்
அளியாளுமலர் தூவுமடியார் களுளமா(ள)
வெளியாகும் வலிதாய வினைகூட நினையாவே. (க)

உரை.—ஒளியான திருமேனி=எ-து. ஞானப்பிரகாசமான திருமேனியையும், உமிழ்தான மிகமேவுகளி = எ-து, கவுட்சுவடு உமிழாநின்ற மதமிகப் பொருந்திய அருட்களிப்பினையுமுடைய, ஆரவரும் ஆனைகழல்நாளும் மறவாமல், எ-து. தியானிபபோர், கண்ணும் மனமும் நிறைய வெளிப்படுகின்ற யானை முகத்தனாகிய கணபதியினுடைய சீர்பாதங்களை நாடோறும் மறவாமல், அளியாளும் மலர்தூவும் அடியார்கள் உறமான=எ-து., செவ்வியால் வண்டுகளையாளாநின்ற மலர்களையிட்டு வழிபடுகின்றஅடியவருள்ளமானவைகள், வெளியாகும் = எ.-து., முன்னுண்டான அஞ்ஞானவிருணீங்கிப் பிரகாசமாம் வலிதாய வினைகூட நினையாவே = எ-து, பின்பு வன்மைய[த]ான மூவித வினைகளும் அவர்களைப்பொருந்த விசாரியா என்றவாறு. ஆனை = ஆகுபெயர். அவன்யாண்டுஞ் செறிந்து போக்குவரவின்றி நிற்றலின் வருதல் ஈண்டு வெளிப்படுதன்மேற்று. வினை சாதியொருமை யாதலின் வலிதென்றார். இது கடவுள் வணக்கத்துக்கு முதற் பொதுவாகத் துதித்த விநாயகர் துதி. (க)

End :

திருவருள்கொடுத்து மற்றிச்சிவப்பிரகாச நன்னூல்
விரிவது தெளியுமாற்றல் விளம்பிய வேது நோக்கிப்
பெருகிய வுவமை நான்கின் பெற்றியினிறுவிப்பின்முன்
றருமலை வொழியக் கொள்வோன்றன்மையிற் சாற்றலாமே. (ருய)

உரை.—இது இந்நூலைக் கொடுக்குமுறைமையுங் கொள்வோன்றன்மையும் உணர்த்திற்று. இ.-ள்.—பெருகிய * * * * * * * * தன்மையின் = எ-து., மிகுந்த பண்பு பயன் வினை உருவென்று சொல்லப்பட்ட உவமை நாலுவகை யின்றன்மைகளிலே பொருள்களை நிறுவிமுன் பின் மலைவறப் புத்தியிற்கொள்ள வல்லோனாகிய மாணாக்கனிடத்திலே, இச்சிவப்பிரகாச நன்னூல் விரிவது தெளியுமாற்றல் விளம்பிய ஏது நோக்கி = எ-து., இந்தச் சிவப்பிரகாசமாகிய நல்ல நூலினது பொருள்களின் விரிவுகளைத் தெளியும் நெறியினாலே தீக்கைக்குச் சொல்லப்பட்ட

சத்திநிபாதக்குறிகளையாராய்ந்து, திருவருள்கொடுத்துச் சாற்றலாமே = எ-து, ஞானதீக்கையாலே சிவஞானத்தைப் பிரகாசிப்பித்து இந்த நூலைச் சொல்லலாம் ஆசிரியர்க்கென்றவாறு. மற்று = அசை, ஏகாரம், ஈற்றசை. இதற்கு ஆற்றுநீர்ப்பொருளாக உரைப்பாருமுளர். நூல்விரிவது—நூலது விரிவு என அந்நுவயிக்கப்பட்டது. நன்னூல் என்றது இந்த நூலாற் சிவம்பிரகாசித்தலின். (ருய)

உண்மை முற்றும்.

(கு.-பு.)—

இது மூவருடக் காட்லாக்கு 7 (e) நம்பரில் வந்துள்ள நூலேயாகும். இது ஓர் உரையுடன் உளது. இவ்வுரை அச்சிட்ட பிரதியில் மதுரைச் சிவப்பிரகாசர் செய்த உரைக்குப் பிறகு "வேறு உரை", எனத் தலைப் பெயர் கொடுத்து வெளிப்படுத்தப்பெற்றிருக்கிறது. இவ்வுரையாசிரியன் பெயர் முதலியன ஒருவாற்றானும் விளங்கவில்லை. இவ்வுரை எல்லோராலும் நன்கு மதிக்கப்பெற்றுப் போற்றப்பட்டுவருகிறது. உரைத்திறனும் செவ்வனேயுளது. மற்றிதற்கு இன்னும் பலர் உரை இயற்றியிருக்கிறார்கள் என்று தெரிகிறது. ஏடுகள் சிதலுற்றுள. இது, பொது, உண்மையென்ற இரண்டு பெரும் பிரிவுகளால் அமைந்துள்ளது. முற்றும் உளது.

R. No. 1290.

Palm-leaf. 13-6/16 × 1½ inches. Foll. 242. Lines, 10 on a page. Tamil. Injured. Old. Extent, 7,260 granthas. Printed.

Purchased in 1938–39 from Sri Muttukumārasvāmi Ōduvāmūrti, Tinnevelly Town.

திருச்சிற்றம்பலக் கோவையார் by மாணிக்கவாசகர் ; பேராசிரியர் உரையுடன்.

TIRUCCIṞṞAMBALAKKŌVAIYĀR BY MĀṆIKKAVĀCAKAR; WITH THE COMMENTARY OF PĒRĀŚIRIYAR.

Complete.

Same work as that described under No. D. 1169.

(கு.-பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1169 ஆம் நம்பரில் வந்துள்ள நூலேயாகும். முற்றும் உளது. ஏடுகள் சிதலுற்றிருக்கின்றன.

R. Nos. 1291—1297. [One bundle.]

Palm-leaf. 8¼ × 1 14/16 inches. Foll. 141. Lines, 13 and 14 on a page. Tamil. Injured. Old. Extent, 120 granthas. Printed.

Purchased in 1938–39 from Sri Muttukumārasvāmi Ōduvāmūrtti, Tinnevelly Town.

R. No. 1291.

அகத்தியர் தேவாரத்திரட்டு.
AKATTIYAR TĒVĀRATTIRAṬṬU.

Foll. 1—5. Extent, 120 granthas. Printed.

Incomplete.

Same work as that described under No. D. 1123.

(கு.-பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1123 ஆம் நம்பரில் வந்துள்ள பிரதியேயாம். இதில் திருப்பிரமபுரம், திருவதிகைவீரட்டானம், திருவெண்[ணை] (ணெய்) நல்லூர், திருவாலவாய்த்திருநீற்றுப்பதிகம், என்ற இப்பதிகங்களே இருக்கின்றன. ஏடுகள் சிதலுற்றுள.

R. No. 1292.

தருக்கபரிபாஷை by சிவப்பிரகாசர் (துறைமங்கலம்).
TARUKKAPARIBHĀṢAI BY ŚIVAPPIRAKĀŚAR OF TUṞAI-MAṄGALAM.

Foll. 6—36. Foll. 37—45 are left blank. Extent, 1,296 granthas. Printed.

Incomplete.

Same work as that described under No. D. 2147.

(கு.-பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2147 ஆம் நம்பரில் வந்துள்ளதேயாகும். இது தொடக்கத்திலிருந்து 117 ஆம் வாக்கியமாகிய "அபவர்க்கம் உணர்த்தும் பிரகரணம்" வரையில் உளது. இப்பிரகரணம் முடியவில்லை. ஏடுகள் சிதலுற்றுள. அச்சிடப்பட்டுள்ளது.

R. No. 1293.

சைவசித்தாந்தப்பிரகாசக்கட்டளை by சிவஞான முனிவர்.
ŚAIVASIDDHĀNTAPPIRAKĀŚAKKAṬṬAḶAI BY ŚIVAÑĀNA-MUNIVAR.

Foll. 46—57. Extent, 336 granthas. Not printed.

Incomplete; wants leaves 1—3 in the beginning.

Same work as that described under No. D. 1331.

(கு.-பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1331 ஆம் நம்பரில் வந்துள்ளதேயாகும். இதில் முதலில் 1—3 ஏடுகள் காணப்பெறவில்லை. மிகுதி முற்றுமுளது. ஏடுகள் சிதலுற்று உள. அச்சிடப்பட்டதாகத் தெரியவில்லை.

R. No. 1294.

பதிபசுபாசதரிசனம்.

PATIPAŚUPĀŚADARIŚANAM.

Foll. 58—66. Extent, 270 granthas. Not printed.

Complete.

A short treatise dealing with the characteristics of *Pati*, *Paśu* and *Pāśa* in prose. The name of the author is unknown.

Beginning :

பதி பசு பாச தரிசனம்—பதி தரிசனம்.

பதியென்றும் பசுவென்றும் பாசமென்றும் பதார்த்தங்கள் மூன்று. அவையிற்றிலே பதியாவது சிவன், பசுவாவது ஆன்மாக்கள், பாசமாவது மலமாயை கன்மங்கள். இது தொகை, வகை சொல்லுவாம். இந்தப் பதார்த்தம் மூன்றும் சித்தென்றும் சடமென்றும் இருவிதமாம். அதிற் சித்து ஐந்துவகையாயிருக்கும். அநாதிமுத்தன், ஆதிமுத்தன், பரமுத்தன், சீவன்முத்தன், சீவாத்மா என்று ஐந்து வகை. அதிலே முன்னே சொன்ன அநாதிமுத்தனுனவர் பரமசிவம். . . . .

End :

அப்பொழுது திரோதான சக்தி நிக்கிரஹமும் அனுக்கிரகமும் சத்தி பதிதலுமாகிய சத்திநிபாதம் வரும்வரையே சிவன் ஞானசாரிய ரூபமாய் எழுந்தருளித் தீட்சைபண்ணுதலாகிய அனுக்கிரகம் வரும். அனுக்கிரகத்தாற் சிவசக்திக்கொத்த சிவத்துவாபிவியக்தி சிற்சக்திக்கு விளங்கிச் சருவபொருட் பிரத்தியட்ச சாட்சாத்கார சிவத்துவம் சித்திக்கும்.

பதி பசு பாச தரிசனம் முற்றும்.

ஆறெட் டெழுத்து மேலாறும் பதினலும்
வீறிட்டு நின்ற விந்துவு நாதமுஞ்
சீறிட்டு நின்று சிவாயநம வெனக்
கூறிட்டு மும்மலங் கூப்பிட்டுப் போமே.

திருச்சிற்றம்பலம்.

(கு.-பு.)—

இந்நூல் பதி, பசு, பாசம் என்றவைகளின் இலக்கணங்களைச் சைவ சித்தாந்தத்திற்கேற்ப எடுத்து விளக்குகின்றது. வசனத்தாலமைந்தது. முற்றும் உளது. ஆசிரியர்ப் பெயர் தெரியவில்லை. அச்சிட்டதாகவும் தெரியவில்லை. ஏடுகள் சிதலுற்றுள. இது முடிவுற்ற பின்னர் பஞ்சகவ்விய விதியுணர்த்தும் செய்யுட்கள் மூன்று ஓரேட்டிலும், ஷெ விஷயமான அட்டவணையொன்று ஓர் ஏட்டிலும் எழுதப்பெற்றுள.

R. No. 1295.

ஞானசாரம் by கண்ணுடைய வள்ளலார்.

ÑĀNASĀRAM BY KAṆṆUḌAIYA VAḶḶALĀR.

Foll. 70—79. Extent, 300 granthas. Printed. Fol. 80 is left blank.

Complete.

Same work as that described under No. D. 1342.

(கு.-பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1342-ஆம் நம்பரில் வந்துள்ள நூலேயாகும். கண்ணுடையவள்ளலாரது பிரபந்தங்களில் இதுவும் ஒன்றாகும். அச்சிடப்பெற்றது. ஏடுகள் சிதலுற்றுள.

R. No. 1296.

சிவார்ச்சனுபோதம்.

ŚIVĀRCCANĀBŌDHAM.

Foll. 81—131. Foll. 132 to 135 are left blank. Extent, 1,200 granthas. Not printed.

Complete

A treatise ' On the method of conducting the daily worship of God Śiva ' in 335 stanzas. The name of the author is unknown. But, the first stanza refers to some Sanskrit ' revealed ' texts on *Nitya Ñaimittika* as the original of this work.

Beginning :

சிவார்ச்சனுபோதம்.

எழுத்தாக்கிப்பதமாக்கியலாக்கியருளால்
எவ்வுயிர்க்குமறிவிலக்கு மீசனடி யெண்ணி
வழுத்தாமுன்னுள் அமலனவனருளிச் செய்த
வடமொழியின் நித்திய நைமித்தியமுமதித்தே
விழுத்தசெழுந்தமிழாலே விளம்புவமெய்யன்பர்
விழைந்து பயின்றனுட்டித்து வெய்யவினை யெல்லாம்
ஒழித்தே சென்றுயர்ந்தாமங்குறைந்தமலன் பதத்தின்
ஒன்றியுறைந்திடவுலகமொடுங்கிடுங்காலத்தே. (க)

End :

பெற்றதுதானளித்திடுதல் பிராம்மணருக்குக் கொடுத்திடுதல்
பேரிதனில் நீரினிலிடலொழிந்த பிண்டம்
உற்றவிதியதனுற் சிவசிராத்தம் பண்ணலோங்கிய
நற்றேவர்களும் மானிடருஞ் சுரர்
கற்றுடையார் பிறர்களெல்லாங்களிகூர்வ பெரிதுங்
காதன்மிகுமைந்தினுடை மூன்றுபடியாருஞ்
செற்றிடுவர் துயரனைத்துந்திகழ்ந்திடுவர் உலகிற்
றில்லை நடமாடுமரன்றிருவருளினுலே. (௩௫)

ஆகச் சிவார்ச்சனுபோதம் ௩௩௫ செய்யுட்கள் முற்றும்.

(கு.-பு.)—

இந்நூல் சைவசித்தாந்திகள் எல்லோரும் நாடோறும் அதிகாலை யில் எழுந்திருந்து தங்களுக்குரிய நியம நிட்டைகள் நித்திய தருமங்கள் பலவற்றையும் உணர்ந்து அவைகளின்படியே நாடோறும் ஒழுகுவா ராய் அதன் வழியே சிவனையருச்சிக்குமாற்றினை எடுத்துணர்த்துகின்றது.

முந்நூற்றுமுப்பத்தைந்து செய்யுட்களால் அமைந்துளது. இதன் ஆசிரியர் இன்னாரென்றும் எக்காலத்தவரென்றும் இன்னோரன்ன செய்திகளில் ஒன்றும் இதிலிருந்து விளங்கவில்லை. இது அச்சிடப்பட்டிருப்பதாகவும் தெரியவில்லை. முதற் செய்யுளின் இரண்டாமடியில் "வழுத்தாமுன்னுள் அமலனவன் அருளிச்செய்த வடமொழியின் நித்தியநைமித்தமும் மதித்தே", என்று கூறப்பட்டிருப்பதனால் இந்நூலுக்கு ஆதாரம் வடமொழி நூல்கள் என்பது மாத்திரம் விளங்குகிறது. ஏடுகள் சிதலுற்றுள.

R. No. 1297.

தருக்கஸங்கிரஹம் by சிவஞான முனிவர்.
TARUKKASANGIRAHAM BY ŚIVAÑĀNAMUNIVAR.

Foll. 136—141. Extent, 192 granthas. Printed.

A translation, in Tamil, of the well-known Sanskrit *Tarkasaṅgraha*. By Śivañānamunivar.

Incomplete.

Beginning :

தருக்கஸங்கிரஹம்.

உலகிறையை நெஞ்சுளி றுத்தியுய ராசான்
மலரடியை வந்தித்து வாழ்த்திச்—சொலுவாமால்
நன்கினையர் போதமுற நற்றருக்க சங்கிரக
மென்று மொரு நூற்றமி ழாலிங்கு. (க)

திரவியம், குணம், கன்மம், சாமானியம், விசேஷம், சமவாயம், அபாவம் எனப் பதார்த்தங்கள் ஏழு. அவற்றுள் திரவியங்கள் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், காலம், திக்கு, ஆன்மா, மனம் என ஒன்பதே. உருவம், இரஸம், கந்தம், பரிசம், எண், பரிமாணம் வேற்றுமை, கூட்டம், பிரிவு, பரத்துவம், அபரத்துவம், குருத்துவம், திரவத்துவம், சிநேகம், ஒலி, புத்தி, இன்பம், துன்பம், இச்சை, வெறுப்பு, முயற்சி, தருமம், அதருமம், சம்ஸ்காரம் எனக் குணங்கள் இருபத்து நான்கு. கன்மங்கள் உக்கேபணம், அபக்கேபணம், ஆகுஞ்சனம், பிரசாரணம், கமனம் என ஐந்து.

End :

வாக்கியம் இருவிதம். உலகம், வைதிகம் என. வைதிகம் இறைமொழியாகலான் யாவும் பிரமாணமே. உலகமோவென்னில் ஆத்தன் சொற்றது பிரமாணம். மொழிப்பொருளறிவு சாத்தஞானம், அதன் கருவி உரை. மெய்யனுபவம் தெரிக்கப்பட்டது. பொய்யனுபவமும் மூவிதம். ஐயம், திரிவு, தருக்கம் என்று * * * * * * * ஐயம். உ - ம். குற்றியோ மகனோ எனவரும். மித்தை யறிவு திரிவு. உ - ம். கிளிஞ்சற்கண் இது வெள்ளி—என்பது.

(கு.-பு.)—

மிகுமவ் வோடு கார மகாரம் வட்டம்
வெண்மதி யிரொருபாதி திரிகோண மிவைமேற்
பகருமிரு மருங்குசுழி நடுக்கலப்பை யொன்று
பயில் வலத்துவிந்து வொருகலப்பைப் பாலொன்றும்
நிகரில் விந்துவிடம் படைத்தநல்லலமு மொன்றே
நிலையில்வலம் படைத்தவிர்ந்து திரிசூல நிகழும்
திகழு மிருவிந்து நடுவிரண்டு ரேகை
செறி குடிலங்கலை வடிவந் தெரிபண்ணி ரண்டினுக்கே. (அ)

* * * *
* * * *

(கு.-பு.)—

இது வடமொழி டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 6688-ஆம் நம்பரில் வந்துள்ள "பிராசாத பரமாக்ஷரீ மந்திரம்" என்ற நூலுக்குத் தமிழின் மொழிபெயர்ப்பா யிருக்கலாம் எனத் தோன்றுகிறது. இது எத்துணை பாடல் கொண்டதென்று தெரியவில்லை. இதில் ஒன்பது பாடல் வரையுமே யுளது. எழுத்துப் பிழையுடன் உளது.

R. No. 1357–60 (One bundle).

Palm-leaf. 6¾ × 1¼ inches. Foll. 69. Lines, 9 on a page. Tamil. Much injured. Old.

Purchased in 1938–39 from Sri Kuttukkumārasvāmi Ōduvāmūrti, Tinnevelly Town.

R. No. 1357.

புட்பவிதி by திருவாரூர் ஞானப்பிரகாசர்.

PUṬPAVIDHI By ÑĀNAPPIRAKĀŚAR OF TIRUVĀRŪR.

Foll. 1–8. Extent, 112 granthas.

Incomplete.

A work on the *Śaivasiddhānta*, explaining the kinds of flowers to be used in the worship of God Śiva and Goddess Pārvatī.

Beginning :

புட்ப விதி.

திருவாரூர் ஞானப்பிரகாசர் அவர்கள் அருளிச் செய்தது.

இஃது துறையூர் மடம் பொன்னம்பல சுவாமிகளால் பழுதற ஆராயப் பட்டது—புட்பவிதி.

விநாயகர் காப்பு.

பூமாலை சூடும் பரமற்கு நாயடியேன்
பூமாலை பாடிப்புனைகின்றேன்—மாமாது
வேதத்தலைவரருள் வேழத்தின் பாதமலர்
போதத்தலை மேற், புனைந்து.

சிவன் துதி.

பொன்பூத்த நறவிதழி புரிசடை மேற்புனைந்து
புனலறுகு வெள்ளெருக்கம் பூச்சூடிநளின
மின்பூத்த கருங்குவளை பசுங்குமிழ் செங்காந்தன்
வெண்முல்லை யாக்காம்பலிடப்பாகம் பூத்து
முன்பூத்த புண்டரீகம் வெண்டாமிளரண்டு
முகமலர் விமையவர்கள் அகமலரமுகுந்தன்
தன்பூத்த திருவுந்தியயன் பரவக்கனக
சபையி னடமிடு கடவுள் சரணமலர் சரணம். (உ)

End :

போகங்கள் கொடுக்கும் மலர்கள்

பாதிரியம்பிகைக் கணியி லில்லா ளெய்தும்
பலாசமலரர்ச்சிக்கப் பணிகளுண்டாம்
கேதகையின் மலர் சாத்தச்சிவிகையெய்தும்
இளர்முல்லை மலர்சாத்தக் கவிகையுண்டாம்
தாது மாதளை சாத்தத் தனங்களெய்தும்
தாமரையின் மலர் சாத்தப்பகைகளேகும்
மேதகு நாரத்தையிலை வியந்து சாத்தில்
விரைத்த கரை சாத்தியிடில் பசுவுண்டாமே. (சமக)

தேக்கமழு மெனுமிச்சைக் காடுபல்குஞ்
செங்கழுநீர் மலர்சாத்தப் புரவி யெய்தும்
கா . . . .
* * *
* * *

(சமஉ)

(கு.பு.)—

இது சைவசித்தாந்தத்தைச் சார்ந்ததாய்ச் சிவவழிபாட்டில் இன்னின்ன பூக்களைக்கொண்டு யருச்சிக்கில் இன்னின்ன நன்மைகள் உண்டாம் என்பதனை நன்கு தெளிவிப்பது. முற்றுப்பெறவில்லை. சிதைந்துளது.

R. No. 1358.

நாலடியார் (by சமணமுனிவர்கள்).
NĀLAḌIYĀR (By ŚAMAṆA SAGES).

$10\frac{3}{4} \times 1\frac{1}{2}$ inches. Foll. 9–46. Extent, 600 granthas. Printed.

Incomplete.

Same work as that described under No. D. 176.

(கு.-பு.)—
இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 176 ஆம் நம்பரில் வந்துள்ளதே யாம். முற்றுமில்லை. ஏடுகளெல்லாம் புழுக்களான் அரிக்கப்பெற் றிருக்கின்றன.

R. No. 1359.

திருக்குறள் by திருவள்ளுவர்.
TIRUKKUṞAḶ By TIRUVAḶḶUVAR.

Foll. 47–59. Extent, 280 granthas. Printed.

Incomplete.

Same work as that described under No. D 151.

(கு.-பு.)—
இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 151 ஆம் நம்பரில் வந்துள்ளதே யாம். இதில் "அருளுடைமை" அதிகாரம் வரையுமே யிருக்கிறது. சிதைந்துளது.

R. No. 1260.

திருக்குறள் by திருவள்ளுவர்.
TIRUKKUṞAḶ By TIRUVAḶḶUVAR.

$8\frac{1}{2} \times 1\frac{1}{4}$ inches. Foll. 60–69. Extent, 150 granthas.

Incomplete.

Same work as the above.

(கு.-பு.)—
இது முன் நம்பரில் வந்துள்ள பிரதியேயாகும். இதில் "இர வச்சம்" அதிகாரம் வரைக்குமேயுளது. சிதிலமானது.

R. No. 1361—1388 [one bundle].

Palm-leaf. $12\frac{3}{4} \times 1\frac{1}{2}$ inches. Foll. 232. Lines, 10 on a page. Tamil. Much injured. Old.

Purchased in 1938–39 from Sri Muttukkumārasvāmi Ōduvāmūrti, Tinnevelly Town.

R No. 1361.

புவனகோசம் (உரையுடன்).

BHUVANAKŌŚAM (WITH A COMMENTARY).

Foll. 1–25. Extent, 750 granthas. Not printed.

Complete.

A treatise on cosmology as explained in the *Śaiva Purāṇas*. The author's name is not known.

Beginning :

புவனகோசம் உரையுடன்.

அருணமேவு முலகுக் காதாரசத்தி
யாதியாவுநமனையே யந்தமாகத்
தெருண்மேவு புவ . . . னவனைத்து மானோர்
சிந்தையுற வந்தமிழாற் செப்பவேண்டி
இருண்மேவுகண்டர்மதி துண்டர் காழி
யீசரடி ய . . . . தமது நேசர் தந்த
பொருண் மேவுஞானமத (ப்) புழைக்கை நால்வாய்ப்
போதகத்தை யாதரித்துப் போற்றல் செய்வாம். (க)

அத்தனை வாவிக்கரையில் அழுதுகாட்டும்
அருமறைகடருமிறைவர் அடிகள் போற்றி
நத்து லவுகடல் விடுகன் மிதவை வந்த
நாவர சரிருபதங்கள் போற்றி முன்னாட்
பெத்தமதலையை முதலையின் வாயின்மீட்ட தோன்றல்
கழலிணை போற்றி வாதவூரர்
வித்தகமாகருப்பதங்கள் போற்றியன்பர்
விரிசரணும்புயமலர்கள் போற்றி போற்றி. (உ)

உரை :

என்பது, பரக்கப்பட்ட புகழையுடைய பரநாதத்திலே யெழுந்தருளி யிருக்கும் நாதர் வியாத்தியின் முடியிலே . . . . . புவனத்திலே யாதா . . . . . தீவடிவான வாக்கத்தைப் பொருத்தப் பட்ட வெற்றியையுடைய முப்பத்து . . . . பட்ட வனந்தத் தேவருடனே எழுந்தருளியிருக்கும். இதன் மேல் மேவப் பட்ட வ . . . . யாட்டின கனங் கொடியொ . . . . இதன் மேலலர்ந்த தாமரைப்பூப்போன்ற நான்கு திருமுகங்களும் எட்டுச் சீகத்தங்களுமுடைய காலாக்கின உருத்திர . . . . சிங்காதனத்திலே பரநாதத்திலே யெழுந்தருளியிருக்கப்பட்ட வனந்தருடைய காரிய கர்த்தாவாக எழுந்தருளியிருப்பர், என்றவாறு. (க)

End :

* * * *

இதன்மேல் அநாசிருதபுவனம். அதிலே அநாசிருதை, ஆயிர கோடி இதழையுடைய பத்மாசனத்திலே ஐந்து திருமுகமும் பத்து ஸ்ரீஹஸ்தமுமுடைய அநாசிருதருடைய வாமத்திலே இருப்பள். இதன்

மேல் எண்ணிறந்த பிரகாசத்தையுடைய சமனே கீழுள்ள யாவைக்கும் ஆதாரமாய்ப் பரசிவனுக்குக் காரணமுமாய்ச் சடாத்துவாக்களையு மகன் றுள்ளதாம் என்றவாறு. (௩௨௭)

துன்னுமுன் மனைமேல தன்மிசைக்காலந்
தொழில் சாந்தந் தத்துவம் விகாரம்
வன்னமெய் நாம முதனடு விறுதி
வயதிவை . . . . நீடொளியாய்
முன்னரு மருவாய் மலமாய் எல்லா
முதன்மை யோடறி வனுக்கிரக
மன்னவையுள வாஞ் சிவமஃதடையு
மவர் பரமுத்தரென்றறியே. (௩௨௮)

(கு.-பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2172-ஆம் நம்பரில் வந்துள்ள நூல்போன்றுளது. இப்பிரதியில் மூலமும் அதன உரையுமாக அமைந்துளது. 128 செய்யுட்கள் கொண்டுளது. இது ஷை நம்பர் பிரதிக்கு மூலபாடமாக இருக்கலாமோவென ஊஹிக்கப்படுகிறது.

R. No. 1362.

சிவஞானபோதம் by மெய்கண்ட தேவர்.

ŚIVAÑĀNABŌDHAM By MEYKAṆḌADĒVAR.

Foll. 26–34. Extent, 270 granthas. Printed.

Complete.

Same work as that described under D. No. 1272.

(கு.-பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1272-ஆம் நம்பரில் வந்துள்ள தேயாகும். மூலமாத்திரமுளது.

R. No. 1363.

சிவஞானசித்தியார் பரபக்கம் by அருணந்திசிவாசாரியர்.

ŚIVAÑĀNASIDDHIYĀR PARAPAKKAM By ARUṆANDIŚIVĀCĀRIYAR.

Foll. 36–63. Extent, 640 granthas. Printed.

Complete.

Same work as that described under No. D. 1264. Herein is found the text only.

(கு.-பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1264-ஆம் நம்பரில் வந்துள்ளதே யாகும். முற்றுமுளது. சிதிலமானது.

R. No. 1364.

சிவஞானசித்தியார் சுபக்கம் by அருணந்திசிவாசாரியர்.
ŚIVAÑĀNASIDDHIYĀR SUPAKKAM By ARUṆANDIŚIVĀCĀRIYAR.

Foll. 68–97. Extent, 1,080 granthas. Printed.

Complete.

Same work as that described under No. D. 1258.

(கு.-பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1258 ஆம் நம்பரில் வந்துள்ளதே யாகும். மூலம் முற்றுமுளது. ஏடு சிதிலம்.

R. No. 1365.

சிவப்பிரகாசம் by உமாபதி சிவாசாரியர்.
ŚIVAPPIRAKĀŚAM By UMĀPATI ŚIVĀCĀRIYAR of Koṟṟavaṅguḍi.

Foll. 98–111. Extent, 504 granthas. Printed.

Complete.

Same work as that described under No. D. 1300.

(கு.-பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1300-ஆம் நம்பரில் வந்துள்ளதே யாகும். இப்பிரதியில் முற்றும் உளது. சிதிலமாகவுளது.

R. No. 1366.

சிவநெறிப்பிரகாசம் by சிவக்கொழுந்து தேசிகர்.
ŚIVANEṞIPPIRAKĀŚAM By ŚIVAKKOḺUNDUDĒŚIKAR.

Foll. 112–141. Extent, 590 granthas. Printed.

Complete.

Same work as that described under No. D. 1289.

(கு.-பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1289 ஆம் நம்பர் பிரதியில் வந்துள்ளதேயாம். இப்பிரதியில் முற்றும் உளது. ஏடுகள் சிதைந்துள.

R. No. 1367.

இருபாவிருபது by அருணந்திசிவாசாரியர்.
IRUPĀVIRUPADU By ARUṆANDIŚIVĀCĀRIYAR.

Foll. 143–146 (*b*). Extent, 148 granthas. Printed.

Complete.

Same work as that described under No. D. 1219.

Herein is found the text only.

(கு.-பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1219-ஆம் நம்பர் பிரதியில் வந்துள்ளதேயாம். இப்பிரதியில் முற்றும் உளது. ஏடு மிகச் சிதிலமாயுளது. இதில் மூலமாத்திரம் உளது.

R. No. 1368.

சங்கற்ப நிராகரணம் by உமாபதிசிவாசாரியர்.
SAṄKAṞPANIRĀKARAṆAM By UMĀPATIŚIVĀCĀRIYAR.

Foll. 146 (*b*)–157 (*b*). Extent, 370 granthas. Printed.
Complete.
Same work as that described under No. 1248.

(கு.-பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1248-ஆம் நம்பர் பிரதியில் வந்துள்ளதேயாகும். இப்பிரதியில் இந்நூல் முற்றும் உள்து. ஏடுகள் சிதைந்துள.

R. No. 1369.

போற்றிப்பஃறொடை வெண்பா by உமாபதி சிவாசாரியர்.
PŌṞṞIPPAHṞODAI VEṆPĀ By UMĀPATI ŚIVĀCĀRIYAR.

Foll. 157–160. Extent, 87 granthas. Printed.
Complete.
A work on the *Śaiva Siddhānta.*

Beginning :

போற்றிப்பஃறொடை வெண்பா.

பூமன்னு நான்முகத் தோன் புத்தேளிராங்கவர் கோன்
மாமன்னு சோதி மணிமார்பன்—நாமன்னும்
வேத வேதாந்தம் விளக்கஞ் செய் விந்துவுடன்
நாதநா தாந்தநடு வேதம்—போதத்தால்
ஆமளவுந் தேட வளவிறந்த வப்பாலைச்
சேமவொளி யெவருந் தேறு[ம்] வகை—மாமணிசூழ்
மன்று ணிறைந்து பிறவி வழக் கறுக்க
நின்ற நிருத்தநிலை போற்றி.

End :

போற்றி திருத்தில்லை போற்றி சிவபோகம்
போற்றி யவன் மெய்ஞ்ஞானப் புண்ணிய நூல்—போற்றியெங்கள்
வெம்பந்த வாழ்க்கை விட வேறுய் வந்துண்ணின்ற.
சம்பந்த மாமுனி பொற் றுள்.

(கு.-பு.)—

இது சைவ சித்தாந்த சாத்திர நூல்களில் ஒன்றுகும். கொற்ற வன்குடி உமாபதி சிவாசாரியரால் இயற்றப்பெற்றதாகும். இப்பிரதியில் நூல் முற்றுமுளது. சிதைந்துளது. அச்சிடப் பெற்றுளது.

R. No. 1370.

திருவருட்பயன் by உமாபதி சிவாசாரியர்.
TIRUVARUṬPAYAN By UMĀPATIŚIVĀCĀRIYAR.

Foll. 160 (*a*)–162 (*b*). Extent, 78 granthas. Printed.
Complete.
Same work as that described under No. D. 1379. Text only.

(கு.-பு.)—
இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1379 ஆம் நம்பர் பிரதியில் வந்துள்ளதேயாம். முற்றுமுளது. ஏடுகள் சிதைந்துள. அச்சிடப் பெற்றுளது.

R. No. 1371.

வினாவெண்பா by உமாபதி சிவாசாரியர்.
VINĀVEṆPĀ By UMĀPATIŚIVĀCĀRIYAR.

Foll. 162 (*b*)–163 (*b*). Extent, 25 granthas. Printed.
Complete.
Same work as that described under No. D. 1406.

(கு.-பு.)—
இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1406 ஆம் நம்பர் பிரதியில் வந்துள்ளதேயாம். இப்பிரதியில் முற்றுமுளது. ஏடுகள் சிதைந்திருக்கின்றன. அச்சிடப்பெற்றது.

R. No. 1372.

நெஞ்சுவிடு தூது by உமாபதி சிவாசாரியர்.
NEÑJUVIḌU TŪDU By UMĀPATIŚIVĀCĀRIYAR.

Foll. 163 (*b*)–167 (*a*). Extent, 120 granthas. Printed.
Complete.
Same work as that described under No. D. 314.

(கு.-பு.)—
இந்நூல், டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 314 ஆம் நம்பர் பிரதியில் வந்துள்ளதேயாம். முற்றுமுளது. அச்சிடப்பெற்றிருக்கிறது. ஏடுகள் மிகச் சிதைந்துள.

R. No. 1373.

தேவிகாலோத்தரம்.
DĒVIKĀLŌTTARAM.

Foll. 167–171 (*b*). Extent, 175 granthas. Printed.
Complete.
Same work as that described under No. D. 1388. Text only.

(கு.-பு.)—
இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1388 ஆம் நம்பர் பிரதியில் வந்துள்ளதேயாம். முற்றுமுளது. சிதைந்துளது.

R. No. 1374.

உண்மைநெறி விளக்கம் by தத்துவநாதர்.
UṆMAINEṚI VIḶAKKAM By TATTUVANĀTHAR.

Foll. 171 (*b*)–172 (*a*). Extent, 20 granthas. Printed.

Complete.

Same work as that described under No. D. 1224.

(கு.-பு.)—
இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1224 ஆம் நம்பர் பிரதியில் வந்துள்ளதேயாம். முற்றுமுளது. அச்சிடப்பெற்றுளது.

R. No. 1375.

உண்மை விளக்கம் by திருவதிகை—மனவாசகங்கடந்தார்
UṆMAIVIḶAKKAM By MANAVĀCAKAṄKAḌANDĀR of TIRUVADIKAI

Foll. 172–174. Extent, 108 granthas. Printed.

Complete.

Same work as that described under No. D. 1226.

(கு.-பு.)—
இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1226 ஆம் நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாகும். முற்றுமுளது. அச்சிடப் பெற்றிருக்கிறது. ஏடுகள் சிதைந்துள.

R. No. 1376.

திருவுந்தியார் by உய்யவந்ததேவ நாயனார்.
TIRUVUNDIYĀR By UYYAVANDADĒVANĀYANĀR.

Fol. 175 (*a*) and (*b*). Extent, 36 granthas. Printed.

Incomplete (30 stanzas only).

Same work as that described under No. D. 1385. Text only.

(கு.-பு.)—
இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1385 ஆம் நம்பர் பிரதியில் வந்துள்ளதேயாம். முப்பது பாடல்களே உள. இடையில் ஐந்து ஏடுகள் இல்லை. அச்சிடப்பெற்றது ஏடு சிதிலமாயுளது.

R. No. 1377.

ஞானபூசை.

ÑĀNAPŪJAI.

Foll. 176–177. Extent, 66 granthas. Not printed.

Incomplete.

A treatise on the Śaiva Siddhānta, explaining the method of the worship of God Śiva through Jñāna. The author's name is not known.

Beginning :

ஞானபூசை.

திருநெறியருளே கண்ணு செந்நெறி சிவதன்மத்திற்
றரு நெறி யருள் பொருந்தச் சத்த விற்பத்தி பண்ணி
யொரு நெறி யாக்கலாகா திங் குறுநெறி யொழிந்து சைவப்
பெரு நெறிப் பிணக்கிலாத பிரானெறிப் பின்செல்வாமே.

(சா)

End :

எண்டொகை யுரைப்பித் தோர் போல்
இயம்பினே ரெண்ணி யெண்ணி
மண்டிகழ லகுவைத்து
மற்றை யத் தொகை வழாமற்
கண்டுளந் தெளிதல் போன் முற்
கற்ற சொற் பொருட் கருத்துட்
கொண்டுணர் பவர்க்கி யாவுங்
குறி வழி நடத்த லாமே. (கடு௭)

ஞானபூசாகரணம் முற்றும்.

(கு.-பு.)—

இது சைவசித்தாந்தத்தைச் சார்ந்ததாய்ச் சிவபிரானை ஞான மார்க்கத்தால் வழிபடுமாற்றை விளக்குவதெனத் தெரிகிறது. ஆசிரியர் பெயர் தெரியவில்லை. முதலில் 1—5 பாடல்களடங்கிய ஏடுகள் காணப்பெறவில்லை. சிதைந்துளது.

R. No. 1378.

ஞானதீட்சை.

ÑĀNADĪKṢAI.

Foll. 177–178. Extent, 36 granthas.

Complete.

Explains the details of the *Śaiva Dīkṣā,* or ceremony preliminary to a person's dedication to the worship of God Śiva.

The author's name is not known.

Beginning :

ஞானதீட்சை.

மன்னு பல பிறவிகளின் முன்னே செய்த
வைதிக மாதவ வலியான் மருவிச் சைவந்
தன்னில் வளர் சமய விசேடாதி யான
சரிதை கிரியா யோகந் தரித்து ஞான
நன்னிலைமை பெறச் சத்தி நிபாத மேவி
நாடும் விணிலிறைவனரு ளானண்ணும்
பன்னரிய பரகுருமற் றவனை நாளும்
பணிந்து பணி செயவந்து பலிக்குமன்றே. (க)

End :

தேசுமிகுமருட் பயின்ற சிவப்பிரகாசத்தின்
திருந்து பொது சங்கற்ப நிராகரணந்திருத்தி
யாசி லருள் விளுவெண்பாச் சார்பு நூலால்
அரு ளொளிதற் குறி கூடவனைத்து ஞான
பூசைக்குக் கரணமுன் புகன்றதனிற் புரிந்து
புணர்விக்கச் சிவஞான போத சித்திவழி நூல்
மாசில் சதமணிக் கோவை முன்னூல் சான்று
மருவுதிருமுறை திரட்டு வைத்தன மன்னுயிர்க்கே. (அ)

(கு.-பு.)—

இந்நூல், சைவ சித்தாந்திகளுக்குச் செயற்குரிய சைவதீட்சாகிர மத்தினையுணர்த்துவதாகும். எட்டுப்பாடல்களால் அமைந்துளது. நூலாசிரியர் இன்னாரென்பது விளங்கவில்லை. பிழையுடனுளது. சிதிலமாயது.

R. No. 1379.

ஞானபூசை.
ÑĀNAPŪJAI.

Foll. 178–181. Extent, 108 granthas. Not printed.

Complete.

Same work as that described under No. R 360 (*b*).

(கு.-பு.)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 360 (b) நம்பரில் வந்துள்ள நூலேயாகும். நூல் முற்றுமுளது. ஏடுகள் சிதைந்துள. ஆசிரியர் பெயர் விளங்கவில்லை.

இறுதியில் "போசன விதி" என்ற தலைப் பெயரின்கீழ் நான்கு பாடற்களும், "ஞானேந்திரியேஷ்டி" என்ற தலைப்பெயருடன் இரண்டு பாடற்களும் எழுதப்பெற்றுள. இவையிரண்டும் சைவ சித்தாந்திகளுக்கான நியமங்களையுணர்த்துவனபோலும்.

R. No. 1380.

உபாயநிட்டை வெண்பா by அம்பலவாணத் தம்பிரானுர்.

UPĀYANIṬṬAI VEṆPĀ By AMBALAVĀṆATTAMBIRĀNĀR of TIRUVĀVAḌUTURAI MAṬH.

Foll. 182–184. Extent, 100 granthas. Printed.

Same work as that described under No. R. 349 (*b*).

(கு.-பு.)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 349 (b) *நம்பர் பிரதியில் வந்துள்ளதேயாகும். முற்றுமுளது. இறுதியில் " தசகாரியம் ", " ஞானசாரம் ", என்ற பெயர்களுடன் சில சுலோகங்கள் இரண்டேடுகளில் வரையப் பெற்றிருக்கின்றன. மிகவும் சிதைந்தது.*

R. No. 1381.

வீர சைவ சித்தாந்தம் (வசனம்.)

VĪRAŚAIVA SIDDHĀNTAM (PROSE).

Foll. 187–208. Extent, 500 granthas. Not printed.

Incomplete ; wants one leaf in the beginning. A work on the *Vīraśaiva siddhānta,* explaining the more important principles of *Vīraśaivism,* the names of its *Āgamas* and *Upāgamas,* in prose. The name of the author is not known.

Beginning :

வீர சைவம்.

மற்று மந்தப் பரமேசுவர[னி](ரி)ன் மித்மான செகத்தினிடத்தில் தன்ம சரீரியென்பித்துக் கொண்டு . . . . . சைவருள்ளும் அதி விசிஷ்டனுகி இதர சைவரைப் போல் கிரியாவைகுலியத்திலிருந்து ? அற்பபலம் படாதே அற்பக்ரிய . . . லிருந்து அனந்த பலமும் பெறுமவனுகிச் சிவதீட்சையின்மேலே ஸ்நாந போசன நித்திரை சாகரணம் மலமூத்திபம் . . காலங்களிடத்தில் அசுசி பாவனை தோன்றுதே சதாசிவலிங்காங்க ஸம்பநதியாகி இலிங்க போக உபயோகியாய் . . . .

End :

அந்தக் கர்த்தரினும், சன்னுசிகள் அதிகம். அந்தச் சந்நியாசிகளினும் ஞானிகள் அதிகம். அந்த ஞானிகளினும் சிவார்ச்சகர் திகர். அந்த சிவார்ச்சகரிலும், இலிங்காங்க சங்கிகள் அதிகம். அந்த இலிங்காங்க சங்கிகளிலும், சட ஸ்தல சிவஞானி சாக்ஷாத்காரிகள் அதிகம். அந்தச் சிவசாக்ஷாத்கார சடஸ்தல ஞானிகளுக்கே மூன்று லோகத்திலும், அகில பிரமாணங்களிலும் சமனில்லை. இந்த முமுக்ஷுக்களிலிருந்து சடஸ்தல ஞானிகளான வீரசைவரையே வணங்கப் பூசிக்க யோக்கியம். இது முதலானதெல்லாம் கிரியா பாதத்தினில் பிரதிபாதிப்பதாயிருக்கும். ஒரு சிவயோகி சாக்ஷாத்கார ஞானியே சகலருக்கும் குருவாம்.

ஸ்ரீசாலீவாடீசுவரோ ரக்ஷது.

(கு.-பு.)—

இந்நூல் . வீரசைவசித்தாந்த சாத்திரத்தைச் சார்ந்ததாய், அம் மதக் கோட்பாடுகள் யாவற்றையும் நன்கு வசன நடையில் அறிவு றுத்துகின்றது. 201 முதல் 208 வரையான ஏடுகளில் ஷெ மதத்திற்கு ஆதார மாகவுள்ள ஆகமங்கள் உபாகமங்களுடைய பெயர்கள் இன்னவை யென்று குறிக்கப் பெற்றிருக்கின்றன.

R. No. 1382.

அண்டப்பிரமாணம் (வசனம்.)

ANḌAPPIRAMĀṆAM (PROSE).

Foll. 209-214. Extent, 300 granthas. Not printed.

Almost complete.

A treatise on Hindu cosmology in prose. The name of the author is not known.

Similar to the work described under No. D. 2170.

Beginning :

அண்டப்பிரமாணம்.

அணு (அ) திச்ரரேணு. அது (அ) கொண்டது மயிர் நுனி, அது (அ) கொண்டது ஈர். அது (அ) கொண்டது பேன். அது (அ) கொண்டது நெல். அது எட்டுக்கொண்டது அங்குலம்.

அது உஸச, கொண்டது முழம். அது (நான்கு) (ச) கொண்டது வில். அது 2 கொண்டது தெண்டு. அது (உங) கொண்டது கூப் பீடு என்றும் குரோச மென்றும் பெயர். அது (ச) கொண்டது காதம் என்றும் யோசனை யென்றும் பெயர். பூமிக்கனங்கோடி யோசனை அகலம். கிழக்கு மேற்கு நூறு கோடி யோசனை. தெற்கு வடக்கு நூறு கோடி யோசனை. இதன் நடுவே பொன்மயமாக மகாமேரு பதினாறாயிரம் யோசனை. பூமிக்குக் கீழும் எண்பத்து நாலாயிரம் யோசனை. பூமிக்கு மேலுமாக நூறாயிரம் யோசனையு மாய் இதை எழு கடலுஞ் சூழ்ந்திருக்குந் தாமரைக்காய் போன் றிருக்கும்.

End :

* * * *

ஒழிந்த ஆறுக்கும் இப்படிப் பாதாளம், நிதலதலம் சுதலதலம், மகாதலம். ரபீர்(ரஸா) [தலம்,] ? பாதாளம் ஆக ஆறு. இவைக்கு மேல் வெளி பத்து நூறாயிரம். ஆடகேசுவரபுவனம் ஒன்பது நூறாயிரம் பூமிக்கனங் கோடி ஆகஐம்பது கோடியாகக் கீழ்மேல் நூ . . . .

(கு.-பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2170 ஆம் நம்பர் பிரதியில் வந்துள்ளதை யொத்ததாகும். இப்பிரதி அனேகமாக முற்றிய தென்றே தோன்றுகிறது. இறுதியில் ஒரு சிறிது எழுதப்பெறுமல் உளது. ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

R. No. 1383.

சிவாசிரமத் தெளிவு by அம்பலவாணத் தம்பிரான்.
ŚIVĀŚIRAMATTEḶIVU By AMBALAVĀṆATTAMBIRĀN.

Foll. 215-218 (*b*). Extent, 120. Printed.
Complete.
A work on the *Śaivasiddhānta*.

Beginning :

சிவாச்சிரமத் தெளிவு.

* * * *

செய்யுமுலக ? தருமணிக்குஞ் சேர்சிவமாய்
உய்யுஞ் சிவதரும வொண்மணிக்கும்—மெய்யுறவே
பரவுஞ் சமையாதிப் பண்பொன்றே நற்றரும
மரவது * * * வென்பேத மறை. (௩)

End :

சிவாச்சிரமத் தெளிவைச் செய்தெழுபதாகப்
பவாச்சிரம மாற்றிப் பணிந்தான்—சிவாசிரமத்
தென்று வடுதுறையிற் றேவம்பலவாணன்
என்னுகத்தின் பாயெழுந்து. (எக)

சிவாச்சிரமத் தெளிவு முற்றும்.

(கு.-பு.)—
இந்நூல் சைவ சித்தாந்தத்தில் பண்டார சாத்திரம் பதினைங்களுள் ஒன்றாகும். அம்பலவாண தேசிகரால் இயற்றப்பெற்றது. இப்பிரதியில் முற்றுமிருக்கிறது.

R. No. 1384.

சன்மார்க்க சித்தியார் by அம்பலவாண தேசிகர்.
SANMĀRGGASIDDIYĀR By AMBALAVĀṆA DĒŚIKAR.

Foll. 218-220. Extent, 198 granthas. Printed.
Complete.
This work is considered to be one of the 14 *Śāstras* of the *Śaivasiddhānta*, which are called *Paṇḍāraśāstras*.

Beginning :

சன்மார்க்க சித்தியார்.

அறிந்தேமெய் யாவடுதண் டுறையிற் கூட்டஞ்
செறிந்தேமெய் யம்பலவாணன் சீர்—நிறைந்தேமே
சன்மார்க்க சித்திதருதலினுன் முன்னுறைந்த
துன்மார்க்கம் போக்கற்குச் சூழ்.
சிறியே னறியாமை தீர்ப்பதற்குப் புத்தி
யறியே னெனினு மருவி—னெறியே
முளைத்தார் கணீர்மை முதிர விளுவுற்றேன்
அளித்தா ணமச்சிவாயா. (க)

End :

காயமெனக் குள்ளடங்கக் காதலித்தயான் கருணை
நேயநீ யாயடங்கி நிற்பதனுக்—காயநிட்டை
வைத்தாய் சிவ ஞானவாரியருண்மல்லேறே
யத்தா நமச்சிவா யா. (உஅ)

சன்மார்க்க சித்தியெனச் சாற்றியிரு பாவெட்டை
புன்மார்க்கஞ் சென்றோர்க்குப் போக்கினான்—நன்மார்க்கங்
காட்டா வருமறையிற் கண்ணம்பல வாணன்
றுட்டா மறை யெனக்குத் தந்து. (க)

சன்மார்க்க சித்தியார் முற்றும்.

(கு.-பு.)—

இந்நூல் சைவ சித்தாந்த சாத்திரத்தில் "பண்டார சாத்திரம் பதினான்கு", எனறவற்றுள் ஒன்றாகும். ஏடுகள் மிகச் சிதைந்துள. அச்சிடப்பெற்றது. அம்பலவாண தேசிகர் இயற்றியது.

R. No. 1385.

பதி பசு பாச அட்டவணை.

PATI PAŚU PĀŚA AṬṬAVAṆAI.

Foll. 220–221. Extent, 28 granthas. Not printed.

Complete.

A treatise relating to the *Śaivasiddhānta*.

Beginning :

பதி பசு பாச வட்டவணை.

பெற்ற பிறப்பே பிறப்பா வடுதுறையில்
உற்றம் பலவாண னேயுகந்து—சொற்ற
பதி பசு பாசப் பனுவலினை வாக்கால்
மதி பகர்வாய்த்தலினும் வந்து. (க)

அறிவுபதி யறிவித்தால்
அறிவதான்மா அறிவித்தாலும்
அறியாது ஆணவம் மாயை
யறிவும் அறியாமையுமாம்.

End :

கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை யென்றும் நாலோடே கூடியிருக்கிறதுமல்லவே. ஆகையினாலே நிட்டை யென்பதெல்லாம் சுருதி குருவாக்குச் சுவானுபவத்துடனே கூடியிருக்கிறதே நிட்டை யெனவறிக.

பதி பசு பாசப் பனுவலருள் செய்தான்
பதி பசு பாசத் தெரிவோர் மற்றப்—பதி பசுவா
மாற்று வடுதுறையில் வந்தம்பல வாணன்
நோற்றார் கணேக்கக் கதி.

(கு.-பு.)—

இந்நூல், அம்பலவாண தேசிகரியற்றிய "பதி பசு பாசம்", என்ற நூலுக்குச் சுருக்கமாய் அதின் உள்ளடக்கப் பொருளை யெடுத்து விளக்குகின்றது. அவரது சீடரில் ஒருவர் இதனை இயற்றியிருக்க லாம்.

R. No. 1386.

அதிசயமாலை by அம்பலவாண தேசிகர்.

ATIŚAYAMĀLAI By AMBALAVĀṆADĒŚIKAR.

Foll. 221–226. Extent, 96 granthas. Printed.

Complete.

This work is considered to be one of the 14 *Paṇḍāraśāstras* of the *Śaivasiddhānta*.

Beginning :

அதிசயமாலை.

கண்ணுகுங் கண்ணு முயிர்க்கா வடுதுறையிற்
றண்ணுகு மம்பலவாணற்ற குதி—யெண்ணி
யதிசயமாலை யறைந்தத்தைத் தேர்ந்து
கதிசெயுமா லாற்கண்டு கண்டு. (க)

End :

அதிசயமாலை யருளெ[றுப்]பு பாலுறும்
மதிசெய் மலமாற்றவைத்தான்—துதிசெய்வோர்
கூடா வடுதுறையிற் கூடம்பல வாணன்
வீடா யென் னெஞ்சில் விளைந்து

அதிசயமாலை[மா] (மு)ற்றும்.

வடிவேல் துணை.

(கு.-பு.)—

இது சைவ சித்தாந்தத்தில் "பண்டார சாத்திரம்" என்ற பெய ரால் வழங்கப் பெறும் நூல்கள் பதினுன்கனுள் ஒன்ருகும். திரு வாவடுதுறை அம்பலவாணத் தம்பிராஞல் இயற்றப்பெற்றது. 76 பாடல் களமைந்தது. முற்றுமுளது. ஏடுகள் மிகச் சிதிலமானவை.

R. No. 1387.

நிட்டைவிளக்கம் by அம்பலவாணத் தம்பிரான்.

NIṬṬAIVIḶAKKAM By AMBALAVĀṆATTAMBIRĀN.

Foll. 226 (*b*)–228 (*b*). Extent, 40 granthas. Printed.

Complete.

Same work as that described under R. No. 349 (*a*).

(கு.-பு.)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 349 (*a*) நம்பர் பிரதியில் வந் துள்ளதேயாம். முற்றுமுளது. அச்சிடப்பெற்றது.

R. No. 1388.

உபதேசவெண்பா by அம்பலவாணத்தம்பிரான்.

ŬPADĒŚAVEṆPĀ by AMBALAVĀṆATTAMBIRĀN.

Foll. 228 (*b*)–231. Extent, 90 granthas. Printed.
Complete.

This work is considered to be one of the 14 *Paṇḍāraśāstras* of the *Śaivasiddhānta*.

Beginning :

உபதேச வெண்பா :

இன்னம் பெறுமே யெமக்கவ் விருசெவியு
மன்னம் பெறுமம் பலவாணன்—பொன்னா
வடுதுறை மேற் செய்த வுபதேச வெண்பா
தொடுத்துறையைக் கேட்கையினாற் சூழ்ந்து. (க)

End :

உபதேச வெண்பா நாற்பத்து மூன்றாய்யு
முபதேச மாக வுரைத்தான்—உபதேசம்
பண்ணா வடுதுறையிற் பண்ணம்பல வாணன்
கண்ணா ரமுதாய்க் கலந்து.

இதற்குப் பிறகு பாஷண்ட நிராகரணம், தசகாரியம், நமச்சிவாய மாலை என்றறியவும்.

(கு.-பு.)—

இந்நூல் சைவசித்தாந்த சாத்திரத்தில் " பண்டார சாத்திரம் " பதினான்கனுள் ஒன்றாகும். திருவாவடுதுறை அம்பலவாண தேசிகராலியற்றப்பெற்றது. மற்று, இறுதியிற் காணப்பெறும் மூன்று நூற்களின் பெயர்கள், முன்னொரு காலத்து இவைகளுடன் கலந்திருந்தவைகளின் பெயர்கள்போலும். அவை, இப்போது இங்குக் காணப்பெறவில்லை.

R. Nos 1389 to 1404 (one bundle).

Palm-leaf. 9¾ × 1¾ inches. Foll. 205. Lines, 12 on a page. Tamil. Much injured. Old.

Purchased in 1938–39 from Sri Muttukkumārasvāmi Ōduvāmūrti of Tinnevelly Town.

R. No. 1389.

வேதாந்தசூளாமணி உரைச்சுருக்கம்.

VĒDĀNTACŪḶĀMAṆI URAICCURUKKAM.

Foll. 1–26. Extent, 810 granthas. Not printed.
Incomplete.

This work is considered to be a summary of the commentary on the *Vēdānta cūḷāmaṇi*, which is described under No. D. 1604. The author's name is not known.

Beginning :

வேதாந்த சூளாமணி உரைச்சுருக்கம்.

பேதாந்தந் தெளிவதற்குப் பிரபஞ்சம்
விஞ்வியருளப் பெற்று மேலும்
போதாந்த மறிபவர்கள் கருத் தேற
நால் வேதப் பொருளாய் முற்றும்
வேதாந்த சூளாமணியின் உரை விரிவைச்
சுருக்கமதாய் விளம்ப வேண்டி
நாதாந்த சொரூபமதாம் ஞான
விநாயக னிருதாள் நம்புவாமே. (க)

வேதம்—இருக்கு, யசுசு, சாமம், அதர்வணம் ஆக வேதம் நான்கு (ச). சாத்திரம்—சந்தசு, கற்பம், வியாகரணம், சிட்சை, சோதிடம், நிருக்தம் ஆகச் சாததிரம் ஆறு (சா). நியாயம், மீமாம்சை (உ) ஆக ௰உ. மிருதி, புராணம் (2) ஆகப் பதினுன்கு (௰ச).

End :

சீவன் முத்தி சமாதிநிட்டைகளைப் பொருந்தித் தன்னுலும் பிற ராலும் உண்ர்வு தோற்றுமல் இருப்பன். விதேக முத்தி, மேலே சொல்லிய சீவன்முத்தர்கள் தேக அந்தியத்தின் மேல் ஒருக்காலத் திலும் ஒருதேசத்திலும் ஒரு சரீரமுமெடாமல் சச்சிதாநந்த நித்ய பரிபூரண சொரூபமாயிருப்பது.

சுரோத்திராதி (ரு) ஐந்து தானம்.—சுரோத்ரம் = உட்காது. தொக்கு = தேகம், சட்சுசு = கண், சிங்குவை = நாக்கு, ஆக்கி ராணம் = மூக்கு ஆக (ரு).

* * * * *

கரணுதி நான்கில்.—மனம்=கண்டத்தில், புத்தி=இருதயத்தில், சித்தம்=நாவியில், ஆங்காரம் சருவாங்கமும் ஆகக் கரணம் (ச) தானம்.

(கு.-பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1604 ஆம் நம்பர் பிரதியில் வந்துள்ள வேதாந்த சூளாமணியினது உரைக்கு இது சுருக்கமாய் அமைந்ததென்று நூன் முதலிற் காணப்பெறும் சொற்றொடரா லறியப் படுகிறது. முற்றுமில்லை. மிகச்சிதைந்துளது.

R. No. 1390.

கைவல்லியநவநீதம் by தாண்டவராயமூர்த்தி.
KAIVALLIYANAVANĪTAM By TĀṆḌAVARĀYAMŪRTTI.

Foll. 28–37. Extent, 480 granthas. Printed.
Incomplete.
Same work as that described under D. No. 1481.

End :

Colophon :

இன்னிலந்தனி[ல்க] (ற்) கைவல்லிய
நவநீதமெனப் பேரிட்டு
நன்னிலமருவும் **நாரா
யணன்** சொன்ன ஞானநூலைப்
பன்னியா ராய்ந்து பார்ப்போர்
பரமார்த்த சொரூபமாகி
மன்னிய வனைத்தும் பொய்யா
யா னந்த மெய்யாய் வாழ்வார். (௱கூ)

தத்துவவிளக்கம் சம்பூர்ணம்.

(கு-பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1481 ஆம் நம்பரில் வந்துள்ள நூலே. இதில் முதல் பிரிவாய "தத்துவ விளக்கம்", என்பது மாத்திரமுளது. இறுதிச் செய்யுள் இதனை "நாராயணன்", என்றவர் இயற்றியதாகக் கூறுகிறது. அச்சிடப் பெற்றது.

R. No. 1391.

சங்கற்ப நிராகரணம் by ஸ்ரீசங்கராசாரியர்.

SAṄKAṞPANIRĀKARAṆAM By ŚRĪ ŚAṄKARĀCĀRIYAR.

Foll. 38–45. Extent, 384 granthas. Not printed.

Complete.

This work is considered to be written by Śrī Śaṅkarācārya ; on the *Advaita Vēdānta.*

Beginning :

சங்கராசாரியசுவாமிகள் சொன்ன சங்கற்ப நிராகரணம் :—

சங்கராசாரியசுவாமிகள் கலைஞான மேறுகையில் வந்து கண்டித்த பரமத வாதிகள் சங்கைக்கு உத்தரம் :—

அகண்ட பூரணமாயிருக்கும் பிரம்மமென்னில் அந்தகார வடிவான அவித்தை பொருந்தி நில்லாது. அந்த அவித்தையில்லையெனில் தன் காரியமாயிருக்கின்ற ஆவரணமும் விட்சேபமும் எதிரிட்டு நிற்கக் கண்டதே ; அதுவுமில்லையெனில் அப்போது ஆசாரியரும் வேதமுமில்லையென்றுபோமென்ற சங்கைக்கு (உத்தரம்) அஞ்ஞானதசையிற் காட்டத்தில் அக்கினியிருக்குமாகையால் ஆவரணமும் விட்சேபமுமுண்டு. அரணிகொண்டு காட்டத்தைக் கடைந்த காலத்துக் காட்டத்திற் செனித்த வக்கினி, காட்டத்தைக் கெடுத்தாப் போலே ஆசாரியரும் அபேதவாக்யத்தினாலே ஆவரணத்தைத் தெரிசிப்பித்து நீக்கி விட்சேபத்தைக் கெடுத்து இரண்டறச் சொரூப நிச்சயம் பண்ணினபடியினாலே பிரம்ம ஞானத்திற்கும் அவித்தைக்கும் விரோதம் இல்லை. மேல் விவகார தசையிலே ஆசாரியரும் வேதமும் வேணும் என்று உத்தரம். (௧)

End :

சித்து விலாசத்தினுல் தோன்றும் சகம் சீவன் முத்தனுக்கு நட்டமானுல் சித்து நித்தியமாயல்லவோயிருக்கவேண்டும். ஆரோபமும் அதிட்டானமும் போம் என்முற் சூனியமாம் என்கின்ற சங்கைக்கு—சுவபாவஞானம் ஒன்றுமே சத்தியமானபடியால் சொரூபத்திற்கு ஹாநியில்லை என்று உத்தரம். (எ௰சு)

சங்கராசாரிய[ர்] சுவாமிகளாற் சொல்லப்பட்ட சங்கற்ப நிராகரணம் சம்பூரணம்.

(கு.-பு.)—

இந்நூல் சங்கராசாரியரால் அத்வைத விஷயமாக இயற்றப் பெற்றது. அம்மதத்தில் நிகழும் வினுக்களுக்குத்தக்க விடைகள் கூறப் பெற்றிருக்கின்றன. முற்றுமுளது. அச்சிடப் பெறவில்லை. சிதைந் துளது.

R. No. 1392.

பஞ்சபத மகாவாக்கியம்.

PAÑCAPADAMAHĀVĀKKIYAM.

Foll. 46–69. Extent, 750 granthas. Not printed.

Incomplete. Wants leaves 1–28 in the beginning. A treatise on the *Advaita Vēdānta*, explaining the "*Mahāvākyas*" in prose. The author's name is not known.

Beginning :

சுத்தாவத்தை மூன்ருவது—பரப்பிரமம் தானனதேசாக்கிரம், இதில் நீங்கி நின்றதே சொற்பனம், பரப்பிரம லயமே சுழுப்தி, ஆகச் சுத்தாவத்தை ௩, ஆக அவத்தை ௰உ.

* * * *

ஆகப்பதம் ஐந்திற்கும் அவத்தை கூ௰ ; முற்றும்.

End :

ஐந்து பதத்தில் நாலுபதம், நாலில் மூன்று பதம், மூன்றில் இரண்டுபதமும், இரண்டில் ஒரு பதமும் இருக்கையால் இது சம்பவப் பிரமாணம் என்றறிக. அது சம்பவத்திற்கு அதீதலட்சணம் என்றறிக.

* * * *

நீ யென்னும் மகாவாக்யம். இதில் சம்பாவனே விபரீதபாவனே போக்கிச் சற்குருநாதற்குக் கிருபைவரக் கிருபை பண்ணி இதனுல் பரிபூரணகிருபை வந்து இவ்வாக்கியத்தால் பல பல விதமாய்த் தெளியக்கேட்டுச் சாட்சாத்காரமானதே நிவிருத்தி வாக்கியம் என்று பெயர் சொல்லப்படும் என்றறிக.

வாக்கிய சிந்தனே முற்றும்.

* * *

Colophon :

திருச்சிற்றம்பலம். பஞ்சபத மகாவாக்கிய சம்பிரதாயத்திற் சாத்திர வரலாறு. பாரம்பரியம் எழுதி நிறைந்தது. முற்றும். மணப் பாடு வீரவாகு கையெழுத்து.

(கு.-பு.)—

இந்நூல் அத்துவைத வேதாந்தத்தைச் சார்ந்ததாய் மகா வாக்யத்தின் உட்கருத்துக்களைப் பல சிறு பிரிவுகளைக் கொண்டு எடுத்து உணர்த்துவது. வசன நடையிலமைந்துளது. ஆசிரியர் பெயர் இன்னதென்று இதினின்றும் தெரியவில்லை. முதலில் 1—28 ஆன ஏடுகள் காணப்பெறவில்லை. சிதைந்துளது.

R. No. 1393.

வேதாந்த வுரைப்படிக் கட்டளை.

VĒDĀNTĀVURAIPPAḌIKKAṬṬAḶAI.

Foll. 70–82. Extent, 520 granthas. Not printed.

Complete.

Same work as that described under No. D. 1608. The author's name is not stated. But the title of this work is different from that of No. D. 1608.

(கு.-பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் 1608-ஆம் நம்பர் பிரதியில் வந்துள்ளதேயாகும். இது "வேதாந்தத் துண்மை தத்துவமசி மகா வாக்கியம் பிரதம தரிசனம்" என்ற பெயரால் குறிக்கப்பட்டுளது.

R. No. 1394.

ஒருமொழி மகாவாக்கியம் (வசனம்).

ORUMOḺI MAHĀVĀKKIYAM (PROSE).

Foll. 83–85. Extent, 60 granthas. Not printed.

Complete.

Same work as that described under No. D. 1466.

(கு.-பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1466-ஆம் நம்பர் பிரதியில் வந்துள்ளதேயாகும். இப்பிரதியில் முற்றுமுளது.

R. No. 1395.

ஒருமொழி மகாவாக்கியம்.

ORUMOḺI MAHĀVĀKKIYAM.

Foll. 85–87. Extent, 60 granthas. Not printed.

Complete.

This work is considered to be a rendering into verse of the work described under No. D. 1466. The author's name is not stated.

Beginning :

ஒரு மொழி மகா வாக்கியம்.

காப்பு.

ஒருமொழிமகா வாக்கியத்தி னுரையதனைக்
கவிதையதா யுரைக்கவேண்டிக்
குருவடிவாங் குமரகுரு பரமுருகன்
திருவருள் கொண்டெந்நாளும்
நிருமலமாஞ் சச்சிதாநந்த
நித்தியபூரணமாய் நிகழு ஞானத்
திரு நிறையுஞ் செந்தூர்வாழ்
துண்[டு] (டி) விநாயகனருளாற் செப்பு வேனால். (க)

சற்குரு சொரூபம்.

ஆற்மாக்கள் முத்திபெற வாக்கு
மனோதீத கோசமா யென்றுங்
காற்குமருள் பாச வயிராக்கியமாய்ச்
சீவகாருண்ணியமாயும்,
ஏற்கு மீசர் பத்தி பிரம்மக்கியானம்
நான்கு மிகத்தில் வந்து
ஆற்குமறி வரிதாகும் பொருள் விளங்க
வுரைக்குஞ் சற்குருவேயாமால். (உ)

சற்சீடன் சொரூபம்.

நித்திய வநித்திய வத்து விவேக
விகாமுத்ரார்த்த பல போகவிராக
சத்திய சமாதி சட்கம் முமுட்சு
வொரு நான்குஞ் சற்சீடனைகப்
பத்தி பண்ணினு மவற்கிந்த முறையை
யனுக்கிரகிப்பர் பரமானந்த
சித்தமுள வருட்குருவா மென வேத
முடிவுணர்ந் தோர் செப்புவாரால் (ங)

உபதேசம்.

சாதனமாஞ் சதுட்டையமோர் வடிவாகுஞ்
சீடனுக்குத் தான் போதிக்க
ஏதுவா முலகத்தில் வயித்திய னேயாளனைப்
பார்த்திதற்குத் தக்க
வாதர வா மருந்து கொடுத்தக்கண்மே
தீர்ப்பது போலா சானேக்கிப்
போதமறிவித்தந்த சீடன்றன்
பவநோயைப் போக்குவானால். (ச)

End :

அனுபவஞ் சொல் சீடனுக்குக் குரு
வுரைப்பரது வேதச் சொரூப முத்தத்
தனுவதன் பரியந்த மிப்படி நீயா
யாகவென்று சாற்றி யினிநம
தனுபவமு மிப்படியே சுருதி
முடிவிதுவு மீதே
யெனவொரு மொழி வாக்கியத்துண்மை தனைச்
சீடனுக்கிசைத்தல் முற்றே. (மசு)
ஒருமொழி, மகாவாக்கியம் முற்றும்.

Colophon :

ஆறுமுக னிருதாளை யனுதினங்
கூறுமடியவர் தாளையனுதினம்
நாறுமலர் கொடு பூசை பணுமவர்
மாறு படு பவ மாறு பவர்களே.

(கு.பு.)—

இந்நூல் " தத்துவ மசி ", மகாவாக்கிய விஷயமாய்ச் சீடனுக்கு உண்டாகும் ஐயங்களைத் தெளிவிப்பது. ஏடுகள் சிதைந்திருக்கின்றன. ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1466 ஆம் நம்பரில் வந்துள்ள நூலுக்குச் செய்யுள் நடையான் அமைந்த தொரு நூலெனத் தெரிகிறது.

R. No. 1396.

சகச மெய்ஞ்ஞானம்.

SAHAJAMEYÑÑĀNAM.

Foll. 88–103. Extent, 400 granthas.

Complete.

Same work as that described under No. R. 910.

(கு.பு.)—

இது, மூவருடக் காட்லாக்கு 910 ஆம் நம்பர் பிரதியில் வந்துள்ள தேயாம். இப்பிரதியில் சமாதி சகசம் முதலாக விவேக சகச மீறுகவுளது.

R. No. 1397.

இலட்சணவிருத்தி தத்துவக்கட்டளை by சேஷாத்திரி சிவனார்.

ILAKṢAṆAVIRUTTI TATTUVAKKAṬṬAḶAI By ŚEṢĀDRI-ŚIVANĀR.

Foll. 104–119. Extent, 488 granthas. Printed.

Incomplete.

Same work as that described under No. D. 1542.

(கு.பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1542 ஆம் நம்பரில் வந்துள்ள தேயாகும். முற்றுப்பெறவில்லை. சிதைந்துளது.

R. No. 1398.

வைராக்கிய சதகம் by சாந்தலிங்க சுவாமிகள்.
VAIRĀKKIYAŚATAKAM By ŚANTALIṄGASUVĀMIGAḶ.

Foll. 120–125. Extent, 280 granthas. Printed.
" Śāttiram " only complete.
Same work as that described under No. D. 1610.

(கு.-பு.)—
இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1610-ஆம் நம்பரில் வந்துள்ள பிரதியேயாகும். இப்பிரதியில் முதற் பிரிவாய சாத்திரம் மாத்திரம் உளது. தோத்திரம் ஆரம்பித்து முதற்பாடல் மட்டுமுளது.

R. No. 1399.

நவசங்கை விவேகம்.
NAVAŚAṄKAI VIVĒKAM.

Foll. 126–131. Extent, 132 granthas. Not printed.
Complete.
Same work as that described under No. D. 1559.

(கு.-பு.)—
இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1559-ஆம் நம்பரில் வந்துள்ள நூலேயாகும். முற்றுமுளது.

R. No. 1400.

தத்துவமசி மகாவாக்கியம்.
TATTUVAMASI MAHAVĀKKIYAM.

Foll. 132–146. Extent, 300 granthas. Not printed.
Complete.
Same work as that described under No. D. 1551.

(கு.-பு.)—
இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு " 1551 "-ஆம் நம்பர் பிரதியில் வந்துள்ளதேயாம். முற்றுமுளது. ஆசிரியர்பெயர் இன்னதென்று தெரியவில்லை.

R. No. 1401.

இராக துவேஷாதி நிரூபணம்.
IRĀGADUVĒṢĀDINIRŪPAṆAM.

Foll. 147–148. Extent, 40 granthas. Not printed.
Complete.
A work on the *Śaivasiddhānta*, explaining the nature of *Rāga*, *Dvēṣa*, etc. The author's name is not known.

Beginning :

இராகதுவேஷாதி நிரூபணம்

ஏகாதசவர்ணகத்திலே சொல்லுகிறபடி இனிமுன் பிரதிஞ்ஞை செய்த துக்காதி சத்தக்கிரமத்திலே துக்கமும், செனனமும், கர்மமும், இராக துவேஷமும், உத்தரோத்தர ஏதுவாகச் சொல்லி இந்த அஞ்சாம் வர்ணகத்திலே அந்த ராகதுவேஷவிருத்திபேதங்களுஞ் சொல்லி அப் பால் நின்ற அபிமானமும் அவிவேகமும் அக்கியானமும் அடைவிலே சொல்லுகிறுர் :—

ஆனுல் இந்த இராகதுவேஷங்கள் ஆவது ஏதென்றுல் :— இராகம் என்றும், துவேஷம் என்றும் காமம் என்றும், குரோதம் என்றும் உலோபம் என்றும் . . . .

* * * *

End :

ஆகையினுலே புருஷனுனவன் தன்னுடைய சித்தத்தைத் தானே சோதிச்சு அறிந்து ஏதுவான இராகாதி தோஷங்களை வர்ச்சித்துச் சுத்த ஏதுவான பத்திசிரத்தையினுலே எப்படியும் பாடுபட்டுச் சித்தத்தை நிறுத் தினுல் ஞானத்துக்குச் சாதனமுமாகிக் கிருதகிருத்தியனுய்ச் சீவன் முத்திபதம் அடைந்து அகண்டபரிபூரண சச்சிதானந்தத்திற் சேறு வன்.

கு-பு—இது இராகதுவேஷாதிகளுடைய தன்மைகளையெடுத்து உணர்த்தி அவைகளைப் போக்கி யதன் வாயிலாய் முத்தியடையுமாற்றை உணர்த்து வது. இன்ன நூலின் பகுதியென்று தெரியவில்லை. இதன்பின்னர் 149–154 ஏடுகளிலே ஒன்றேடொன்று தொடர்பில்லாத சிலவிஷயங் கள் இருக்கின்றன. அவை எந்தெந்த நூற்களுடையனவோ தெரிய வில்லை.

R. No. 1402.

தாயுமானவர்பாடல் by தாயுமானுர் சுவாமிகள்.
TĀYUMĀNAVARPĀḌAL By TĀYUMĀNARSUVĀMIGAḶ.

Foll. 155–180. Extent, 676 granthas. Printed.

Incomplete. Contains 119 stanzas only.

Same work as that described under No. D. 1354.

(கு.பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1354–ஆம் நம்பர் பிரதியில் வந்துள்ளதேயாகும். இப்பிரதியில் இந்நூலின் சில சில பகுதிகள் மாத்திரம் எழுதப்பட்டிருக்கின்றன. 119 பாடல்களே உள. முற் றுமில்லை. சிதிலமானது.

R. No. 1403.

கைவல்லிய நவநீதம் by தாண்டவராயமூர்த்தி.
KAIVALLIYANAVANĪTAM By TĀṆḌAVARĀYAMŪRTTI.

Foll. 181–200. Extent, 720, granthas. Printed.
Incomplete.
Same work as that described under No. D. 1481.

(கு - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1481 ஆம் நம்பர் பிரதியில் வந்துள்ளதேயாகும். இப்பிரதியில் இரண்டாம் பகுதியாகிய சந்தேகந்தெளிதல் என்றது மாத்திரம் முற்றும் உளது.

R. No. 1404.

நிருமலாநந்தம்.
NIRUMALĀNANDAM.

Foll. 204–205. Extent, 40 granthas.
Complete.
A fragment of a work on the *Advaita Vēdānta.*

Beginning :

நிருமலானந்தம்.

நித்தியமாய் நிர்மலமாய் நிட்களமாய்
நிராமயமாய் நிறைவாய் நீங்காச்
சுத்தமுமாய்த் தூரமுமாய்ச் சமீபமுமாய்த்
துரிய நிறைச் சுடராயெல்லாம்
வைத்திருந்த தாரகமாய்
ஆனந்தமயமாகி மனவாக்கெட்டாச்
சித்துருவாய் நின்றவொன்றைச்
சுகராமப் பேரொளியைச் சிந்தை செய்வாம். (க)

End :

அகரவுயிரெழுத்தனைத்துமாகி வேறாய்
அமர்ந்ததென வகிலாண்டமனைத்துமாகி
பகர்வனவெல்லாமாகி யல்லவாகிப்
பரமாகிச் சொல்லரிய பான்மையாகித்
துகளறு சங்கற்ப விகற்பங்களெல்லாந்
தோயாதவறிவாகிச் சுத்தமாகி
நிகரிற் பசுபதியான பொருளை நாடி
நெட்டுயிர்த்துப் பேரன்பானிணைதல் செய்வாம். (யஉ)

நிருமலானந்தம் முற்றும்.

கு-பு—இது ஒரு பெரு நூலின் பகுதியென்றுதெரிகிறது. பெயர் தெரியவில்லை. 12 பாடல்கள் உள. ஆசிரியர் பெயர் குறிக்கப் பெறவில்லை.

R. No. 1405.

Palm-leaf. 10½ × 1¼ inches. Foll. 159. Lines, 10 on a page. Tamil. Much injured. Old. Extent 2,862 granthas. Printed.

Purchased in 1938-39 from Sri Muttukkumārasvāmi Ōduvāmūrti, Tinnevelly Town.

தேவாரம்.

TĒVĀRAM.

Incomplete.

Same work as that described under No. D. 1130.

(கு · பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1130 ஆம் நம்பர் பிரதியில் வந்துள்ள நூல்போன்றது. இதில் இது முற்றுமில்லை. சிற்சில பதிகங்களே திரட்டியெழுதப்பெற்றுள. ஏடுகள் மிகவும் சிதைந்துள.

R. No. 1406—1407 (one bundle).

Palm-leaf. 18 × 1¾ inches. Foll. 115. Lines, 12 on a page. Tamil. Injured. Old.

Purchased in 1938-39 from Sri Muttukkumārasvāmi Ōduvāmūrti, Tinnevelly Town.

R. No. 1406.

அகப்பொருள் விளக்கம் (உரையுடன்) by நாற்கவிராஜ நம்பி.

AKAPPORUḶVIḶAKKAM (WITH COMMENTARY) By NĀṞKAVI-RĀJA NAMBI.

Foll. 1-73. Extent 3,504 granthas. Printed.

Incomplete. Wants leaves 1-41 in the beginning and some leaves in the end.

Same work as that described under No. D. 69.

(கு - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 69 ஆம் நம்பர் பிரதியில் வந்துள்ளதேயாகும். முற்றுமில்லை. " மெலிவுகண்டு செவிலி கூறல் ", என்ற துறைவரையுமுளது. முதலில் 1—41 ஏடுகளும் இறுதியில் சில ஏடுகளும் இல்லை. ஆகவே முற்றுமில்லை.

R. No. 1407.

நாலடியார் (உரையுடன்).

NĀLAḌIYĀR (WITH COMMENTARY).

Foll. 76-115. Extent, 960 granthas. Printed.

Incomplete. Wants leaves 9-50 in the beginning and some in the end.

Text, same work as that described under No. D. 170.

(கு - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 170 ஆம் நம்பர் பிரதியில் வந்துள்ளதேயாகும். இப்பிரதியில் உள்ள உரை இன்னாரால் இயற்றப் பட்டதென்பது விளங்கவில்லை. பழைய உரையென்று தெரிகிறது. முத லில் 9—50 ஏடுகளும் இறுதியிற் சில ஏடுகளும் காணப்பெறவில்லை.

R. No. 1408.

Palm-leaf 12¼ × 1¾ inches. Foll. 64. Lines, 13—15 on a page. Tamil. Injured. Old. Extent 1,600 granthas. Printed.

Purchased in 1938–39 from Sri Muttukkumārasvāmi Ōduvāmūrti, Tinnevelly Town.

தேவாரம் By திருஞானசம்பந்தர்.
TĒVĀRAM by TIRUÑĀNASAMBANDAR.

Incomplete.

Same work as that described under No. D. 1130.

(கு - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1130 ஆம் நம்பர் பிரதியில் வந்துள்ளதேயாகும். இப்பிரதியில் முற்றுமில்லை. திருவாரூர்ப்பதிகம் வரை யில் உளது. இதன் பின்னர் பலவெற்றேடுகள் உள.

R. No. 1409.

Palm-leaf. 15¾ × 1½ inches. Foll. 149. Lines, 9 on a page. Tamil. Much injured. Extent 3,278 granthas. Old. Printed.

Purchased in 1938–39 from Sri Muttukkumārasvāmi Ōduvāmūrti, Tinnevelly Town.

சேதுபுராணம் by நிரம்பவழகிய தேசிகர்.
SĒTUPURĀṆAM By NIRAMBAVAḺAKIYA DĒSIKAR.

Incomplete, wants 2 leaves in the beginning and some leaves in the end.

A poem, in the *Purāṇa* style, on the religious greatness of Sētu (Śrī Rāmēśvaram and Dhanuṣkōṭi in the Ramnad District).

Beginning :

சேதுபுராணம்.

சொல்வகுத்தலருமையெற் சூழ்ந்திடா
சொல்வகுத்துப் பொருணிலைதோற்றிய
சொல்வகுப்புக் கடந்தவன் ஹெல்புகழ்
சொல்வகுத்தல் சுருதியுமில்லையே. (அ)

திகழுமாக்கதை செய்திடுஞ் செய்யுடான்
பகர்விருத்தமதாகும்படியின் மேல்
நிகரிலாதென்று நின்று நிலாவிடப்
புகலுநூற்பெயர் சேதுபுராணமே. (கூ)

End :

கோனிராமன் குலவுதன்றேற்றமா
மானனன்றன தாவி முருக்கிமுன்
பானுமைந்தன் பறித்த மவுலியை
மேன்மை வீடணன் சென்னிமிலைச்சியே. (உகூ)

துறைகொணீர் மிசைத்தோன்றிய போதுபோற்
சிறையினீங்கிய சீதையுந்தம்பியும்
மறையுணர்த்திடுமாருதிவானரர்க்கு
இறைவனுதியர் யாரும் வளைப்பவே. (௩0)

சித்தர் சாரணர் சேணியிற்கந்தரு
வத்தர் தேவராம்பையர் மாதவர்
மொய்த்து வாழ்த்திட மூவெயில் வாட்டிய
வத்தனென்னவில்லங்கையிலேந்தியே. (௩க)

(கு - பு.)—

இந்நூல் சேதுவின்மாகாத்துமியத்தினை உணர்த்துவதாய் உளது. நிரம்பவழகிய தேசிகரால் இயற்றப்பெற்றது. இது 49 சருக்கங்களான் அமைந்தது. 3438 பாடல்களைக் கொண்டுள்ளது. இதில் 30 ஆம் சருக்கமாய தனுக்கோடிச் சருக்கம் 31 ஆம் பாடல் வரையிலுமே உளது. இது அச்சிடப்பெற்றிருக்கிறது. மிகச்சிதிலமாயது.

R. No. 1410—1413 [one bundle]

Palm-leaf. 4½ × 2 inches. Foll. 123. Lines, 15—18 on a page. Tamil. Injured. Old.

Purchased in 1938–39 from Sri Muttukkumārasvāmi Ōduvāmūrti, Tinnevelly Town.

R. No. 1410.

திருவாசகம் by மாணிக்கவாசகர்.

TIRUVĀCAKAM By MĀṆIKKAVĀCAKAR.

Foll. 1–103. Extent, 1,854 granthas. Printed.

Complete. Same work as that described under No. D. 1150.

(கு - பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1150 ஆம் நம்பர் பிரதியில் வந்துள்ளதேயாகும். முற்றும் உளது.

R. No. 1411.

திருவிசைப்பாதிரட்டு by திருமாளிகைத் தேவர்.

TIRUVIŚAIPPĀTIRAṬṬU By TIRUMĀḶIGAITTĒVAR.

Foll. 104–110. Extent, 96 granthas. Printed.

Complete.

Same work as that described under No. D. 1181.

(கு - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1181-ஆம் நம்பர் பிரதியில் வந்துள்ளதேயாகும். இதில் 35 பாடல்கள் உள.

R. No. 1412.

திருப்பல்லாண்டு by திருமாளிகைத் தேவர்.
TIRUPPALLAṆḌU by TIRUMĀḶIGAITTĒVAR.

Foll. 110–111. Extent, 25 granthas. Printed.

Complete.

Same work as that described under No. D. 1182.

(கு - பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1182 ஆம் நம்பரில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் முற்றுமுளது. சிதைந்துளது.

R. No. 1413.

திருத்தொண்டர்மாலை by குமாரபாரதியார்.
TIRUTTOṆḌARMĀLAI By KUMĀRABHĀRATIYĀR.

Foll. 112–122. Extent, 216 granthas. Not printed.

Complete.

A poem in praise of the *Śaiva devotees*; with didactic observations in the stanzas.

Beginning :

திருத்தொண்டர்மாலை.

தூண்டா விளக்கருள் செய் தொண்டர்த் தொகையின்நம்பி
யாண்டாரந்தாதி முறையினன்பாஞேர்க்—கீண்டியன்ற
வள்ளுவர்நூல் வெண்பாவகுத்துரைப்ப ஞரையூர்ப்
பிள்ளையாரைத் தொழுது பின். (க)

தூயதிருத்தொண்டர்த் தொகை தந்துசுந்தரர்தா
மாயிருஞாலத்தோரை வாழ்வித்தா—ராமதேவன்
கைம்மாறு வேண்டா கடப்பாடுமாரிமாட்
டென்ஞற்றுங் கொல்லோவுலகு. (உ)

End :

பன்னுகயிலைக்குமாரபாரதியா மாமுனிவன்
சொன்ன தமிழ்மாலை துதிப்பதற்கு—மின்னுதலை
யாயிரநாவாயிரத்தோனன்றி யெவர்கொலோ
மாயிரு ஞாலத்தின் மகிழ்ந்து. (௱க

(கு - பு.)—

இந்நூல் " திருக்கயிலாயம் குமாரபாரதியார் ", என்னும் பெரும்புலவரால் இயற்றப்பெற்றதாகும். இது திருத்தொண்டர்த் தொகையின் உட்பொருளைத் தன்னகத்துக்கொண்டு இறுதியடிகளில் திருவள்ளுவரது

திருக்குறள் வெண்பாக்களும் அமையப் பெற்றுப்பல்வேறு நீதிகளையும் உணர்த்துவதாய் 101 வெண்பாக்களான் அமைந்துளது. இறுதிப்பாயிரச் செய்யுளை நூலாசிரியரது மாணாக்கர் அல்லது அவரிடத்தில் அன்பு பூண்ட மற்றொருவர் இயற்றியிருத்தல் வேண்டும். அச்சிடப்பெறவில்லை. நடை நன்றாகவுளது. இறுதியில் ஓரேட்டில் "திருவெழுகூற்றிருக்கை" உளது. ஏடுகள் சிதைந்துள.

R. No. 1414—1420 (one bundle).

Palm-leaf. 10¾ × 1¼ inches. Foll. 83. Lines 8 on a page. Tamil. Injured. Old.

Purchased in 1938–39 from Muttukkumārasvāmi Ōduvāmūrti, Tinnevelly Town.

R. No. 1414.

திருமந்திரமாலை by திருமூலர்.

TIRUMANTIRAMĀLAI By TIRUMŪLAR.

Foll. 1–17. Extent, 272 granthas. Printed.

Incomplete.

Same work as that described under No. D. 1184.

(கு - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1184 ஆம் நம்பர்பிரதியில் வந்ததேயாகும். இதிற் சில பாடல்களே உள.

R. No. 1415.

முனிமொழி.

MUNIMOḺI.

Foll. 18–24. Extent, 104 granthas. Not printed.

Complete.

A work on the *Śaiva Siddhānta*. The author's name is not stated.

Beginning :

முனிமொழி.

ஆதரவதனால் வந்தவனுபோகத்
  தீர்வை முன்னோர்
ஓதிய பொருளான்மாந்தர்
  உள்ளிருளகற்ற வேண்டிச்
சோதிசேர்விளக்கதாகச்
  சொல்லியான் தொடங்குகின்றேன்
கோதிலாவமுதந்தந்த
  குருமுனியருளைக் கொண்டே. (க)

End :

இக்குடனிரசம் போன்றும்
எள்ளுடனெண்ணெய் போன்றும்
மிக்கபூமணமும் போனறும்
விளக்குடன் ஒளியும் போன்றுந்
தொக்குடன் பரிசம் போன்றுந்
துடிப்பொடு சத்தம்போன்றும்
அக்கினிக்கண்ட வீசன்
அருளினைப் பெறுவார்தானே. (உகூ)

அருளுயிரடைவேதென்னில்
ஆவினெய் திரியுமற்றுற்
றெருளுறு வொளிவடைந்த
செய்தியே போலதாகும்
மருளுறு மலங்களற்றல்
மன்னுயிர் பரத்திலெய்தும்
பொருளுற வைத்தடிக்கீழ்ப்
போற்று மாதரவினலே. (கூ0)

முனிமொழிமுற்றும்.

(கு - பு.)—

இது சைவசித்தாந்தத்தைச் சார்ந்ததெனத் தெரிகிறது. இன்னு ரால் இயற்றப்பெற்றதென்பது தெரியவில்லை. முப்பது செய்யுட்களைக் கொண்டுளது.

R. No. 1416.

ஔவைக்குறள் (ஞானக்குறள்) by ஔவையார்.

AUVAIKKUṞAḶ (ÑĀNAKKUṞAḶ) By AUVAIYĀR.

Foll. 25 to 44. Extent, 150 granthas. Printed.
Contains Adhikāras 1–19.
Same work as that described under No. D. 1936.

(கு - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1936 ஆம் நம்பர் பிரதியில் வந்துள்ளதேயாகும். இப்பிரதியில் 1—19 அதிகாரங்களேயுள. அச் சிடப்பெற்றிருக்கிறது.

R. No. 1417.

திருவுந்தியார் by உய்யவந்ததேவ நாயனர்.

TIRUVUNDIYĀR By UYYAVANDADĒVANĀYANĀR.

Foll. 45—51. Extent, 63 granthas. Printed.
Complete.
Same work as that described under No. R. 7 (*c*).

(கு-பு.)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 7 (c) நம்பர் பிரதியில் வந்துள்ளதே யாகும். மூலமாத்திரமுளது.

R. No. 1418.

பஞ்சாக்ஷரம்.

PAÑCĀKṢARAM.

Foll. 53 and 54. Extent, 20 granthas. Not printed.

Incomplete.

A work on the *Śaiva Siddhānta,* explaining the Pañcākṣara in prose. The author's name is not stated.

Beginning :—

பஞ்சாட்சரம்.

அ. உ. ம். 0—இது மூலபஞ்சாட்சரம். சி. வ. ய. ந. ம. இது சிவபஞ்சாட்சரம். ல. வா. ய. அ. இது பூத பஞ்சாட்சரம். ? ஆகப் பஞ்சாட்சரம் ௰௫ ஆணவங்கூட்டி ௰௬., இதினில் விபரம் :—

End :

சிவயநம. இதன் பயன்.—சிகாரத்திலே அகாரம் வைத்துச் செபிக்க வும். வகாரத்திலே உகாரம் வைத்துச் செபிக்கவும். யகாரத்திலே மகாரம் வைத்துச் செபிக்கவும்.

அ உ ம
சி வ ய நம :—

(கு - பு.)—

இந்நூல் சைவசித்தாந்தத்தைச் சார்ந்ததாய் அம்மதத்தவர் பஞ்சாட் சரம் செபிக்கும் முறையினையெடுத்து உணர்த்துவது. இது முற்றுப் பெற்றதென்றே தெரிகிறது. இதனைத் தொகுத்து எழுதியவர் இன்னு ரென்று தெரியவில்லை.

R. No. 1419.

தேவாரம் by திருநாவுக்கரசு நாயனார்.

TĒVĀRAM By TIRUNĀVUKKARAŚUNĀYANĀR.

Foll. 55—64. Extent, 100 granthas. Printed.

Incomplete.

Same work as that described under No. D. 1130. Contains only the Tiruvālavāyttiruttāṇḍakam and Tiruppūvaṇattiruttāṇḍakam by *Tirunāvukkaraśu Nāyanār.*

(கு - பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1130 ஆம் நம்பர் பிரதியில் வந்துள்ள தேயாகும். இதில் திருநாவுக்கரசு நாயனார் இயற்றிய திருவால வாய்த்திருத்தாண்டகம், திருப்பூவணத் திருத்தாண்டகம் என்ற இவ்விரு பதிகங்கள் மாத்திரம் இருக்கின்றன. சிதைந்துளது.

R. No. 1420.

ஆருதாரம்.
ĀṚADHĀRAM.

Foll. 65—83. Extent, 228 granthas. Not printed.

Complete.

A work on the *Yōga* philosophy, explaining the six *Ādhāras*, namely, (1) *Mūlādhāra*, (2) *Svādhiṣṭhāna*, (3) *Maṇipūraka*, (4) *Anāhata*, (5) *Viśuddhi* and (6) *Ājñā* in prose. The author's name is not known.

Beginning :

ஆருதாரம்.

மூலாதாரமாவது, நாற்கோணமாய், அதன் நடுவே பிறைவடிவாய், அதன்நடுவே திரிகோணமாய், அதன் நடுவே நாலிதழையுமுடைய தாமரையாய், அந்த நால் இதழிலே நிற்கும் அட்சரம் வ. ஶ. ஷ. ஸ என்று பீசமுமாய் தாமரை வட்டத்தின் நடுவே றீங்காரமுமாய் அதன் நடுவே ஓங்காரமுமாய், அதன் நடுவே குண்டலியாய், அதன் நடுவே கணபதியும் வல்லபை சத்தியும் எழுந்தருளியிருக்கும்.
வேறு சுவாதிட்டானமாவது :—

End :

சந்திரமண்டலமாவது :—கபாலத்தொடுக்கமாய் வட்டமாய் அகார உகார வீசம் நடுவேயுடையதாய் அதிலே பரமதேவனும் பராசத்தியுமாய் எழுந் தருளியிருக்கும். வேறு ஆகத்தரிசனம் பதிமூன்றும் (?) இதற்குப் பிரமாணம்.

சென்னவீரர்பாதமே துணை.

(கு. - பு.)—

இது சைவ சித்தாந்தத்தைச் சார்ந்ததாய் யோக விஷயத்திலான மூலாதார முதலான ஆருதாரங்களுடைய இலக்கணங்களையும் மற்று முள்ள சில விஷயங்களையும் உணர்த்துகின்றது. இயற்றியவர் இன்னு ரென்று தெரியவில்லை. மிகச் சிதைந்திருக்கின்றது. திருமூலர் ஆரு தாரத்தினை யாதாரமாகக் கொண்டு இயற்றப்பெற்றது போலும். இதற்கு மேற்கோளாகத் திருமூலர் திருமந்திரத்துச் செய்யுட்களில் சில காட்டப் பெற்றுள. இன்னும் சில வேறு நூற்பாடல்களும் உள.

R. No. 1421.

